விவேகபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு''.—திருவள்ளுவர்.

தொகுதி 11

12

1918-ம் ௵ ஜூலை ௴—1919-ம் ௵ ஜூன் ௴

1918—19 1919—20

" விவேக போதினி'' ஆபீஸ்
மயிலாப்பூர், சென்னை.

...ட் ரிஜிஸ்டர் செய்தது] [விலை ரூபாய் 5.

அட்டவணை

பக்கம்.

மதவிஷயம்

நஞ்சுண்ட நாதன் ... 2
வாயிடத்துலகு ... 38
பிள்ளைக் குறும்பு ... 70
பால லீலை ... 102
பாம்பின் வாய்பிழைப்பு ... 134
பலவத்தில் ஒற்றுமை ... 166
மதம் ... 175
பண்ணிசை பரதம் ... 198
அன்பினிறை ... 230
தெய்விகத் தோற்றம் ... 262
தெய்விகக் காட்சி ... 294
ஊடலுவகை 326, 358

பெரியோர் சரிதை

கோபால் ராவ் ஹரிபீடே ... 6
ஆறுமுக நாவலர் ... 75
செட்டிபணியம் வீரவல்லி அரங்காசாரியார் 105
சிவஞான சுவாமிகள் ... 137
மஹாராஜா ஸர் ராமவர்மா, ஜீ.ஸி.எஸ் ஐ. 169, 203
கன்-ப்-யூஷஸ் 235, 267, 301

ராஜாங்க விஷயம்

இந்திய பூர்வ அரசியல் ... 15
யுத்தம் ஒழிய வழியுண்டா? ... 337

தேசாபிமானம்.

இந்தியரின் வீரத்தன்மை ... 110
இந்திய வீரத்தாய்மார் ... 141

சரித்திரம்

சமுத்திரகுப்தன் 10, 51

சரித்திர ஆராய்ச்சி

சென்னையின் வரலாறு 114, 144

கைத்தொழில்

சர்க்கரைக் கைத்தொழில் ... 369

சக்திதத்வ சாஸ்திரம் (இயற்கை)

மழை, பனி ... 125
நிலக்காற்றும் கடற்காற்றும் ... 138

பக்கம்.

சுகாதாரம்

குழந்தைகளும் பாலுணவும் ... 140
தேகப்பயிற்சியும், ரக்தவிருத்தியும் ... 173

தாவர சாஸ்திரம்

செடிகளின் உயிர்வாழ்க்கை 210, 244

பிரகிருதி சாஸ்திரம்

சூரியனுடைய சக்தி ... 329

கிருஷி சாஸ்திரம்

கிருஷிகருக்கு உதவும் பக்ஷிகள் 13
புளியம் விதையை கால்நடைகளுக்குத் தீவனமாய் உபயோகித்தல் 41
நிலத்தன்மைப் பரிசோதனை ... 78
மாமரம் பயிர்செய்தல் ... 178
வனங்களின் உபயோகம் ... 239
தென் இந்தியாவில் தொழு எரு ... 306

கணித சாஸ்திரம்

ருஷ்யர்களின் பெருக்கல் முறை ... 21

நமது பண்டிகை

நவராத்திரி விழா ... 82

மொழி ஆராய்ச்சி

தாய்ப்பாஷையில் கல்விப் பயிற்சி ... 45
கடை எழு வள்ளல்கள் ... 271
வான்மீகரும் தென்னுடும் 297, 333
கந்த ரலங்கார ஆராய்ச்சி ... 363

வியாஸங்கள்

தைர்யம் ... 8
தர்மம் ... 20
மத்ஸ்ய மனிதர், மத்ஸ்ய ஸ்திரீகள் ... 2

செய்யுள்

விடாமுயற்சி ...
செல்வச் செருக்கு ...
தாயின் அன்பு ...
கார்காலம்
வஸந்த காலம் ...

	பக்கம்.
போகத்தியனுர்	... 165
முருகன் துதி	197, 229
ஸ்ரீரவிந்திரநாத தகூருக்குக் கூறிய வரவேற்பு வாழ்த்துரை	... 242
லக்ஷ்யபேதம்	261, 293, 325, 357

சரித்திர சம்பந்தமான கதை

வஸந்த மந்திரம்	22, 34, 53, 85, 117, 149, 185, 216, 248, 277, 311, 341, 373

நமது சிறு கதைகள்

உண்மைத் துறவு	... 17
நன்னெறி	59, 89, 121, 153, 181
மாங்கல்ய ரக்ஷணம்	... 213
அமுதசுரபி	... 245

சிறுவர்களுக்கான பக்கங்கள்

கற்பலகையின் வரலாறு	... 26
அன்பெனும் வலிய ஆயுதம்	... 62
பொய்சொன்னவாய்க்குப் போசனம் கிடையாது	... 95
குழந்தையை வளர்த்த பெண் ஓநாய்	... 127
ஆஸாம், அல்லது கடவுளும் அவர் சிருஷ்டியும்	... 155
பூனையால் வந்த பெருங்கேடு	... 190
எனக்கு வேண்டியதில்லை	... 223
ஒரு நிமிஷந்தான்	... 254
உத்தம மாணவனும் ஏகலைவன்	... 286
வரவுக்கேற்க வாழ்	... 319
ஸேவை	... 350
கூட்டு வியாபாரம்	... 383

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

தமயந்தி (16) தப்பு	... 29
(17) சிந்தனை	... 64
(18) வரம்	97, 129, 162
(19) தப்பு	... 192
(20) காட்சி	... 224
விடைகொடுத்தல்,	... 256
(21) வெற்றி	... 288
(22) மீட்சி	... 385
வரவுக் கேற்க வாழ்	... 319
இரு பெண்களும், இரு குணங்களும்	... 352

பிரபஞ்ச வர்த்தமானம்

இந்திய ராஜாங்கச் சீர்திருத்தங்கள்; பொன் மோகரா	... 33
உலகத்தில் பாஷைகள் ; வங்காளத்தில் துணிப் பஞ்சம்	... 34
இந்திய ஜாதீய மஹாநாடு	... 67
பத்திரிகை ஆசிரியர்களின் ஐரோப்பிய ஆகமனம் ; ஆயுர்வேத யூனனி வைத்திய விஷயம்	... 68
சென்னைப் பென்ஸில் தொழிற்சாலை ; சிறிய நிலச்சுவான்தார்களுடைய மசோதா ; சென்னையில் டிராம் வண்டிகளின் நிறுத்தம்	... 99
சென்னையில் கொள்ளை; ஸர் ரதன் டாடாவின் மரணம்	... 100
பிரிடிஷ் ஸாம்ராஜ்யம்; இந்தியர்களுக்கு ராணுவத்தில் உத்தியோகங்கள்; சென்னையில் கபவாத ஜுரம்	... 132
யுத்தமுடிவும் சமாதானச் சபையும்; இங்கிலாந்தில் இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள்; ஆகாய விமானப் பிரயாணம்	... 164
டெலிபோனுல் செவிடு;தீக்குச்சித்தொழில்; சர்க்கரைத் தொழில்;கடல் யாத்திரை	... 196
லார்டு ஸின்ஹா இந்திய உபமந்திரி; ஸினிமொடோகிராப்; இலவசக் கல்வி, ராஜகுமார கலாசாலை	... 228
இந்தியாவில் நார்த் தொழில்	259
எல்லர் இந்தியா ஆயுர்வேத மஹாநாடு; சௌசவு சாலை; விவசாய நிதிகள்	... 260
இந்தியா கவர்ன்மெண்டின் அரசிறைக் கணக்கு; கொச்சி திவான்ஜீ	... 291
ஆப்கானிஸ்தான் அமீர்; சென்னை கவர்னர்	... 292
சென்னைப் புதிய கவர்னர்; பால் வசதி	... 323
வி. எஸ். அநந்தராமய்யரின் தேஹ வியோகம்;ஆயுதச்சட்டம்;நீதி இலாகா	... 324
மாஜி திவான்ஜி சங்கரய்யாவின் தேக வியோகம்; சென்னையில் ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா	... 355
ஜெயில் கமிட்டி; ஐக்கிய மாகாணத்தில் ஓர் புதிய பத்திரிகை; ஹிந்தி ஸாஹித்திய ஸம்மேளனம்	... 356
இந்தியப் பஞ்சாலைகளின் நிலைமை;	... 378
அமெரிக்க சேனையில் இந்திய வீரர்கள்	... 387
ஜப்பானியரின் ஊக்கம்; ஆயுர்வேதத்தின் மகிமை; ஓர் கொடையாளரின் மரணம்; ஓர் சிறுவர் கண்டுபிடித்த அதிசயங்கள்	... 388

கல்விக் குறிப்புகள்

மாணவர்களின் பரீக்ஷைகள்; பம்பாய்க் கல்விச் சபை	... 24
இந்தியாவில் கல்வி அபிவிருத்தி; இலவச உயர்தரக் கல்வி	... 25
மைசூரில் கீழ்தர ஜாதியாரின் கல்வி	... 42

	பக்கம்
பர்மா ஸர்வ கலாசாலை; உஸ்மானிய ஸர்வகலாசாலை; பிரதம உபாத்தியாயர்களின் மஹாநாடு ...	43
கல்வியும் ஐரோப்பிய யுத்தமும்; ஸ்திரீகளும் வித்யா இலாகாவும் ...	44
சென்னையில் வித்யா இலாகா அதிகாரிகளின் மாறுதல் ...	80
அலகாபாத்து சர்வ கலாசாலை; சென்னை சட்ட சபையில் கல்வி விஷயமான பிரஸ்தாபம் ...	81
பம்பாயில் கல்வி விஷயமான தர்ம ஸ்தாபனம்; இந்தியா கவர்ன்மெண்டும் பிரதமக் கல்வியும் ...	148
மஹாமஹோபாத்யாய உ. வே. சுவாமிநாதையரவர்கள் பென்ஷன் பெறுதல்; உபாத்யாயர்களின் சபையின் நடவடிக்கைகள் ...	309
பம்பாயில் உபாத்தியாயர்களுக்குப் பஞ்சப்படி ; 1912-1917 வருஷங்களில் இந்தியாவில் கல்வி அபிவிருத்தி ...	310
ஸ்ரீங்கேரிப் பளளிக்கூடம் ..	311
மாகாணக் கல்வி மஹாநாடு ...	349
பஞ்சமர் கல்வி வசதி; ஆசார்ய ஆசிரமம், ...	350
நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி; கல்விக்கு ஓர் ஸ்ரீமதியின் நன் கொடை; பள்ளிச் சிறுவர்களின் சுகாதாரம் ...	372

சிறு குறிப்புகள்

ஒரு தமிழ் அபிமானியின் மரணம் ...	32
விஷ்ணு சிவ ஒற்றுமை ...	202
பக்தி செய்வதற்கு நம்பிக்கையே காரணம்	212

சித்திரப்படங்கள்

துக்க நிவர்த்தி ...	1
கோபால ராவ் ஹரிபீடே ...	7
செட்டிபணியம் வீரவல்லி ரங்காசாரியார்	145
சென்னை கார்பரேஷன் கட்டிடம் ...	145
லார்டு ஸின்ஹா ...	197
ஸ்ரீரவீந்திர நாத தகூர் ...	242
பிகானீர் மஹாராஜா ...	261
மஹாமஹோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் ...	293
கனம் ஸர் அப்துர் ரஹீம் ...	352
லார்டு வில்லிங்டன், லேடி வில்லிங்டன் ...	357

Annual Bound Volumes of

THE "Viveka Bodhini"

Vol. I. Pages 384
From July 1908 to June 1909

Vol. II. Pages 396
From July 1909 to June 1910

Vol. III. Pages 464
From July 1910 to June 1911

Vol. IV. Pages 537
From July 1911 to June 1912

Vol. V. Pages 512
From July 1912 to June 1913

Vol. VI. Pages 480
From July 1913 to June 1914

Vol. VII. Pages 480
From July 1914 to June 1915

Vol. VIII. Pages 436
From July 1915 to June 1916

Vol. IX. Pages 445
From July 1916 to June 1917

Vol. X. Pages 372
From July 1917 to June 1918

Vol. XI. Pages 388
From July 1918 to June 1919

☞ Each volume contains excellent original contributions from well-known writers on various interesting subjects and is profusely illustrated. Only a few sets are available. Please apply sharp.

Price of Each Volume Rs. 5

Address :— MANAGER, "VIVEKA BODHINI", MYLAPORE, MADRAS.

THE "VIVEKA BODHINI"

IN ITS 12th YEAR OF PUBLICATION

The "Hindu" writes.—A well conducted Tamil monthly. The articles cover a wide range of subjects of absorbing interest to the readers. Almost all the articles are written in easy, simple and direct Tamil and are entirely free from pedantry. The journal fulfils very ably the function of diffusing much useful knowledge among the Tamil people.

The Hon'ble Mr. Justice, T. V. Seshagiri Ayyar.—The subjects dealt with are of consuming interest to the reading public. I gladly acknowledge the valuable services rendered to the cause by publications like the "Viveka Bodhini". I have taken the Journal ever since its first number was published: and I can speak to the good work it has done.

M. Ramaswami Ayyangar Esq., Inspector of Schools.—Viveka Bodhini is a very instructive Monthly dealing with Nature-Study, Hygiene, Education and other useful subjects and **will be useful to teachers in Elementary Schools.**

Rao Bahadur, Mr. A. C. Pranatartihara Ayyar, I. S. O., Retired Inspector of Schools.—The Viveka Bodhini is a journal conducted on right lines. The matter is both interesting and instructive and so distributed as to suit all classes of the Tamil-reading public. * * A special feature of the journal is, I am glad to note the attention given to the improvement of scientific knowledge among the people.

Rao Saheb Mr. T. V. Sivakumara Sastri, Principal, Teachers' College, Saidapet—"The articles are very instructive and embrace a variety of useful topics. You deserve to be specially complimented upon the articles on scientific subjects that you are making available to the general public. I wish you and your magazine every success.

K. V. Subbaiya Aiyar Esq., M.A., L.T., Assistant Inspector of Schools.—The articles in this Journal are all written in *very simple and idiomatic style and deal with a variety of highly interesting and instructive subjects and I know of no other Journal that is at once so cheap and so good as your Viveka Bodhini.*

M. S. H. Thompson Esq., B. A., A. C. P., Inspector of European and Training Schools.—* * interesting and instructive. * * The Magazine is written in simple but good Tamil. The publishers deserve every encouragement.

"சுதேசமித்திரன்."—* * விவசாயம், கல்வி பூர்வீகர்களின் சரித்திரம், தற்காலத்துப் பிரசித்தி பெற்றவர்களின் சரித்திரம், தற்காலத்து யுத்த விஷயம், ஹிந்துக்களின் விரதாதிகள், சிலாசாஸன ஆராய்ச்சி, தமிழ் ஆராய்ச்சி, ஸ்தல சரித்திரங்கள் பட்சிகளின் சாஸ்திரங்கள் முதலிய தலைப்புக்களின் கீழ் அநேக அருமையான வியாஸங்கள் எழுதப்பட்டு இந்த சஞ்சிகை விளங்குகிறது. * * இப்போதினியை நம் தமிழுலகினர் நன்கு போஷிப்பாராக.

The "Madras Mail" writes.—The 'Viveka Bodhini, the excellent Tamil monthly of Madras, has maintained its usual standard of excellence. * * Almost all the articles are written in simple and chaste Tamil. **There is much in the journal to supply food for teachers of Elementary Schools.**

"The "Indian Patriot" writes.—The "Viveka Bodhini" has maintained its usual standard of excellence. Almost all the articles are written in simple and elegant Tamil and are of much use to every home. We can recommend that it can be safely placed in the hands of the young and the old alike.

The "New India" writes.—The Viveka Bodhini is a very useful and interesting publication. The noteworthy feature of the publication is "the richness and variety of the subjects" served to the public. * * Most of the articles are written in easy elegant Tamil.

Sir P. S. Sivaswami Aiyar, K. C. S. I., C. I. E.—* * The articles are written in an easy, readable style and deal with a variety of interesting subjects.

Hon'ble Mr P. Ramanathan, Colombo.—* * The articles appearing in it are carefully considered and written in simple and chaste Tamil. * * I wish you success and prosperity in your endeavour to enlighten and uplift the people.

N. Vijayaraghavan Esq. Dy., Accountant General.—I have been a regular reader of the "Viveka Bodhini" from the beginning and think that it is just what a popular journal ought to be. The variety of subjects it treats of and a certain level of excellence in easy style of writing conspicuous in it appeal readily to people whose general experience of average Tamil Journals would ordinarily lead them to expect either mysticism and pedantry on the one hand or vulgarity and puerility on the other.

மஹிபாலன்பட்டி, ம-ா-ா-ஸ்ரீ, வித்வான் மு. கதிரேசன் செட்டியாரவர்கள்.—** விவேக போதினி தக்க பண்டிதர்களாலும் பெரியோர்களாலும் மதிக்கப்பெற்ற தென்பதும், நவீன சாஸ்திரங்களைப் பற்றியும் பல அரியவிஷயங்களைத் தாங்கி வருகின்ற தென்பதும் அதன் ஆரம்பகாலத்தில் இரண்டு வருஷ சஞ்சிகைகளைப் படிக்கும்போழுதே அறிந்துளேன். "விவேக போதினி" எவ்வாற்றானும் சிறந்ததொரு சஞ்சிகை யென்பதென் கருத்து.

"இந்து நேசன்."— படித்த தமிழ் மக்களின் விசேஷ ஆதரவுக்கும், நன் மதிப்புக்கு முரியதாயிருந்து வருவதோடு, இது தான் கொண்டிருக்கும் பெயருக்கேற்க, படியாத தமிழ் மக்களுக்கு விவேகத்தை நன்கு போதிக்கும் பத்திரிகையாகவே விளங்கி வருகிறது. * * இப்பத்திரிகை நீண்ட காலம் நடந்து தமிழ் மக்களுக்குப் பெருத்த நன்மையைச் செய்யவேண்டு மென்பதே நமது விருப்பமாகும்.

Annual Subscription:— Inland Rs. 4 : : Foreign Rs. 5 *(Post free)*

துரைத்தனத்தார் = **மாகதவல்லி** = அங்கீகரித்தது

ஒரு மிகச் சிறந்த நாவல்

எளிய நடையில் மிகவும் அழகாய் எழுதப்பட்டது. விலை அணா 10

இதைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

ஸ்ரீமான் தி. செல்வக்கேசவராய முதலியாரவர்கள், எம். ஏ.—** மரகதவல்லி உண்மையில் நடந்தவாறு எழுதப்பட்டிருக்கிறது. சோகரசம் கலந்து என் கண்களில் நீர் வடியச் செய்தது. நான் பார்த்த அற்புதமான இரண்டொரு கதைகளில் இது ஒன்றாகுமென உறுதியாய்க் கூறுவேன்.

ராவ் பஹதூர் ஆ. தனக்கோடி முதலியாரவர்கள்.— * * இந்நூல் ஏழை, பணக்காரர், சிறியவர் பெரியவராகிய ஒவ்வொருவரிடத்தும் இருந்தே தீரவேண்டும்.

ஸ்ரீமான் எஸ், அனவாத விநாயகம்பிள்ளை அவர்கள், எம்.ஏ.,எல். டி.—** கதையமைப்பு நவீனகலக்ஷணத்தை முழுதும் அனுசரித்ததாயிருக்கின்றது. இந்நூல் பெண்களெல்லாம் கற்றுணரத்தக்கது.

திவான் பஹதூர், கனம் ஏ. சுப்பராயலு ரெட்டியாரவர்கள்.—** நம் பெண்மக்கள் படிக்கவேண்டிய கதை இதுவே யாகும். நடையும் கருத்தும் பரிசுத்தமாயும், படிப்பவர் மனம் பதியுமாறும் எழுதப்பட்டிருக்கிறது.

ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் திவான் பஹதூர் ஸ்ரீமான் டி. சதாசிவ ஐயரவர்கள்.— இனிய தமிழி லெழுதப்பட்டு நல்லவருடைய கூட்டுறவு துன்மார்க்கரைத் திருத்தவல்லதென்பதை விளக்குகிறது. இதில் ஆய்ந்தோய்ந்து பாராது அவசரத்தில் கொள்ளும் போலிக்கொள்கைகளை நீக்கி, நம்மவரிடமுள்ள உண்மையான குறைகளைக் காட்டியிருக்கின்றன.

ராவ் ஸாஹேப் டி. இராமகிருஷ்ண பிள்ளை அவர்கள், பீ. ஏ.—** கதை அற்புதமாயும், நடை இனிமையாயுமிருக்கிறது. இத்தகைய நூல்களே நாளும் நாளும் பரவவேண்டுமென்பது என் விருப்பம்.

ராவ் பஹதூர் எம். ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.—மரகதவல்லி மிக்க அற்புதமாயும், உண்மையில் நடந்தவாறும் எழுதப்பட்டுள்ளது.

திரு. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்.—('கமலாக்ஷி' நூலாசிரியர்.)—** தங்கள் அற்புதமான கதையைப் படித்தபோது நான் ஆனந்தக்கடலில் மூழ்கி உள்ளம் பரவசமானேன்.

ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள், பீ. ஏ.—* *. காலஞ் சென்ற மிஸ்டர் ப. சி. கோவிந்தசாமி ராஜா இயற்றிய மரகதவல்லி என்னும் கற்பனைக் கதையைப் படித்துப் பார்த்தேன். இதுவரை வெளிவந்துள்ள தமிழ்க் கற்பனைக் கதைகளுள் மரகதவல்லிக்கு ஈடானவை ஒன்றுமில்லையென்றே சொல்லவேண்டும். கதை இனிமையாயிருப்பதுடன் அதனால் போதிக்கப்படும் நீதி மிகச் சிறந்தது. இப்புத்தகம் எளிய நடையில் எழுதப்பட்டிருப்பதோடு, ஸெகிண்டரி பள்ளிக்கூடங்களில் உயர்வகுப்புகளுக்கு உபபாடமாக வைக்கத் தகுந்ததாயிருக்கிறது.

யதார்த்த பாஸ்கரன்.—இஃது இருபாலார்க்கும் பயன்தரத்தக்க நல்ல நடையி லெழுதப்பட்டுள்ளது. கதையோ படிப்பவர் மனதைக் கவரும் தன்மையது.

எம். சிங்காரவேலு முதலியாரவர்கள், (பாடசாலை இன்ஸ்பெக்டர்.)—நமது சிறுவர் சிறுமியரேயன்றிப் பெரியோரும் பலகால் படிக்க வேண்டிய நூல் மரகதவல்லியே என்று நான் திடமாய்க் கூறுவேன். தெளிவும், பரிசுத்தமும் அழகும் கூடிய செந்தமிழில், உயர்ந்த நீதிகளைத் தக்க உதாரணங்களால் காட்டி உண்மையில் நடந்தவாறு எழுதப்பட்டிருக்கிறது. வருணனையும் விஷயங்களும் உள்ளபடியே அத்தனை அற்புதமாயிருக்கின்றன. மரகதவல்லி தற்காலத்தில் வெளியாகிய பல நூல்களிற் சிறந்து நம் தமிழுக்கு ஓர் ஆபரணம் போன்றது. இது ஒவ்வொரு வீட்டிலும் எல்லா ஆணும் பெண்ணும் சிறியவராயினும், பெரியவராயினும் பல முறை படிக்கவேண்டிய நூலாகும்.

பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள்.— ** மரகதவல்லி உயர்ந்த நீதிகளைப் பொருந்தி இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது.

வி. கனகசபைப் பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்.— * * * நடை இனியதும் பரிசுத்தமாயிருப்பதுடன், கதை இனிப்பாயும் அழகாயுமிருக்கிறது இதை வாசிக்கும் ஆண் பெண் பயனடையத் தவறார்.

விலாஸம் :—மானேஜர், "விவேக போதினி", மயிலாப்பூர், சென்னை.

துரைத்தனத்தார்= **பஞ்சாத்தினம்** = அங்கீகரித்தது.

(மரகதவல்லி ஆசிரியர் ப. சி. கோவிந்தசாமி ராஜா அவர்கள் செய்தது)

ஹைகோர்ட் ஜட்ஜ் திவான் பஹதூர்

கனம் ஸி. வி. குமாரசாமி சாஸ்திரியாரவர்கள் முன்னுரையுடன் கூடியது.

5 அழகிய ஆப்டோன் படங்களுடன் விலை அணு 12.

"விவேக போதினி" சந்தாதார்க்கு மாத்திரம் அணு 10.

இதைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்

The Hindu.—The book gives a clear account of the five great Hindu ideals of feminine virtue Seetha, **Sakuntala, Rukmini, Damayanti and Savitri.** It is a book which inculcates with illustrations the sacred principles of truth, charity, chastity and devotion to all that is good and noble. * * The get-up of the book is distinctly good.

The Madras Mail.— * * The Hon'ble Dewan Bahadur C. V Kumaraswami Sastri, in an interesting foreword, points out how Sita, Sakuntala, Rukmini, Damayanti and Savitri, have for centuries been influencing and shaping the character of Indian women, and brightening their life's journey. The book has been approved by the Madras Text-Book Committee for use in Schools and *it ought to be of peculiar interest to the youth of India.*

New India.—* * Pancharatnam or "the five gems" is a book recently issued by the "Viveka Bodhini" Office, Mylapore, cotaining interestnig sketches of these heroines. The Hon'ble Mr. Justice Kumarasami Sastri writes a foreword, in the course of which he recommends the book to the young of both sexes in particular and to the public in general. We have no doubt that those for whom the book is intended will find it interesting reading.

S. Anavaratavinayakam Pilali Esq., M. A., L. T.— * * *What struck me as a good feature in the presentation of the lives was that the author had removed from them all that was supernatural.* * * *Another good feature of the book is that it is free from errors and written in an elegant style and as such is well adapted for use in Schools as a Text-book.*

P A. Subramania Aiyar Esq., Head Master, Hindu High School, Triplicane. —* * *it is written in very good style* and that the presentment of the lives and doings of the heroines is such as to attract and hold the attention of both boys and girls. *I have prescribed it as Text-book* for non-detailed study.

T. Kanakasundaram Pillai Esq., B. A.—* * The accounts given of the heroines appear to be on the whole on modern lines. The book is *written in good, readable Tamil and may be prescribed for non-detailed study in the higher forms* of Secondary Schools.

தேசபக்தன்.— * * பஞ்சாத்தினத்தின் உள்ளுறை பொன்னேபோல் போற்றத்தக்கது. இந்நூல், படிப்போர் உள்ளங் கவருமாறு செவ்விய நடையில் எழுதப்பட் டிருக்கிறது.

சுதேச மித்திரன்.—இனிய நடையில் யாவரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு எழுதப்பட்டிருக்கிறது. அங்கங்கே உருவப்படங்களும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட் டிருக்கின்றது.

இந்து நேசன்.—இவ்வினிய புத்தகம் ஸ்திரீ ரத்னங்கள் ஐவரின் சரித்திரத்தை அழகாக எடுத்துரைக்கின்றது. இவர்களுடைய சரித்திரங்களினால் ஸத்தியப் பிரவர்த்தி, தர்மசிந்தனை, கற்பு முதலிய அரிய குணங்கள் போதிக்கப் படுகின்றமையால், இவைகளை நமது சிறுவர்களுக்கு இளம் பிராயத்திலேயே கற்பிப்பது பெருநன்மை விளைக்கும்.

விலாஸம்:—மானேஜர், "விவேக போதினி" மயிலாப்பூர், சென்னை.

Moral Tales for the Young :: Approved by the Text-Book Committee

Aryamatha - - - - Upakhyanam

Part I, As. 8 :: Part II, As. 10

ஆரியமத உபாக்கியானம்

முதல் பாகம் அணா 8 :: இரண்டாம் பாகம் அணா 10

துரைத்தனத்தார் அங்கீகரித்தவை.

54-சிறந்த நீதிக் கதைகள் கொண்டது

யாவராலும் கொண்டாடப்பட்ட மிகச் சிறந்த நூல்கள்

திருநெல்வேலி, ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களால் இயற்றப்பட்டு, முதல் பாகத்திற்கு ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், கே. ஸி. எஸ். ஐ. அவர்களாலும், இரண்டாம் பாகத்திற்கு ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் டி. வி. சேஷகிரி ஐயரவர்களாலும் சிறந்த முகவுரைகளுடன் கூடியவை. ஒவ்வொரு பாகத்திற்கும் கண்ணைக் கவரும்படியான அநேகம் அழகிய சித்திரப் படங்கள் உண்டு.

I, II-ம் பாகங்களைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்

Sir P. S. Sivaswami Aiyar, K. C. S. I., C. I. E. * * * *The stories are such as to appeal to all boys and are told in an easy popular style. The work is very well adapted for the lower forms of our schools.*

The Madras Mail.—"*The book is well adapted for use in the lower forms of schools as a Text Book of Morals.*

The Hindu.—* * *The book can be profitably introduced into Elementary Schools for Moral Instruction.*

The Hon'ble Mr. Justice T. V. Seshagiri Aiyar.—* * In my opinion, collections of legends like those contained in the first part of the Aryamatha Upakhyanam serve a double purpose—they show what ideas of morality and ethics actuated our forefathers; they further appraise the world of the virtues which have been the pride of this ancient land. I doubt whether the literature of any other country can produce such inexhaustible folklore. *This publication should be in the hands of every young man and woman in this country.*

THE MADRAS MAIL.—* * The volume comprises 54 tales, all of which have been drawn from the ancient national literature of the land and are mainly directed to teach the young the fruits of good and of evil, and the necessity for leading a religious life. Anecdotes concerning the great founders of the three schools of Hindu philosophy will prove of interest, inasmuch as they present noble examples of self-sacrifice and devotion for the young to imitate. The Hon'ble Mr. Justice T. V. Seshagiri Iyer, who writes an appreciative foreward to the volume, lays stress on the fact *that the stories are absolutely unsectarian and that their selection is unexceptionable. The book provides a useful text-book* for the imparting to the youth of the Tamil country a good knowledge of the aims and ambitions which guided their national heroes.

சுதேச மித்திரன்.—* * (ஆர்யமத உபாக்யானம், இரண்டாம் பாகம்.) இப்பாகத்தில் தர்மா தர்ம விவேகம், மதவிஷயம், ஆசாரியர்கள் சரித்திரம் ஆகிய விஷயங்கள் கதாரூபமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன, 54 சிறு நீதிக் கதைகள் கொண்டது. இந்த க்கதைகள் நமது சிறுவர்களுக்கு மதம், நன்னடக்கை முதலிய குணங்களைப் போதிக்கும்படி புராணங்களிலிருந்து சில அரிய விஷயங்களைத் தொகுத்து எழுதப்பட்டிருக்கின்றன. இது ஸ்கூல் பிள்ளைகளுக்கு உபயோகமாகிப் பலனை விளைவிக்கும்.

விலாஸம்:— மானேஜர், "விவேக போதினி," மயிலாப்பூர், சென்னை.

முருகக் கடவுள்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."---திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ ஆனிமீ :: 1919-௵ ஜூலைமீ | பகுதி 1

சேரநாட்டுத் திருப்பதிகள்

SACRED PLACES IN CHERANAD

[ஸ்ரீமான் கே. ஜி. சேஷய்யர் அவர்கள், பி. ஏ., பி. எல்.]

1. திருவநந்தபுரம்

திருமகளுங் கலைமகளுங் களிப்புடன்
வாழ்திருப்பதியாந்
திருவநந்தை தனில்மகிபன்
திருமூலன் சேரலனென்
திருத்தொண்டு தினந்தினமுஞ்
செயப்பெற்றே யரவணைமேற்
திருத்துயில் கொள் திருவநந்தன்
பதம் பணிவார்க்கிலை யிடரே.

2. ஜநார்த்தனம்

பித்தனைத் திரிந்த வென்னைப்
பிணியினி னகற்றி யன்பும்
பத்தியுமுடைய னாக்கிப் பணிவொடு
தொண்டு செய்யச்
சித்தமுஞ் செவ்வையாக்கி
செனார்த்தன விரங்கிக் காப்பா
யத்தநின் னடிமையல்லா
லறிகிலே னுய்யுமாறே.

3. செங்குன்றூர்

செங்குன்றூர்த் தேவி
செழுங்கருணைச் சோதியே
துங்கம் விளக்குநின்
தூய் நோக்கால்—கங்குல்
விரைந்தோட மக்கள்
விவேகமொடு ஞானப்
பெரும்பேறு பெற்
றிடுவர் காண்.

4. திருவல்லா

தோழிகேள் கண்ணன் குழைத்
தொடியணி யாயர் மாதர்
தாழியில்வைத்த செப் பாற்
றயிர் கவர்ந்துண்டு பின்னுள்
மாழை நுண்ணிடையாரிள்கி
மனங்கவர்த் தொளித்த மாயன்
பூழையிலாழி பெண்டிர்
புகாவிதம் நாட்டினனே.

5. வைக்கம்

கற்றிலேன் கலைகளொன்றுங்
கருது நன்னலங்கள் யாதும்
பெற்றிலேன் பேதையானேன்
பெருந் திருக்கோவிலப்பா!
நற்றவப்பயனினீண்டு நணுகினே
னுய்ய வெண்ணிப்
பற்றினே னெளியேன் நின்றன்
பதமிணை; அருள் செய்வாயே!

6. ஆல்வாய்

ஆலவா யரனே! ஆற்றை
யாரமா யணிந்த தென்னே!
காலனைக் கனித்த காலுங்
கருமணற் கணைந்த தென்னே!
மாலயன் மயங்கவாம மதலையாய்
நிலைத்தா யீண்டைப்
பாலிதழ் மதலை தீண்டப்
பதசிரந் திகழ்த லென்னே!

7. திருவாரூர்

சிந்தந் தெளிந்து
திருவாரூர் வீற்றருளும்
அத்த னடிபணிய
வாகுமே—முத்தி யெனுஞ்
சோழி யான்மாற்றஞ்
சீர்வஞ்சி யாரூர்க்கு
மாகாதோ வைம்
முகனே செப்பு.

8. திருவஞ்சைக்களம்

நரர்களுஞ் சுரர்களும் நலகனிசிறக்க
வருட்கட லரன்திரு வஞ்சையின் களமார்
திரைபுரட் குடதிசைச் சிதம்பரத் தமர்ந்தான்
றிருக்கழற் சிரமிசைக் கொளவிடர் கெடுமே.

கரிப்புக்கு இருந்து பிழை, கலகத்துக்கு ஓடிப் பிழை.

விவேக போதினி

தொ.12] சித்தார்த்தி௵ ஆனிமீ [ப. 1

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

பாண்டுமஹாராஜன், ரிஷியின் சாபத்தால் குந்தியென்ற தன் பார்யையிடத்தில் புத்ரர்களை உண்டுபண்ண முடியாமற்போன பொழுது குந்தி, "நாதா! துர்வாஸ மஹர்ஷியின் அனுக்ரஹத்தால் எனக்குக் கிடைத்திருக்கும் மந்த்ரங்களால் மஹிமையுள்ள தேவதைகளை அழைத்து அவர்களால் உத்தம புத்ரர்களை அடையலாம். இப்பொழுது, முதலில் எந்த தேவதையை ப்ரார்த்திக்கட்டுமெ"ன்றாள். அதற்குப் பாண்டு, "பெண்ணே! ப்ரஜைகளை ஆளுவதற்குத் தர்மத்தின் ஸஹாயம் அவச்யம். ஆகையால், ஸகல தேவதைகளுக்கும் மேலானவனான தர்மதேவதையை வேண்டிக்கொள். அவருடைய அனுக்ரஹத்தால் பிறக்கும் புத்ரன் குருகுலத்திற்கு சிரோமணியாய் விளங்குவான். அவனுடைய மனஸ் ஒருபொழுதும் அதர்மத்தில் செல்லாது. தர்மத்தின் ஆதியையும் நடுவையும் முடிவையும் பரம ரஹஸ்யங்களையும் அறிவான். அவனால் நமது கீர்த்தி ஸகல லோகங்களிலும் ப்ரகாசிக்கும்; உத்தம லோகங்களும் நமக்குக் கிடைக்கும்" என்றார்.

பாண்டுவின் எண்ணப்படி நல்ல முஹூர்த்தத்தில் பிறந்த இக்குழந்தை சமதமாதி ஸகல கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் ஆகாசத்திலிருந்து அசரீரி வாக்கு "இவன் மனுஷ்யர்களில் உத்தமனும் தர்மாத்மாக்களில் ச்ரேஷ்டனும் மஹா பராக்ரமசாலியும் ஸத்யம் தவறுதவனும் லோகத்தில் மன்னர்க்கு மன்னனுமாய் விளங்குவானெ"ன்று தெரிவித்தது.

இவனுக்கு, தர்மபுத்திரன், யுதிஷ்டிரன், அஜாதசத்ருவென்ற பெயர்களுண்டு. ஆனால், இவை இவனிடத்தில் பூர்ணமாய் ஒத்திருக்கவில்லை. தர்மதேவதையின் அம்சத்தால் பிறந்த புத்ரனானாலும், பாண்டுவின் புத்ரனென்பதே வாஸ்தவம். யுதிஷ்டிரர், அதாவது, யுத்தத்தில் அசையாமல் கலங்காமல் நிற்கிறவனென்ற கருத்திற்கு விரோதமாய், பாரத யுத்தத்தில் பல தடவை சத்ருக்களால் தோல்வியடைந்து புறங்காட்டி ஓடியிருக்கிறார். "அஜாத சத்ரு"வென்ற பதத்திற்கு, இவனுக்கு சத்ருவாய்ப் பிறந்தவர் ஒருவருமில்லையென்று பொருள் கொள்ளும். தன் நிகரற்ற பராக்ரமத்தால் சத்ருக்களைத் தலையெடுக்கவொட்டாமற் செய்து, யாரும் இவனுக்கு சத்ருவாக ஏற்படுவதற்குப் பயந்து, இவனுக்கு சத்ருவே இல்லாமலிருக்கலாம். அல்லது, இவனுடைய உத்தம குணங்களாலும் ஒப்பற்றபொறுமையாலும் இவனிடத்தில் கோபங்கொண்டு இவனுக்குக் கெடுதிசெய்ய நினைக்கக்கூடியவர்களே இல்லையென்றும் சொல்லலாம். இவ்விரண்டும் இவரிடத்தில் பொருந்தவில்லையென்பதற்கு துர்யோதனாதி கௌரவர்களே ஸாக்ஷி. ஆகையால், யுத்தத்தில் அசையாமல் இருப்பவரென்று பொருள் கொள்ளும் யுதிஷ்டிர சப்தத்திற்கு, எண்ணிறந்த ஜன்மங்களில் நமக்கு பரமசத்ருக்களாய், நம்மிடத்திலேயே வஸித்து, நம்மால் வளர்க்கப்பட்டு, மோக்ஷமென்ற நமது ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு, நம்மை வேரறுப்பதற்கு ஒவ்வொருக்ஷணமும் முயலும்- காமம் க்ரோதம் முதலிய ஆறு நித்ய சத்ருக்களுடன் எக்காலத்திலும் எந்த உலகத்திலும் எந்த ஸ்திதியிலும் நாம் புரியும் பெரும் போரில், தர்மத்தைக் கடைப்பிடித்து, ஸத்யத்தில் வேரூன்றி, ஆத்ம சக்தியின் மஹிமையால் பகைவர்களை மூல நாசஞ் செய்யும், ஸமுத்ரத்தைப்போல் கலங்காத காம்பீர்யமும் ஹிமயமலையைப்போல் அசைக்க முடியாத திறமையுமுள்ள பரிபக்வ ஞானத்தால் விளங்குகிறவரென்றே அர்த்தஞ் செய்யவேண்டும்.

இப்படியே ஸ்ரீமத் ராமாயணத்திலும் சக்ரவர்த்தித் திருமகனுக்கு கனிஷ்ட ஸஹோதர

கருங்காலி உலக்கைக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல.

ரான சத்ருக்னாழ்வாருக்கு "சத்ருக்களை ஸம்ஹரிக்கிறவன்" என்ற பெயர் எப்படிப் பொருந்தும்? லவணாஸுரனுடன் யுத்தஞ்செய்து அவனை ஸம்ஹரித்தார்; அதுவும் ஸ்ரீராமன் கொடுத்த திவ்யாஸ்த்ரத்தைக் கொண்டே செய்யலாயிற்று இதைத் தவிர ராம லக்ஷ்மணர்களைப்போல் ரணரங்க தீரராய், சத்ருகுல காலராய் எப்பொழுதாவது இவர் விளங்கினதாய்க் காணோம். கொடிய ராக்ஷஸ குலத்தை வேரறுத்த ராமலக்ஷ்மணர்களுக்கு சத்ருக்னனென்ற பெயர் கிடைக்கவில்லையே யென்றால், இதற்கு வால்மீகி மஹர்ஷியே சத்ருக்ன பதத்திற்கு வ்யாக்யானம் செய்து மேற்கண்ட ஆக்ஷேபனையை பரிஹரித்திருக்கிறார்.

அயோத்யா காண்டம் முதலாவது ஸர்க்கத்தில், 'சத்ருக்னோ நித்யசத்ருக்ன' என்றவிடத்தில்," நித்ய சத்ருக்களான காமம் க்ரோதம் முதலியவைகளைத் தலையெடுக்க வொட்டாமல் ஸம்ஹரித்தவரென்று பொருள் விளக்கியிருக்கிறார்.

மேலும், ஸ்ரீராமபிரானுக்கு அந்தரங்கபக்தரான ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள், லேகனாவென்ற கீர்த்தனத்தில், ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹநுமான் முதலியவர்கள் எதற்காக ராமனை இடைவிடாமல் சுற்றிக்கொண்டிருக்கிறார்களென்ற கேள்விக்கு, பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யத்தில் ஸீதாப்பிராட்டியும், கைங்கர்யம் செய்வதில் இளையபெருமாளும், திருமுக மண்டலத்தைப் பார்த்துப் பார்த்துத் திகட்டாமல் ஆராவமுதை அநுபவிப்பதில் பரதனும், பகவான் ஸ்ரீவைகுண்டத்தில் நித்யவிபூதியில் எழுந்தருளியிருக்கும்பொழுது கேவலம் சின்மயனாய் ஞானஸ்வரூபியாய் விளங்கும் ஸ்வரூபத்தை இடைவிடாது த்யானஞ் செய்வதில் சத்ருக்னனும், பாதஸேவையில் ஆஞ்ஜனேயரும் ஈடுபட்டிருக்கிறார்களென்று தெரிவித்திருக்கிறார்.

இப்படியில்லாவிட்டால், யுதிஷ்டிர சப்தம் அர்ஜுனனுக்கே பொருந்தும். ஆனால், பாண்டவ கௌரவ ஸைன்யங்களைப் பார்த்து "ஐயோ! இவர்களை எப்படிக் கொல்வேனெ"ன்ற • துக்கம் மேலிட்டு, "இவர்களைக் கொன்று ஒண்டியாய் ராஜ்யத்தை ஆள்வது மேலா? இவர்களைக் கொல்லாமல் ஆயுதங்களை விட்டெறிந்து க்ரூரமான க்ஷத்ரியத் தொழிலைத் துறந்து ஸாதுவான ப்ராஹ்மண விருத்தியைக் கைக்கொண்டு பிக்ஷையெடுத்துப் பிழைப்பது மேலாவெ"ன்று தர்மஸந்தேஹமுண்டானது அர்ஜுனனுக்கல்லவா? தன் தர்மத்தை விட்டு பரதர்மத்தைச் செய்ய விரும்பின அர்ஜுனன் நித்யசத்ருக்களுடன் புரியும் போரில் அசைவில்லாமல் ஸ்திரமாய் நிற்பவனென்று எப்படிச் சொல்லமுடியும்?

யுதிஷ்டிரரோ தர்ம தேவதையின் அம்சத்தால் உண்டானவர். பீஷ்மர், த்ரோணர், விதுரர், தௌம்யர், நாரதர், மார்க்கண்டேயர், வ்யாஸர், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா முதலிய மஹாநுபாவர்களிடத்தில் தர்ம ரஹஸ்யங்களைக் கேட்டறிந்து ஸந்தேஹ விபரீதங்களற்றவர். லோகரீதியாய் இவருக்கு சத்ருக்கள் ஏற்பட்டாலும், அவர்களாலும் கொண்டாடப் பட்டவர்.

த்ரோணாசார்யரால் பாண்டவ ஸைன்யம் மடிவதைக் கண்டு வருந்தின யுதிஷ்டிரரைப் பார்த்துப் பீமன், "அண்ணா! இந்த த்ரோணரை கொல்லக்கூடியவன் ஒருவனுமில்லை. அவர் யுத்தம் செய்யாமல் ஓய்வதற்கு வேண்டிய உபாயத்தையே தேடவேண்டும். தன் ப்ரிய புத்ரனான அச்வத்தாமா கொல்லப்பட்டானென்ற சொல் அவருடைய காதில் விழுந்தால், அவர் துக்கத்தால் யுத்தஞ் செய்யாமல் நின்று விடுவார். இதற்காகவே மாளவ ராஜனுடைய ஓர் சிரேஷ்டமான யானையை நான் கொன்று, அதன் பெயர் அச்வத்தாமாவானதால், அவரிடத்தில் போய் அச்வத்தாமா கொல்லப்பட்டானென்று கர்ஜித்தேன். அவர் என் வார்த்தையை நம்பாமல், 'யுதிஷ்டிரன் எப்பொழுதும் நிஜத்தையே சொல்லுகிறவன். பொய்யையே அறியான். அச்வத்தாமா கொல்லப்பட்டானென்று அவன் சொன்னால் அதைத் தடையில்லாமல் நம்புவே'னென்றார். த்ரோணர், தன் மரணத்தைப் பெரிய லாபமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் யுதிஷ்டிரரிடத்தில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கவேண்டும்? முடிவில் அவருடைய வார்த்தையை நம்பியே உயிரைக் கொடுத்தார்.

ஒரு ஸமயத்தில் துர்யோதனன் பீஷ்மரிடத்திற்குச் சென்று, "ஸ்வாமி! எனக்கு பீம

கருப்பங் கட்டியிலும் கல் இருக்கும்.

ஸேனனால் பெரும் பயமுண்டாயிருக்கிறது. என் தொடையை கதாயுதத்தால் முறிப்பேனென்றும். என் தலையைக் காலால் மிதிப்பேனென்றும் அவன் பயமுறுத்தியிருக்கிறான். ஆகையால், எனக்கு அவனால் அபாயமில்லாமல் என் தேஹம் வஜ்ரம்போல் ஆயுதங்களால் நாசமடையாமலிருப்பதற்கு ஓர் உபாயத்தைத் தாங்கள் சொல்லவேண்டுமென்று ப்ரார்த்தித்தான். மூன்று காலங்களையு மறிந்த மஹாஞானியான பீஷ்மாசார்யர் "அப்பா! இந்த விஷயத்தில் உனக்குத் தகுந்த யுக்தி சொல்லக்கூடியவன் யுதிஷ்டிரனைத் தவிர வேறெவருமில்லை" யென்றார். துர்யோதனன் கைகொட்டிச் சிரித்து "வெகு நன்றாயிருக்கிறது! யாருடைய உயிரை வாங்க விரும்புகிறேனோ அவர்களையே அதற்கு உபாயத்தைச் சொல்லும்படி நான் கேட்டால், என்னைப்போல் மூடன் யாராவதுண்டோ? நானும் என்னைச் சேர்ந்தவர்களும் வேருடன் அழியவல்லவா அவன் யுக்தி சொல்வானெ"ன்றான். பீஷ்மர் "குழந்தாய்! நீ தர்மபுத்ரனை நன்றாய் அறிந்தாயில்லை. தன் உயிரையும் கீர்த்தியையும் இஹபரக்ஷேமத்தையும் காட்டிலும் தர்மத்தையும் ஸத்யத்தையும் மேலாய் எண்ணும் மஹாபுருஷன் அவனைத்தவிர யார்? தன்னைவெட்டிக் கொண்டிருக்கும் மனுஷ்யனுக்குத்; தான் பூமியில் விழும் வரையில் நிழலையும் குளிர்ச்சியையும் கொடுத்துக்கொண்டு, தான் இறந்த பிறகும் தன் இலைகளாலும் புஷ்பங்களாலும் பழங்களாலும் மரத்தாலும் பலவிதமாய் அவனுக்கு உபகாரத்தைச் செய்யும் மஹாவிருக்ஷத்தைப்போல், பரோபகாரமே யுதிஷ்டிர ரூபமாய் பூமியில் விளங்குகிறதென்று சொல்லவேண்டு"மென்றார்.

துர்யோதனன் ஒருவாறு நம்பிக்கையுண்டாய், பீஷ்மருடைய சொல்லை பரீக்ஷித்துப் பார்ப்போமென்று, தர்மபுத்ரர் தனியேயிருக்கும் ஸமயத்தில் அவரிடத்திற்குச் சென்று "அண்ணா! எனக்கு பீமஸேனனால் எப்பொழுதும் பெரும் பயம் நேருமென்று நடுங்கிக்கொண்டிருக்கிறேன். அதற்காக என் தேஹம் வஜ்ரத்தைப்போல் கடினமாய் ஆயுதங்களால் சிதைவுறாமல் எனக்கு அமரகாயம் கிடைக்கும் உபாயத்தைச் சொல்லவேண்டும். இது தங்களாலேயே முடியுமென்று பீஷ்மர் எனக்குச் சொன்னா" ரென்றான். தர்மபுத்ரர் அதைக் கேட்டு ஸந்தோஷித்துக் "குழந்தாய்! அவருக்குத் தெரியாத விஷயமுமுண்டோ? ஆயினும், என்னைச் சொல்லும்படி ஆக்ஞாபித்ததால் சொல்லுகிறேன். உன் தாயான காந்தாரிதேவி மஹாபதிவ்ரதை. தன் பர்த்தா நேத்ரமில்லாதவரென்று கேள்வியுற்று, "அவர் அடையாத ஸுகம் எனக்கேனெ"ன்று வஸ்த்ரத்தால் கண்களைக் கட்டிவிட்டாள். மிகுந்த யோகஸித்தியுள்ளவள்; உன்னிடத்தில் எல்லையற்ற ப்ரியம் வைத்தவள். உன் க்ஷேமத்தையே கோருகிறவள். அந்த உத்தமி பூர்ண கிருபையுடன் தன் கண்களால் உன் தேஹத்தைப் பார்த்து அனுக்ரஹித்தால் அவளுடைய பார்வை விழுந்த இடமெல்லாம் வஜ்ரகாயமாகு"மென்று யுக்திசொல்லியனுப்பினார். பிறந்தது முதல் பாண்டவர்களுடைய நாசத்தையே தேடிப், பல யுக்திகளைச் செய்து பலிக்காமல், மறுபடியும் அவர்களைக் கொல்வதற்குப் புதிய உபாயத்தை சொல்லும்படி கேட்கும் துர்யோதனனுக்குக், கல்மஷமில்லாமல் ஒளிக்காமல் அவன் கார்யத்தை தன் கார்யமாய் எண்ணித், தன்னையும் தன்னைச்சேர்ந்தவர்களையும் முற்றிலும் மறந்து, ஸத்யம் ஒன்றையே ப்ரதானமாய் எண்ணித், தங்களுடைய கழுத்தை அறுக்கும் கத்தியைத் தங்களுடைய பரம சத்ருவின் கையில் ஸந்தோஷமாய்க் கொடுத்த மஹாபுருஷனான யுதிஷ்டிரருக்கு நிகருண்டோ? மஹாபாபியான துர்யோதனனும் இவருடைய நேர்மையையும் தர்மபுத்தியையும் ஸத்ய வ்ரதத்தையும் நம்பினானல்லவா? அப்படி நம்பிக்கை வைத்தது வீணாயிற்றோ? யுதிஷ்டிரர் ஸம்பந்தப்பட்டவரையில் அது வீண்போகவில்லை. அவர் சொன்ன உபாயம் தவறாது; பூர்ண பலத்தையே கொடுக்கும். ஆனால், அந்த மஹாத்மா எந்த தர்மத்தைக் கலங்காமல் பக்தியுடன் அனுஷ்டித்து வந்தாரோ, அந்த தர்மதேவதையே அவருக்கு சத்ருக்களால் யாதொரு தீங்கும் நேராமல காக்குமல்லவா?

இப்படித் துர்யோதனன் வந்து கேட்டதும், தர்மபுத்ரர் உபாயம் சொன்னதும், தர்மாத்மாவும் ஸகல ஜீவராசிகளின் ஹிருதயத்தில் அந்தர்யாமியாயும் வஸிக்கும் கண்ணபிரானுக்குத் தெரியாமலிருக்குமா?

"பாண்டவர்களே என் பஞ்ச ப்ராணன்கள்" என்று எப்பொழுதும் அவர்களுக்கு யாதொரு கெடுதியும் நேராமல் கண்ணிமையைப்போல் ரக்ஷித்துக்கொண்டிருப்பவர், உடனே தர்மபுத்ரரிடத்திற்கு வந்து "என்ன யுதிஷ்டிரரே! உங்களுடைய குடும்பக் கலஹம் ஒருவிதமாய்த் தீர்ந்து, நீங்களும் கௌரவர்களும் ராஜியானதைப்பற்றி மிகவும் ஸந்தோஷிக்கிறேனெ"ன்றார்.

தர்மபுத்ரர் "அப்படி ஒன்றும் நடக்கவில்லையே. தங்களுக்குத் தெரியாமல் நாங்கள் எதையாவது செய்வோமா? மேலும், அந்த அஸாத்யமான கார்யம் தங்களையன்றி வேறு யாரால் முடியுமெ"ன்றார். கிருஷ்ணன் "நான் வரும்போது துர்யோதனன் உமது மாளிகையிலிருந்து போவதைக் கண்டேன். ஒரு நாளும் பிறருக்கு வணங்காதவனும் உங்களிடத்தில் தீராப்பகைகொண்டவனுமான துர்யோதனன் உம்மைத் தேடி வந்ததைக் கண்டு நான் இப்படி எண்ணலாயிற்றெ"ன்றார். யுதிஷ்டிரர் "அவன் என்னிடத்தில் ஒரு கார்யத்தை உத்தேசித்துவந்தானெ"ன்று நடந்த வரலாற்றைத் தெரிவித்தார். கிருஷ்ணன் "தர்மபுத்ரா! நல்ல கார்யம் செய்தாய்? உன்னிடத்தில் அவன் வைத்த நம்பிக்கைக்குத் தகுந்தபடி நடந்துகொண்டாய்; பீஷ்மருடைய வார்த்தையை நிஜமாகச் செய்தாய்; உன் மஹிமையை லோகமெங்கும் காலமுள்ளவரையில் நிலைநாட்டினை" யென்று அவரை மெச்சி த்ரௌபதையின் விடுதிக்குச்சென்று பீமார்ஜுன நகுல ஸஹதேவர்களை வருவித்து, "பரம ஸாதுவும் கபடலேசமில்லாதவரும் தர்மானுஷ்டானத்திலேயே முரட்டுப் பிடிவாதமுள்ளவருமான நமது யுதிஷ்டிரராலேயே நாமெல்லோரும் துர்யோதனனென்ற யமனுடைய கையில் கட்டி ஒப்புவிக்கப்பட்டோம். இனி நமக்கு வேறு கதியில்லை. க்ரூரமான மரணத்தை எந்த நிமிஷத்திலும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர நாம் செய்யக்கூடியது யாதுமில்லை. நீங்கள் இதுவரையில் அனுபவித்த எண்ணிறந்த கஷ்டங்களும் நான் பட்ட பாடும் இந்த தர்மபுத்ரனுடைய பாழும் தர்மானுஷ்டானத்தால் வீணாயிற்றே'யென்று துக்கமேலிட்டுத் தைர்யமிழந்து ஒன்றும் தோன்றாமல் குனிந்த தலை நிமிராமல சிந்தாக்ராந்தராயிருந்தார்.

அதைக் கேட்ட பீமன் முதலியவர்கள், மனம் பதறி உடல் நடுங்கி "கிருஷ்ணா! அநாதரக்ஷகா! தர்மபுத்ரரால் நமக்கு நேர்ந்த கெடுதிகளில் முதலாவது இதுதானோ? இப்படி எல்லாவற்றையும் தொலைக்கும்படியான ஸ்திதியில் அவர் எங்களை எவ்வளவு தடவையோ வைத்திருக்கிறார். அப்பொழுதெல்லாம் ப்ராணபிக்ஷை கொடுத்து ரக்ஷித்த உம்மையே இப்பொழுதும் சரணமடைகிறோம். பயத்தை விளைவிக்கிறவரும் நீரே. பயத்தைப் போக்குகிறவரும் நீரே" யென்று தீனமாய் ப்ரார்த்தித்தார்கள். அதைக் கேட்டு கண்ணன் "நான் என்ன செய்வேன். பரம ஸாதுவும் லோகஞானமில்லாதவனும் தர்மப்பித்து பிடித்தவனுமான யுதிஷ்டிரன் நம்மை இந்த வலையில் மாட்டிவிட்டு ஸுகமாய் உட்கார்ந்திருக்கிறான். ஏதோ என்னால் கூடியதைச் செய்துபார்க்கிறேன். ஆனால், என்னை நம்பவேண்டாம். மனிதன் எப்பொழுதும் கெடுதியை முதலில் எண்ணி, அதை அனுபவிக்க ஸித்தமாயிருக்கவேண்டுமெ"ன்று அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

இதற்குள் துர்யோதனன் காந்தாரியிடத்தில் சென்று, தான் தர்மபுத்திரரை உபாயம் சொல்லும்படி கேட்டதையும் அவர் சொன்ன பதிலையும் அவளுக்குத் தெரிவித்தான். அதைக் கேட்டு அவள் மனமகிழ்ந்து 'குழந்தாய்! நீ இன்று நடுராத்ரியில் ஒருவர் கண்ணிலும் படாமல் தனியே என் அந்தப்புரத்திற்கு வா. நான் கட்டை அவிழ்த்து உன் தேஹத்தில் எந்த பாகம் வஜ்ரத்தைப்போல் ஆகவேண்டுமோ அதைப் பூர்ண அனுக்ரஹத்துடன் பார்க்கிறேன். அதனால் உனக்கு அவ்விடத்தில் அமரகாயம் கிடைக்குமெ"ன்று சொல்லியனுப்பினாள். அப்படியே நடந்த விருத்தாந்தத்தை துர்யோதனன் தன் ஸஹோதரர்கள் கர்ணன் சகுனி முதலிய யாரிடத்திலும் சொல்லாமல், அர்த்தராத்ரிவேளையில் காந்தாரியின் அந்தப்புரத்திற்குச் சென்று, அங்குள்ள யாவரையும் அங்கிருந்து வெளிப்படுத்தித், தன் ஆடையாபரணங்களைக் கழற்றிவிட்டு நிர்வாணமாய்க், காந்தாரியிருக்கும் அறைக்குப் போகும் மாடிப்படிகளில் ஏறிக்கொண்டிருந்தான். அப்பொழுது கண்ணபிரான், அந்த மாடியின் மேலிருந்து, புஷ்ப சந்தன தாம்

பூல கந்தங்களால் அலங்கரிக்கப்பட்டு உல்லாஸமாய் இறங்கிக்கொண்டிருந்தார். பாதி வழியில் துர்யோதனனை சந்தித்து "யார் அங்கே? துர்யோதனனைப்போல் இருக்கிறதே" என்று ஆச்சர்யத்துடன் வினவினர். துர்யோதனன், "யார் அது? கிருஷ்ணனு? அர்த்த ராத்ரியில் என் தாயாருடைய அந்தப்புரத்தில் இப்படி எனக்கு ஸேவை ஸாதித்ததால் தன்யனுனே"னென்று பரிஹாஸமாய்ப்பேசி, தனக்குள் "இவன் மஹா வஞ்சகன், பாண்டவர்களுக்குப் பரம மித்ரன், எனக்குப்பரமசத்ரு. இவனை இங்கே இந்தஸமயத்தில் காண்பதால் எனக்கு மிகுந்த ஸந்தேஹமுண்டாகிறதெ"ன்று அச்சமுற்றுன். அப்பொழுது கிருஷ்ணன், "காந்தாரி தேவியைத் தர்சித்து வெகு நாளாயிற்று. இன்று கொஞ்சம் அவகாசமிருந்தபடியால் அந்த மஹா புண்யத்தைஸம்பாதித்துக்கொண்டேன். லோகத்தில் மஹாபதிவ்ரதாசிரோமணி யென்ற பெயர் இவளுக்கே தகும். அருந்ததியும் அனஸூயையும் இவளுக்கு எம்மாத்ரம்? இவளுடைய அந்தக்கரண சுத்திக்கும் பதிவ்ரதா தர்மத்திற்கும் விரோதமான விஷயத்தை ஒருவன் நினைத்தாலும் அந்த க்ஷணமே அவன் சாம்பலாவான். அதிருக்கட்டும். நீ என்ன, இந்த வேஷத்துடன் இங்கே போய்க்கொண்டிருக்கிருய்? நண்பர்களுடன் அளவுக்கு மிஞ்சி மதுபானம் செய்து அந்தக் குடிவெறியால் மெய்ம்மறந்தாயா? அல்லது, உனக்கு இவ்விதமான சித்தப்ரமை பிடித்து எவ்வளவு காலமாயிற்று? பனைமரத்தைப்போல் உயர்ந்து காட்டு யானையைப்போல் பருத்துத் திமிர்த்து, பார்க்கப் பயங்கரமாய், வஸ்த்ரமில்லாமல், பாதி ராத்ரி வேளையில், மஹா உத்தமியான காந்தாரியின் மாடிக்குப் போய்க்கொண்டிருக்கிருயே! ஐயோ பாவம்! புத்தி சரியாகஇருந்தால் இப்படி செய்வானு" வென்று பாரிதபத்துடன் சொன்னுன். அதைக் கேட்டு துர்யோதனன் "கிருஷ்ணு நீ சொல்லுகிறபடியல்ல; வெளிப் பார்வைக்கு அப்படித்தான் தோன்றும். ஆயினும், ராஜ்ய தந்த்ரத்தில் நீ ஒருவனே நிபுணனென்ற எண்ணத்தை விட்டுவிடு" என்று தன் பெருமையையும் புத்திக் கூர்மையயும் தன்னுல் பாண்டவர்களுக்கு நேரப்போகும் நாசத்தையும் கிருஷ்ணனுடன் சொல்லி அவரை கலங்கச்செய்து அவர் படும் துக்கத்தைப் பார்த்துத்தான் மகிழ வேண்டுமென்று, ஆதியோடந்தமாய் ஸகல விருத்தாந்தங்களையும் கண்ணனிடத்தில் தெரிவித்தான்.

அதை அதுவரையில் அறியாதவர்போல, கிருஷ்ணன் ஆச்சர்யத்தையும் வருத்தத்தையும் காட்டி, "அடே! மடையா! புத்தியற்ற பசுவே! ங்கள் நூறுபேர்களுக்கும் ப்ரஹ்மதேவன் தேஹங்களை விருஷ்டித்தானேயொழிய புத்தியை வைக்க மறந்துவிட்டான். எப்படியும் புத்திமானே பலவானுவான். பாண்டவர்களிடத்தில் பரமப்ரீதியை வைத்து அவர்களுடைய க்ஷேமத்தையே என்றும் கோரி, உன்னுடைய அன்னத்தை தின்றுவளர்ந்து, உன்னுல் ஸகல மேன்மையும் அடைந்து, அந்தரங்கத்தில் பாண்டவர்களுடைய ஜயத்தையும் உன் நாசத்தையும் எப்பொழுதும் ப்ரார்த்திக்கும் பீஷ்மரைப் பாண்டவர்களுடைய நாசத்திற்கும் உன் மேன்மைக்கும் தகுந்த உபாயத்தை கேட்கப்போன முழுமூடன் உன்னைத்தவிர யாருமுண்டோ! இதற்கு வேறு ஸாக்ஷி வேண்டுமோ? பாண்டவர்களுக்குள் மூத்தவனும் ருத்ராக்ஷப் பூனைபோல் தர்மமென்ற வேஷம்போட்டு லோகத்தை வஞ்சிப்பவனும் உங்களுடைய குடியைக் கெடுக்கும் எண்ணத்தையே தபஸாய்க் கொண்டவனுமான யுதிஷ்டிரனைப் பாண்டவர்களுடைய மரணோபாயத்தை உனக்கு சொல்லும்படி ப்ரார்த்திக்கவேண்டுமென்று உன்னை அவனிடத்திற்கு அனுப்பினதே போதாதா? ஐயோ பாபம்! கேவலம் முறட்டுபலத்தையும் பிடிவாதத்தையும் கூச்சல் போடுவதையும் முன்கோபத்தையும் தவிர உன்னிடத்தில்வேறு நற்குணங்களில்லையென்பது எனக்கல்லவா தெரியும்? ந்யாயமாய்ப் பார்த்தால் கபடமென்பதே தெரியாத உனக்கல்லவா தர்மபுத்திரரென்று பெயர்வைக்கவேண்டும்? அந்த ஆஷாடபூதி வாங்கவேண்டிய கெட்ட பெயரையும் வீண்பழியையும் பூர்வஜன்ம பாபத்தால் நீ வாங்குகிருய். குருகுலக்கிழவன் ஸாதாரணமானவனல்ல. பழைய பெருச்சாளி; மஹா வஞ்சகாசார்யன்; கபடஸ்வாமி" யென்று கேட்போர் மனம் கரையும்படி கண்ணன் சொல்ல, துர்யோதனனுக்குப் பீஷ்மரிடத்திலும் தர்மபுத்ரரிடத்திலும் புதிதாய் உண்டான மதிப்பும் நம்பிக்கையும் ஸூர்யனைக்கண்ட இருளைப்போல் ஒழிய ஆரம்பித்தது.

தமிழ் நூற் பயிற்சி

THE STUDY OF TAMIL

[ஸ்ரீமான் ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், பி. ஏ., எல். டி.]

தமிழ் வழங்கு நாட்டில் தமிழ் நூற் பயிற்சி இந்நாளில் எந்நிலையிலுள்ளதென்று ஒரு சிறிது ஆராய்ந்து, அப்பயிற்சியின் இன்றியமையாமையை விளக்குவதே இச்சிறு கட்டுரையின் கருத்தாம். ஒரு நூலில், "மூவேந்தரும் போய், முச்சங்கமும் போய், பாவேந்தரும் குறைந்து பழைய நூலுரைகளும் மறந்து, படிப்பாரும் கேட்பாருமின்றித் தமிழ்க் கல்வி மழுங்குமிக் காலத்தில்" எனவொரு வாக்கியம் எழுகின்றது. தற்காலத் தமிழகத்தில் கற்றோரும் மற்றோருமாயுள்ளாரிற் பெரும்பாலோர் தம் செய்கையில் தமிழை எவ்வாறு நடத்துகின்றார் என்று உய்த்துணர்வோர்க்கு இச்சொற்கள் உண்மையே கூறுகின்றனவென்று புலப்படும்.

முதலில் நமது சென்னைச் சர்வகலாசாலையின் செய்கையை நோக்குவோம் : தமிழ் நாட்டிற் பிறந்து தமிழையே தாய் மொழியாகப் பெற்ற பலர் இக்கூட்டத்திலுள்ளார். இருந்தும் என்ன பயன்? 26-12-13-ல் கல்கத்தா சர்வகலாசாலையில் ஸர் அஷ்டோஷ் முகர்ஜீ என்னும் பெரியார் பின் வருமாறு மகிழ்ச்சியொடு பேசினர் :—

"After a struggle of a quarter of a century the elementary truth was thus recognised that if the Indian Universities are ever to be indissolubly assimilated with our national life, they must ungrudgingly accord due recognition to the irresistibie claims of the Indian Vernaculars."

"எக்காலத்திலாவது இந்திய சர்வகலாசாலைகள் நம்நாட்டு வாழ்க்கையோடு பிரிக்க முடியா வண்ணம் ஒன்று பட வேண்டுவதாயின், அவைகள் இந்திய மொழிகளின் மறுக்கவொண்ணு உரிமைகளை மனமார ஒத்துக் கொள்ளவேண்டும், என்னும் இவ்வடிப்படையான உண்மை இருபத்தைந்து வருடகாலப் போராட்டத்தின் பின் (நம் சர்வ கலாசாலையில்) அங்கிகரிக்கப்பட்டது."

சென்னைச் சர்வ கலாசாலையில் இப்போது தென்னாட்டு மொழிகளுக்குக் கிடைக்கும் பெருமையை நோக்கின், ஸர் அஷ்டோஷ் முகர்ஜீ கூறி மகிழ்ந்ததுபோல் நாம் களித்தற்கில்லை என்று தோன்றுகிறது. இங்கு இம்மொழிகளுக்குப் பல ஆண்டுகளாக இருந்த உயர்நிலை திடீரென்று சில வருஷங்களுக்கு முன்பு மாற்றப்பட்டது. இம்மொழிகள் தலையெடுத்தற்கான பெருமுயற்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை. இவைகள்மாட்டு நம் சர்வகலாசாலை காட்டும் அன்பு மாற்றாந்தாய் அன்பிற் சிறந்ததொன்றன்று. இவ்விழி நிலை எவரால் உண்டாயது என்று நாம் இங்கு விசாரிக்க வேண்டுவதில்லை. இதற்கு முதல் வழிகாட்டிகள் அரசாங்கத்தாரல்லர் என்று மட்டும் உறுதியாய்க் கூறலாம்.

பி. ஏ. வகுப்பு வரையில் கட்டாய பாடமாக இருந்த தாய் மொழிகளை அந்நிலையிலிருந்து தாழ்த்தி விட்டமையாலும், உத்தியோக முறையில் அம்மொழிகளில் வல்லுநரைப் பல வழிகளிலும் அவமதித்து எளிய நிலையில் வைத்திருத்தலாலும், அவற்றை வளர்க்கும் பொருட்டுத்தமிழ்நாட்டில் உள்ளன்போடு போதிய முயற்சிகள் செய்யப்படாமையாலும், தமிழ்ப் புலவர்களை முன்போல் ஆதரிப்பாரில்லாமையாலும், பிறவாற்றாலும் விளையும் கெடுதிகள் பல. தமிழளவிற் பேசுங்கால் அதற்குத் தமிழ் பேசுவோராலேயே அசட்டை, கெடுதி, அவமதிப்பு என்னும் மூன்று பொல்லாங்குகள் நேர்ந்திருக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

இந்நிலைமைக்குக் காரணம் விளக்கத் தொடங்கின், அதுவே அதிக இடங்கொள்ளும். சுருங்கக் குறிப்பிடுங்கால், (1) அறியாமை (2) தேசப்பற்றும் பாஷைப்பற்றும் இல்லாமை (3) தன்னலமொன்றே கருதும் தாழ் குணம் என்பனவற்றை முற்படுத்திக் கூறலாம். உயர்ந்த ஆங்கில பட்டங்கள் பெற்றிருப்பினும் உத்தியோக முறையிலன்றி வேறு சமயங்களிலெல்லாம் தம் தாய்மொழியிலேயே பேசுவதும் எழுதுவதும் வழக்கமாகக் கொண்டுள்ளார் வங்காள நன்மக்கள். எங்கும் எஞ்ஞான்றும் தமிழிற் பேசுவதும் எழுதுவதும் இழிவென்று ஒதுக்கியுள்ளார் தமிழ் நாட்டில் ஆங்கிலங்கற்ற பல மாக்கள். இவ்விருதிறத்தார்

கரும்புக் கட்டிக்கு எறும்பு தானே வரும்.

பெருமை சிறுமைகளை அறிஞர் உள்ளவாறு மதிக்கற்பாலர். விரிக்கிற் பெருகும்.

இனித் தமிழ் நூல் பயில வேண்டுவதேன் என்னுங் கேள்விக்குச் சுருக்கமாக விடை பகர முயல்வோம். முதலாவது, தமிழ் மக்களுக்குத் தமிழ் தாய்மொழியாதலின் அதை அவர் நன்கு கற்றல் இயற்கையில் ஏற்பட்டுள்ள முறை என்போம். ஆங்கிலத்தை ஆங்கிலேயரும், ஜப்பானிய மொழியை ஜப்பானியரும், மிகவும் பிற்காலத்ததாய வங்காளத்தை அவ்வங்காளிகளும் பொன்னேபோற் போற்றுதல் கண்கூடன்றோ? இன்னாரிடத்துத் தேசப்பற்றும் தாய்மொழிப்பற்றும் ஒருங்கு நின்று விளங்குவது உற்று உணரற்பாலதே.

இவ்வாறு கூறுங்கால், தமிழுக்குத் தன்னியல்பிலேயே அளப்பரும் பெருமை அமைந்து கிடக்கின்றது என்பதை மறத்தலாகாது. உலகில் நூற்றுக் கணக்கான மொழிகள் இருப்பினும், உயர்தரச் செம்மொழிகளாய் உள்ளவை ஐந்தாறுக்கு மேலில்லை என்ப. அச்சிலவற்றுள் தமிழ் ஒன்று. அம்மட்டோ? அச்சிலவறறுள்ளும் தமிழ் நீங்கிய ஏனையவெல்லாம் பேச்சு வழக்காறு அற்று நிற்கின்றன. நந்தமிழோ பன்னரும் பழமை உடையதேனும் "கன்னித் தண்டமி"ழாய்ப்"பசுந்தமிழாய்"ப்பேச்சு வழக்கில் இன்றும் நிலவுகின்றது. அன்றியும் இம்மொழி பல்லாயிர வருடங்கட்கு முன்னரே இலக்கண வரம்பு செவ்விதின் வாய்க்கப்பெற்றது. நீர், நெருப்பு, வன்மீகம், மாந்தர் கொடுமை என்பனவற்றால் இறந்தொழிந்த எண்ணிலா நூல்களை நீக்கிப் பார்க்கினும், பல அரும்பெரும் இலக்கியங்களை இன்றுமிது தன்பாற் கொண்டுள்ளது. "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலையுண்ட பாலனை அழைத்ததும், என்பு பெண்ணுருவாக் கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும்" இவை போன்ற இன்னும் பல தெய்வீகச் செயல்களைச் செய்ததும் நந்தமிழ் என்னில் இதன் பெருமை யாவரே சாற்றவல்லார் என்றும் தமிழ்ப்பெருமை கூறுப. கிரீன்லாந்திலும் ஸஹாராவிலும் வசிப்போர்கூடத் தம் பனி மேட்டையும் மணற் காட்டையும் அவணுள்ள பிறவற்றையும் பரிவொடு பாராட்டுகின்றார். தமிழ் நாட்டில் வாழ்வோர் தம் முயிர்க் குறுதி பயக்கும் தண்டமிழைப் பாராட்டாப் பாதகம் என்னே? இவையேயன்றித் தமிழ் மொழியின் ஓசையின்பம், தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ அருமைப்பாடு, தமிழிலக்கண அகப்பொருட் சிறப்பு முதலியவற்றையும் இவண் நினைவுகூர்தல் பொருத்தமுடைத்தே. இன்னோரன்ன சிறப்புகள் வாய்ந்தவோர் மொழியை நன்மக்கள் எவர்தாம் போற்றாது விடுவர்?

இம்மொழியைப் பயிலல் அவசியம் என்பதற்கு இன்னும் சில காரணம் காட்டலாம்; நந்தென்னாட்டு முன்னோரைக் குறித்துச் சரித்திர ஆராய்ச்சி முறையில் உலகுக்குத் தெரிந்திருப்பது மிகவும் அற்பம். பூர்வீக இந்தியாவைப்பற்றிச் சரித்திரமெழுதிய **ஸர் வின்ஸெண்ட் ஸ்மித், ஸர்ரமேச சந்திர தத்தர்** என்னும் புகழ்பெற்ற ஆசிரியர்கள் தாமும் தென்னாட்டின் சார்பாக நாம் அறியக்கூடிய அவ்வளவும் அறிவிக்க இயலாது போயினர். காரணம் அன்னோர் தமிழ் நூல் பயிலாமையும் அவருக்கு அந்நூற் பொருள்களைத் தமிழ் வல்லார் எடுத்துரைக்காமையுமே. தமிழ் வல்லாராகிய ஆசிரியர் **சுந்தரம் பிள்ளை**யவர்களும் **கனகசபைப் பிள்ளை**யவர்களும் நம் நாட்டையும் மொழியையும் குறித்து ஆங்கிலத்தில் எழுதிய பின்னரன்றோ மற்றும் சிலர் இந்நாட்டின் பண்டைப் பெருமையைச் சரித முறையில் ஆராய்ந்து விரிவாய் எழுதப் புக்கார்? பழந்தமிழ் நூலாராய்ச்சியால் பழைய அரசர்களது செயல்களின் கால முதலிய விவரங்கள் எல்லாம் தெரியாது போயினும், நம் முன்னோரது வழக்க ஒழுக்கங்களும் நம்பிக்கைகளும், வாழ்க்கை மேம்பாடும் இனிது புலனாகின்றன. தமிழரசரது அரும்பெருஞ் செயல்களிற் சிலவும் தெரியவருகின்றன.

அன்றியும் சாதிமதப் பிணக்குகள் கங்குகரையின்றிப் பெருகி நம்மவர்க்குள் அன்பையும் ஒற்றுமையையும் குன்றச் செய்துவரும் இக்காலத்தில், நம் முன்னோரது விரிந்த அறிவையும், சமயப் பொறையையும் அன்பு செறிந்த வாழ்க்கையையும் செயற்கருஞ் செய்கை செய்த தீரத்தையும் விளங்க எடுத்துக் காட்டல் பெரும்பயனுடைத்தாம். வடநாட்டுப் பத்திரிகையொன்றுஎழுதியபடி, தென்னிந்திய மக்களின் வழக்க ஒழுக்கங்களைத் திருத்த முயல்வோர் கடைச் சங்க காலத்துத் தமிழ் நாட்டை முன் மாதிரியாய்க் கொள்ளல்

கரும்பைக் கழுதைமுன் போட்டால், கழுதைக்குத் தெரியுமோ கரும்பு ருசி?

ஏற்புடைத்து; பிறதேச நாகரீகத்தைப் பின் பற்ற வேண்டுவதில்லை. ஆக, ஆசார சீர்திருத்தம் செய்ய விரும்புவோர்க்கும் தமிழாராய்ச்சி எவ்வகையினும் இன்றியமையாததே.

'தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்' "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பன போன்ற பெரு மொழிகள் பிறர் நலம் குறித்துழைக்கும் பெற்றியைப் புலப்படுத்துவன. இம்முற் குறியை இக்காலத்து உயர்தர மாணவர் முன் அடிக்கடி அறிவாளிகள் புகழ்ந்து கூறுகின்றனர். இது கேட்டோர் அருள்பொருந்திய நெஞ்சினராய், நம் நாட்டவர் முன்னேற்றமடைய வேண்டிப் பல துறைகளிலும் நல்லறிவு பரப்ப ஆசைப்படுகின்றனர். இவ்வாறு செய்தற்கு ஆங்கிலப் புலமை யொன்றே போதாது; தமிழ் நூற் பயிற்சியும் இன்றியமையாததாம். தமிழ் மக்கள் பலர்க்கும் நன்மை புரிய விரும்புவோர் அத்தமிழ் நூல்களை நன்கு கற்று அம்மொழியில் எழுதவும் பேசவும் ஆற்றல் பெறவேண்டுவ தவசியம். தமிழ னொருவன் தமிழொன்றே உணர்ந்தார் கூட்டத்துப் புக்கு 'எனக்குத் தமிழிற் பேசவராது, ஆங்கிலம் நன்றாய் வரும்' என்று சொல்லுவது பெருமைக்கு ஏதுவன்று.

கடைசியாக மற்றுமொரு நியாயம் காட்டி முடிப்பாம். 'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்' இதுவென அறிந்தோர் ஆன்ம லாபமடைதலை அவாவி நிற்பர். அன்னோர் உலகியல்பும் தம்மியல்பும் தலைவனியல்பும் அறிந்து கொள்ளல்வேண்டும். நீதிநெறியை இனிதுணர்ந்தொழுகல் வேண்டும். எவற்றிற்கும் மேலாக, பக்தியை வளர்த்தல் வேண்டும். இவை கைகூடற்குத் தமிழ் மக்கள் தமிழ் நூல்களை விடுத்து யாது செய்யவல்லார்? தமிழர்க்குத் தமிழ்க் கல்வி கேள்விகளால் விளையும் அத்துணைச் சமயஉணர்ச்சியும் பத்தி முதிர்ச்சியும் வேறெம்மொழிப் பயிற்சியாலும் விளையாது என்பது பல மொழி கற்ற ஆன்றோர் முடிபாம்.

இதுகாறும் குறிப்பித்த வாற்றால் தமிழ் மொழி, பொதுவாய் எல்லாராலும், சிறப்பாய்த் தமிழ் நாட்டாராலும் போற்றத்தக்கது என்பது தெளிவாதல் கூடும். இனி அம்மொழியை வளர்க்கும் வழிகள் எவையென ஆராய்தல் முறைமை.

அப்ரகம்

MICA

[ஸ்ரீமான் ஆர். கே. குப்புஸ்வாமி ஐயரவர்கள், பீ. ஏ., எல். டி.]

அப்ரகம் என்றும், 'காக்காப்பொன்' என்றும் சொல்லும் வஸ்துவை இங்கிலீஷில் மைகா (Mica) என்பர். இது நிலத்திலிருந்து வெட்டியெடுக்கும் சிறந்த உலோகப்பொருள்களில் ஒன்று. அப்ரகப் பிளவுகள், சுண்ணும்புக்கல், வெங்கச் செங்கல், க்ரானைட் முதலிய பாறைகளுக்கிடையில் ஊடுருவிச்செல்வதைப் பல இடங்களில் காணலாம். சில இடங்களில் இப்பிளவுகள் மெல்லியதாய் இரண்டொரு அங்குலப் பருமனு யிருக்கும். வேறு சில இடங்களில் பிளவுகளின் பருமன் 100 அடிகளுக்கு மேலேயே மிக அற்புதமாயிருக்கும். இது, பொன், வெள்ளி, தாமிரம் இவற்றின் சுரங்கங்களைப்போல் பூமியின்கீழ் வெகுதூரம் வெட்டிக் கொண்டுபோய்த் தேடவேண்டிய வஸ்துவல்ல, பூமியின் மேற்புறத்திலேயே, பெரும்பாலும் இலகுவாய்க் கிடைக்கக்கூடிய வஸ்து. ஆகையால் இந்தியாவில் பண்டைக்காலம் தொடங்கியே இப்பொருளை எடுத்துக் கையாண்டு வருகின்றனர்.

அப்ரகம் நுட்பமானதாயும் சுலபமாய் ஒடிந்து போகக் கூடியதாயும் இருப்பதுபற்றி பாறைகள் நிலை மாறும்போது நாசமடைகின்றது. அக்காரணத்தால் உலகில் எல்லா இடங்களிலும் பாறைகள் ஏராளமா யிருப்பினும் சிறந்த அப்ரகச் சுரங்கங்கள் கிடைப்பதில்லை. இந்தியா, திபத்து, கனடா, அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்கள், ஜர்மன் கீழ் ஆப்ரிகா— இவைகளே முக்கியமாய் அப்ரகம் வெட்டியெடுக்கும் தேசங்கள். ஒரு தேசத்திலாவது

இந்தியாவில் கிடைப்பதுபோல் அவ்வளவு ஏராளமாய் இவ்வஸ்து கிடைப்பதில்லை. இந்தியாவின் அப்ரகம்போல் அவ்வளவு சிரேஷ்டமாகவும் இருப்பதில்லை.

அப்ரகம் சுபாவமாய்ப் பல வர்ணங்களை உடைத்தாயிருக்கின்றது. அதில் கலந்துள்ள உட்பொருள்களைப்பற்றி நிறம் மாறுகின்றது. இரசாயன சாஸ்திரிகள் ஒவ்வொருவித அப்ரகத்தின் உட்பொருள்களையும் வேறு வேறாகப் பிரித்து அதன் தன்மையை நிர்ணயம் செய்திருக்கின்றனர். நாம் அதை கவனிக்கவேண்டியதில்லை. சில ஜாதி, நிறமின்றி நிர்மலமாய்க்கண்ணாடிபோன்றிருக்கின்றன ; சில சிவப்பாயும் பச்சையாயுமிருப்பதுண்டு ; சில கருப்பாய், ஒளி ஊடுருவிச் செல்லாதபடி மந்தமாயிருக்கும். கடைசி மாதிரியை கிருஷ்ணப்ரகம் என்பர் நம்மவர்.

எவ்வாறிருப்பினும், அப்ரகம் வெட்டியெடுக்கும்போது கடப்பைக்கற்களைப் போல் துண்டு துண்டாயிருக்கும். ஒவ்வொரு கட்டியிலும், அப்ரகத் தகடுகள், புஸ்தகத்திலுள்ள காகிதங்கள் ஒன்றின்மேலொன்று சேர்ந்திருப்பதுபோல், ஒட்டிக்கொண்டிருக்கும். முதல் தரமான சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கும் துண்டுகளை மிகப்பெரிய தகடுகளாகப் பிளக்க முடியும். முன் காலங்களில் நாகரீகமற்ற காட்டு ஜனங்கள் அப்ரகத்தைக் கண்டவிடத்தில் வெட்டியெடுத்து உபயோகப்படக்கூடிய துண்டுகளை மட்டும் விற்று, மற்ற பாகங்களை சேதமாக்கினார்கள். இப்போது வியாபாரிகள் தொழிற்சாலைகள் ஏற்பாடு செய்துகொண்டு கூலியாட்களை நியமித்து, தொழில் தெரிந்த மேஸ்திரிகளின் மேல்பார்வையில் வேலை செய்வதால் சேதம் முன் மாதிரியாவதில்லை. வெட்டியெடுத்த கட்டித் துண்டுகளை தொழிற்சாலைக்குக் கொண்டுபோய், சீராய்ப் பக்கங்களை வெட்டி ஒழுங்குபடுத்துவார்கள். அப்போது புறைபோய்ப் பழுதுபட்ட பாகங்களை நீக்கி, பயன்படும் பாகத்தை நேராக்குவது வழக்கம். இங்ஙனம் சீராக்கிய துணுக்குகள் பிளப்பதற்குத் தயாராயிருக்கின்றன. பிளக்கும்போது காயப்படாமலும், நடுவில் ஒடிந்து போகாமலும், களங்கமற்றும், இருப்பனவே சிறந்த தகடுகள். பின்பு, அவற்றின் ஓரங்கள் ஒழுங்கில்லாமலிருந்தால் ஜாக்கிரதையாய்க் கத்தரித்து அடுக்கி வைப்பார்கள். பெரிதும் சிறிதுமாயிருப்பவைகளை, அவற்றின் அளவுக்குத் தக்கபடி பிரித்து ஒரே அளவாயிருப்பவற்றை ஒவ்வொரு கட்டாகக் கட்டுவார்கள். அப்ரகம், ஈரம் தாக்கினால் கெடுமாகையால், தக்கபடி பெட்டிகளில் அடக்கம் செய்து விற்பனைக்குத் தயாராக்குவார்கள்.

அப்ரகத்தின் லக்ஷணம் யாவையெனில், எளிதில்கீறுண்டொடியாதது. சுலபமாய் வளையக்கூடியது; உஷ்ணத்தால் உருகாதது. சூடுபரவவொட்டாமல் தடுப்பது : வெளிச்சத்தைத் தடையில்லாமல் நுழைந்துபோக விடுவது : இலக்ட்ரிஸிடி— மின்சாரசக்தி—ஒழுகிப்போகாமல் தேக்கி வைத்துக்கொள்வது ஆகிய இவைபோன்றவைகளே. இக்குணங்கள் பரிபூர்ணமாயிருக்கும் ஜாதிக்கே விலை அதிகம். தொழிலாளிகள் தங்களுக்கு எவ்விதமான அப்ரகம் வேண்டுமென்றும், எம்மாதிரியிருக்கவேண்டுமென்றும், எப்படிக் கத்தரிக்கவேண்டுமென்றும், தொழிற்சாலை மானேஜருக்குத் தெரிவித்து விடுவதால், அவரவர்களுடைய தேவைக்குத் தக்கபடி வட்டமாகவோ, சவுக்கமாகவோ, திரிகோணமாகவோ கத்தரிக்கப்பட்ட தகடுகள் சில சமயங்களில் மணங்கு 300 ரூபாய் அல்லது 400 ரூபாய்க்குக் கூட விற்கும். தாழ்ந்த ஜாதியில் சேர்ந்த வஸ்து மணங்குக்கு 10, 15 ரூபாய்க்கு விற்பதுமுண்டு.

நமது தேசத்தில் அப்ரகத்தகடுகளைக் கண்ணாடிகளுக்குப் பதிலாய்ப்படங்களுக்கு மேலே போடவும், அவற்றின்மேல் சித்திரங்கள் வரையவும், விளக்குச் சிமினிகளாகவும், விசிரிகளுக்கும், சில ஆபரணங்களுக்கும் உபயோகிக்கின்றனர். கிருஷ்ணப்ரகத்தை ஆயுர்வேத வைத்தியர் மருந்துக்கு உபயோகப்படுத்துகின்றனர். ஆகையால் நாம் உபயோகிப்பதெல்லாம் சாதாரணக் காரியங்களுக்கே.

ஐரோப்பிய தேசங்களில் ஜன்னல்களை மூடவும், ஸ்டவ், மாஜிக் லாண்டர்ன் (Magic-Lantern), என்ஜின், இவற்றிலும் விசேஷமாய் உபயோகப்படுத்துகின்றனர். யுத்தக் கப்பல்களில் அப்ரகத் தகடுகளைப் பல வேலைகளுக்கு உபயோகப் படுத்துகின்றனர். இலக்ட்ரிக் கைத்தொழில் அபிவிருத்தியானதன்மேல் அப்ரகத்தின்தேவை அதிகமாய்விட்டது.

கருவு இல்லாத முட்டையும் குரு இல்லாத வித்தையும்.

மின்சார சக்தியை நிலை நிறுத்தித் தாங்குவது பற்றி, டைனமோ என்னும் மின்சாரசக்தி யுண்டாக்கும் யந்திரத்தில் அப்ரகம் அதிகமாய் உபயோகமாகிறது. அப்ரகப் பொடியை கிளி ஸெரின் (Glycerine) முதலியவற்றுடன் கலந்து வெடி மருந்து செய்ய உபயோ கிக்கின்றனர். ஆகையால் யுத்த சமயத் தில் அப்ரகம் பலவிதமாய் உபயோக மாகி வந்தது. அப்ரகத்தின் மகிமை பல நாளாக ஒருவருக்கும் தெரியாமலிருந்தது பற்றி அதன் வியாபாரமும் உன்னதஸ்திதியை அடையவில்லை. சுமார் 20 வருஷகாலமாகத் தான், சாஸ்திர வல்லவர்கள் அதன் மேன் மையை அறிந்து, கைத்தொழில்களில் அதை உபயோகித்து வருகின்றனர். இன்னும் எத் தனை வேலைகளுக்கு அப்ரகம் உபயோகமாகு மோ! இனிக் கண்டுபிடிக்கும் கருவிகள் எவ்வெ வைகளுக்கு, இவ்வுலோகம் இன்றியமையாப் பொருளாயிருக்குமோ! யாருக்குத் தெரியும்? யுத்தம் இப்பொழுது முடிந்துவிட்டபடியால் இனி இலக்ட்ரிக் கைத்தொழில்கள் மிதமின்றி விருத்தியாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. அப்பொழுது அப்ரகத்தை வேண்டுவோர் அதிகமாவார்கள். "காக்காப்பொன்" உண் மையாய்ப் பொன்போலவே விலையுயர்ந்த வஸ் துவாகும் என்பதற்குத் தடையில்லை.

இவ்விஷயத்தைப்பற்றி, ப்ரிட்டிஷ் கவர்ன் மெண்டில் யுத்தசாமான்கள் செய்யும் இலாகா வில் பார்லிமெண்ட் ஸெகிரடெரியாயிருக்கும் உத்தியோகஸ்தர் பின்வருமாறு கூறுகின் றார்:—"இலக்ட்ரிக் கைத்தொழில் தற்காலத் தில் யுத்த சம்பந்தமான பெரிய கைத்தொழி லாக விருக்கின்றது. யுத்தம் தொடங்குமுன் ஜர்மனி தேசத்தார் இலக்ட்ரிக் கைத்தொழில் களில் அதிகத் திறமையுடையவர்களாயிருந்த னர். இத்திறமைக்குக் காரணம் என்னவெனில் இந்தியாவிலிருந்தும், பிரிட்டிஷ் ஸாம்ராஜ் யத்தில் பல பாகங்களிலிருந்தும், அவர்கள் ஏராளமாய் அப்ரகத்தை ஏற்றுமதி செய்து கொண்டதே. இல்லையேல் அவர்களுக்கு அவ் வளவு மேன்மை கிடைத்திராது. மைகா (அப்ரகம்) இல்லாமல் இலட்ரிக் கைத்தொ ழில் நடைபெறுவது அசாத்தியம். அப்ரகம் சப்ளை செய்வதோ பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யம் தவிர வேறொன்றுமில்லை. உலகில் கிடைக் கும் மைகாவில் 100-க்கு 50 பங்குக்கு அதிக மாகவே—சுமார் பாதி—இந்தியாவில் கிடைக் கின்றது. 15 பங்கு கனடாவில் கிடைக்கின் றது. ஜர்மன் கீழ் ஆப்பிரிக்காவில் 10 பங்கு கிடைக்கின்றது. பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தி லேயே 100-க்கு 65 மடங்கு இவ்வஸ்து கிடைப்பதாயிருந்தும், யுத்தம் ஆரம்பமாகு முன் இவையனைத்தும் ஜர்மனியார் கையில் அகப்பட்டிருந்தது. ஜர்மனி தேசத்தார் 1913-ம் வருஷத்தில் அநேகமாய் இந்தியாவி லிருந்து அப்ரகம் வேண்டியமட்டில் வாங்கின தல்லாமல், இந்தியாவிலிருந்து இங்கிலாந் துக்கு வந்த சரக்கிலும் பாதிக்குமேல் மறுபடி தாங்களே வாங்கிக்கொண்டார்கள்.

யுத்தமாரம்பமானதுமுதல் அப்ரகம் இங் கிலாந்துக்கே விசேஷமாய் ஏற்றுமதியாகின் றது. ஜர்மன் கீழ் ஆப்பிரிகாவில் உள்ள சுரங்கங் களும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மேல்பார் வையிலேயே இப்பொழுது வேலை செய்யப் பட்டு வருகின்றன. யுத்தத்துக்கு வேண்டிய கருவிகளைச் செய்ய முனைந்து, இப்பொழுது பிரிட்டிஷ் இலக்ட்ரிக் கைத்தொழில், ஜர்மனி, ஆஸ்திரியா இவற்றின் வியாபாரத்தைக் கைப் பற்றி நாசமாக்கினதுமன்றி, இக்கைத்தொ ழில் உலகிலேயே முதன்மையான ஸ்தானத் தை யடைந்திருக்கிறது."

இங்கிலாந்தில் இலக்ட்ரிக் கைத்தொழில் விருத்தியாவதனால், தானாகவே இந்தியாவில் அப்ரக வியாபாரம் மேலோங்குமென்பது சொல்லவேண்டியதில்லை. சில நாட்களுக்கு முன், இந்தியாவில் விசாரணை செய்த இண் டஸ்டிரியல் கமிஷன், தமது ரிபோர்ட்டில் சொல்லுகிறபடி "இந்தியா, அப்ரகம் உண் டாக்கும் தேசங்களுள் முதல் ஸ்தானத்தை வகிக்கின்றது. பீகார் தேசத்து அப்ரகமே இதுவரையில் அதிகமாய் வெட்டியெடுக்கும் சரக்குகளுக்குள், முதல்தரமாயிருக்கின்றது. சிலநாளைக்குமுன்வரையில், இந்த லோகத்தை வெகுவாய் பிரபலமற்ற சிறு வியாபாரிகளே எடுத்து விற்று வந்தனர். பலத்த வியாபாரிகள் சிலர் இவ்வஸ்துவை இப்பொழுது சாஸ்திர முறைப்படி வெட்டியெடுக்க முயற்சி செய்கின் றனர்." ஆகையால் கூடிய சீக்கிரத்தில் இந் தியர்கள் இக்கைத்தொழிலில் சிறந்த லாபத்தை எதிர்பார்க்கக்கூடும்.

பதினைந்து, இருபது வருஷங்களுக்குள் இந்தியாவில் இக்கைத்தொழில் பலப்பட்டதையும், இவ்வியாபாரம் அபிவிருத்தியடைந்ததையும் கவனிப்போம். * 1900 வருஷத்தில் 130 சுரங்கங்கள் வேலை செய்தன. அவற்றில் உழைத்த வேலையாட்கள் 10,000 பேர்; உண்டான சரக்கு 900 டன். இதில் பாதிக்குமேல் நெல்லூரிலிருந்து வந்தது. 1913-14 வருஷங்களில் ஆஜ்மீர், பீஹார், மதராஸ் இவ்விடங்களில் எத்தனையோ புதுச் சுரங்கங்கள் வேலை யாரம்பித்தன. வேலை செய்வோரும் பெருகிவிட்டனர். 1913-14 வருஷத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான வஸ்துவின் தொகை மட்டும்—இந்தியாவிலேயே செலவான வஸ்துவைக் கணக்கிடவில்லை—2700 டன். 1899-ம் வருஷத்தில், 700 டன் அப்ரகம், 9 லக்ஷம் ரூபாய்க்கு விற்பனையாயிற்று. 1913-14 வருஷத்தில் 2700 டன் 45 லக்ஷம் ரூபாய்க்கு விற்பனையாயிற்று. யுத்த ஆரம்பத்தில் வியாபாரம் கொஞ்சம் தளர்வுற்றதானாலும், மறுபடி யுத்தம் நடக்கும்பொழுதே தழைத்துவிட்டது. எப்படியெனில் 1914-15 வருஷத்தில்—அதாவது யுத்தத்தின் முதல் வருஷத்தில்—ஏற்றுமதி சுமார் 28½ லக்ஷம் ரூபாய்தான். 1913-14 வருஷத்தில் நடந்த வியாபாரத்தில் அரைப்பங்கே. 1916-17 வருஷத்தில் வியாபாரம் மறுபடி முன்னிருந்த நிலைக்கு வந்துவிட்டது.

* Modern Review, October. 1918.

1917-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மட்டுமே ரூபாய் 4,82,313 பெறுமான அப்ரகம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயிற்று.

இவ்விதமாய் விருத்தியாகும் வியாபாரத்தை கவர்ன்மெண்டாரும், பொது ஜனங்களும் கைவிடுவார்களென்று எண்ண இடமில்லை. இங்கிலாந்திலும் வியாபாரிகள், இக்கைத்தொழிலின் அபிவிருத்தியின்மேல் கண்ணுயிருப்பார்களென்று நாம் சொல்லவேண்டியதில்லை. இல்லையேல் அவர்களுக்கு இலாபத்தைக் கொடுக்கும் இலக்ட்ரிக் கைத்தொழிலும் வியாபாரமும் தடைபட்டு விசேஷமாய்க் குறையும். இனி அபாரமாய் விருத்தியடையப் போகிற ஆகாய விமானங்களென்ன, கம்பியில்லாத் தந்தியென்ன, மூட்டையிழுக்கும் பெரிய மோடார் வண்டிகளென்ன, யுத்தமுனைக்கு முன் செல்லும் ஆயுதம் நிறைந்த சண்டை வண்டிகளென்ன, இவைபோன்றவற்றில் உபயோகப்படும் யந்திரங்களுக்கு மூலாதாரமாயுள்ள இப்பொருளை விருத்திசெய்யாமல் கைவிடுதல் இயலாது: விருத்திசெய்தே தீர வேண்டியதவசியம். அப்படிச் செய்யும்போது நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் பொது ஜனங்களும், இங்கிலாந்தின் காமன்ஸ் சபையோரும், இந்தியாவின் நன்மையை நாடி இந்தியா தேசத்தாருக்கு அநுகூலமுண்டாகும்படி இத்தொழிலை அபிவிருத்தி செய்வார்களென்று நம்புகிறோம்.

காலஞ்சென்ற பிரதான சிரோன்மணி டி. ஆனந்த ராவ், ஸி. ஐ. ஈ.

The Late Mr. T. Ananda Rao, C. I. E.

[ஸ்ரீமான் டி. என். ஆர். ராகவாசாரியாரவர்கள், பி. ஏ.]

1919-ம் ஜூலை 19-ந் தேதி காலை 7-30 மணிக்கு தேகவியோகமான கனம் ஆனந்தராவ் அவர்கள் நம்மிந்தியாவின் ஸ்ரீமான்களில் ஒருவர். காலஞ்சென்ற ராஜா. ஸர். டி. மாதவ ராவ் கே. ஸி. எஸ். ஐ. அவர்களின் மூன்று குமாரர்களில் இவர்தாம் மூத்தவர். இவர் திருவனந்தபுரத்தில் 1852-ம் மேமீ 15-ந் தேதி பிறந்தவர். இவர் இளம் பிராயத்திலேயே தகுந்த உபாத்தியாயர்களிடம் கல்வி கற்றுப் பிறகு சென்னை இராஜதானிக் கல்லூரி (Presidency College) யில் ஈ. நாம்ஸன் என்ற கல்வி சிரேஷ்டரிடம் வித்தை கற்றுக்கொண்டார். மெட்ரிகுலேஷன், எப். ஏ, பி. ஏ., எல்லாப் பரீக்ஷைகளிலும் முதல் வகுப்பில் தேறினர்.

முதன்முதலில் இவர் இண்டோர் (Indore) சமஸ்தானத்து இளவரசர்கட்கு போதகாசிரியராக நியமிக்கப்பட்டார். சிறிது காலம் இவ்வுத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். ரிவினியூ போர்டில், டிப்டி கலெக்டர் வேலைக்கு வேண்டிய பரீக்ஷைகளைக் கொடுத்திருந்தும் இவரை ஜெனரல் டேலி (General Daly) என்பவர்

காலஞ்சென்ற பிரதான சிரோன்மணி
டீ. ஆனந்தராவ், ஸி. ஐ. ஈ.

வேணுமென்று பொறுக்கியெடுத்து இண்டோருக்கு அனுப்பிவைத்தார். அச்சமஸ்தானத்து சீதோஷ்ண நிலைமை இவரது தேகத்துக்கு ஒவ்வாததனால், இவர் திரும்பவும் மைசூர் சமஸ்தானத்துக்கு வந்து அங்கே 1873-ம் வருஷத்தில் இங்கிலீஷ் துரைத்தனத்தாரின் சபையில், ஒரு உதவி அங்கத்தினராக அமர்ந்தார். 1875 ௵த்தில் அஸிஸ்டெண்டு கமிஷனர் வேலைக்கு நியமிக்கப்பட்டதன்மேல், பெங்களூர், ஹாஸன், கடூர், மைசூர் முதலிய பல ஜில்லாக்களில் வெகு சாமர்த்தியத்தோடு வேலைபார்த்தார். மைசூர் ஜில்லாவின் டிப்டி கமிஷனர் வேலை பார்க்கும்போதுதான், அவ்விடம் உண்டாகியவேலைக்காரர்களின் கலகத்தை யடக்கினதன் காரணமாக, ஜனங்களின் நல்ல அபிப்பிராயத்தையும் பிரீதியையும் சம்பாதித்துக்கொண்டார். கடைகளை மூடிவிட்டுத் திறக்க மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்த கடைக்காரர்களிடத்து அவர் காட்டிய பொறுமையும், சாமர்த்தியமும் அதிகமும் பாராட்டத்தக்கன. கலகக்காரர்களை துப்பாக்கியால் சுடும்படி துரைத்தனத்தார் உத்தரவிட்டிருந்தும் அவ்வாறு செய்யாது, தன்னுடைய வேலைக்காரன் ஒருவனும், தன்னுடைய கையிற் பிடித்த பிரம்பும் இரண்டுமே துணையாக, கலகக்காரர்களுக்கிடையே புகுந்து, தன்னுடைய சாதுர்ய வார்த்தைகளினாலேயே சாந்தப்படுத்தினார்.

கடைகள் உடனே திறக்கப்பட்டன, தெருக்கள் அமைதியுற்றன. அன்றைய தினத்திற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த ராஜாவின் ஊர்வல வைபவமும், யானைகளும், குதிரைகளும் சூழ, அதிக விமர்சையுடன் நடந்தேறியது. சிறிதுகாலம், ராயரவர்கள், அரண்மனையின் மேலதிகாரியாக விருந்தார். பிறகு பிரதான காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். இந்தவேலையை வகித்து வரும்போது, அவருடைய கண்களில் சிறிது உபாதி ஏற்பட்டதன் காரணமாக ரஜாவில் சென்றார். ரஜாவிலிருந்து திரும்பிவந்தவுடன் ஜனத்தொகுதியின் கணக்கெடுப்பதற்காக (Census operations) நியமிக்கப்பட்டார். இந்த வேலையில் அவர் எடுத்த பிரயாசையைக் குறித்து இந்திய ஜனத்தொகுதி கமிஷனர் மிஸ்டர் கெயிட் (Mr. Gait) என்பவர் வெகு சிலாகித்துப் புகழ்ந்துள்ளார்.

ஸ்ரீமான் வி. பி. மாதவராவ், ஸி. ஐ. ஈ. அவர்கள், மைசூர் திவானாக நியமிக்கப்பட்டபோது, ஆனந்தராவ் முதல் மந்திரி ஸ்தானம் வகித்து வந்தார். இண்டோர், திருவாங்கூர் சமஸ்தானங்களுக்குத் திவானாக ஆனந்தராவ் அவர்களை வரும்படி யழைத்தார்கள். ஆனால் அவர் அவைகளை யொத்துக்கொள்ளவில்லை. மைசூர் சமஸ்தானத்தின் திவான் வேலை, தனக்கே எப்படியும் கிடைக்கும் என்று அவருக்கு நிச்சயமான நம்பிக்கை இருந்திருத்தல் வேண்டும்.

ஆனந்தராவ் அவர்கள் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களிடம் முதன்முதல் வேலை கற்றுக்கொண்டவராதலின், அவர்களுடைய விடாமுயற்சியும், நுட்பமான பகுத்தறிவும் உத்தியோக முறையில் கண்டிப்பாய் வேலை வாங்கும் திறமையும் நிரம்ப வாய்க்கப்பெற்றிருந்தார். திவானாக நியமிக்கப்பட்டதன் மேல் இவர் சமஸ்தானத்தில் ஏற்படுத்திய புதிய சீர்திருத்தங்களுள் முக்கியமானது:— "மைசூர் சமஸ்தான உத்தியோகங்கள் முதன் முதலில் மைசூரிற் பிறந்து வளர்ந்தவர்க்கே யுரியன" "Mysore Service for Mysoreans" என்பதே. அதற்கு முன்னால், மைசூர் சமஸ்தானத்தின் பெரிய உத்தியோகங்களுக்குச் சென்னை இராஜதானியிலிருந்து அநேகம் பேர்கள் நியமிக்கப்படுவது வழக்கம்.

ஆனந்தராவ் திவானாக விருந்தகாலத்தில் தான், மைசூர் பொருளாதார கான்பரென்ஸ் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டது. மைசூர் சமஸ்தானத்துக்கே இவர் ஒரு திலகம் போன்று விளங்கினார் என்று சொல்வது அதிகமே யல்ல. இவருடைய பெருந்தன்மையையும், விசேஷ கியாதியையும் முன்னிட்டே மஹாராஜா இவருக்கு அதுவரையிலும் எவருக்கும் கொடுத்திராத, பிரதான சிரோன்மணி என்னும் பட்டத்தை யளித்தார். ஆங்கிலேய கவர்ன்மெண்டாரும் ஸி. ஐ. ஈ. பட்டமளித்தனர்.

ஆனந்தராவ் அவர்கள் திவான் வேலையிலிருந்து நீங்கிய காலத்தில், மஹாராஜா அவர்கள், ராயருடைய திறத்தை பஹிரங்கமாக மெச்சி, மாதம் ஒன்றுக்கு 1250 ரூபாய் விசேஷ பென்ஷனும், மூன்று மாதத்திய முழுச் சம்பளமும் கொடுக்கும்படிக்கும், இதன்றியும் திவான் வேலையிலிருக்கும்பொழுது உள்ள கவுரவங்களில் பலவற்றையும், அவர் ஆயுட் பரியந்தம் அடையும்படிக்கும் உத்தரவிட்டு, சாசுவதமாக அவருக்கு இரண்டு ஸ்ரீகாரரும் ஒரு ஜமேதாரும், ஒரு டபேதாரும், 6 டலாயத்துகளும் சமஸ்தானத்துச் செலவில் ஏற்படுத்தி, சமஸ்தான கெஜட்டில் ஒரு விளம்பரமும் பிரசுரித்தார்.

பென்ஷன் பெற்றானபிறகு ஆனந்தராவ் அவர்கள் அநேக தர்மங்களைச் செய்துவந்தார். அவருடைய தர்மங்கள், வெகு நாட்களுக்கு அவர் பெயரை நிலைநிறுத்தும்படியானவை. அவருக்குக் குழந்தைகள் இல்லை. ஸ்வீகாரம் செய்துகொள்வதில் அவருக்கு இஷ்டமில்லை. ஸ்வீகாரம் செய்துகொள்வது இயற்கைக்கு விரோதமான காரியம் என்பது அவருடைய துணிவு. அவருடைய பத்தினி சென்ற வருஷமே காலஞ்சென்றாள்.

கம்பரும் ஸ்ரீராமபிரானும்

KAMBAN AND SRI RAMA

[ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸாசாரியாரவர்கள், பி. ஏ., பி. எல்.]

ஸ்ரீராமபிரானது திவ்ய சரித்திரத்தைத் தமிழில் பெருங் காப்பியமாகப் பாடியருளிய கம்பர் "கற்பார் இராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ" என்றபடி அப்பரம புருஷனின் உத்தம பக்தராய் நூலைப் பாடுவான் அமைந்தார். கேவலம் பௌராணிகராகமட்டு மிருந்து அந்நூலைப் பாடாது ஸ்ரீராமபக்தனாகப் பாடுவான் துணிந்தது இவர் தாமே கூறியருளிய பாசுரத்தால் போதரும்.

"முத்த மிழ்த்துறையின் முறை போகிய
உத்தமக் கவிகட் கொன்றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"

என்று தனது பக்தியின் பெருமையை வெளியிடுகிறார். ஆனதுபற்றியே கதாநாயகன் நாயகியுடன் ஒற்றுமைப்பட்டு அவர்கள் சுகதுக்கங்களைத் தமது சுகதுக்கங்களாக நினைத்து அவர்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டு பரவசப்பட்டுச் செல்கிறார் நம் கவி. ஸ்ரீராகவன் சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் ஆகியமூன்று தொழில்களையும், செய்யும் ஆற்றலுடைய "முன்னை யாதியா மூர்த்தி" என்பதும் ஸ்ரீஜானகிப் பிராட்டியார் "மூவகை உலகின் அன்னை" என்பதும் இவரது சித்தாந்த மாதலின், அவர்கள் சந்துஷ்டியை அடைந்துழி சகல லோகங்களும் சராசரங்களும் அவர்கள் சரீரமாதலின் சந்துஷ்டியை அடைந்ததாகவும், துக்கப்பட்டுழி துக்கமடைந்ததாகவும் கூறி முறையிடுவர். திருஷ்டாந்தமாக விபீஷணனடைக்கலப் படலத்தில் விபீஷணாழ்வானுக்கு இலங்கைப் பட்டாபிஷேகம் செய்வித்து சக்கரவர்த்தி திருமகன் சந்துஷ்டியை அடைந்த அழகை வருணிக்குமிடத்து,

"தீர்த்தனருளை நோக்கிச் செய்ததோர் சிறப்புப் பெற்றான்
கூர்த்த நல்லறத்தை நோக்கிக் குறித்த தோயாது கொல்லோ
வார்த்தையஃதுரைத் தலோடுந்தனித் தனிவாழ்ந் தே மென்ன
ஆர்த்தன வுலகினுள்ள சராசர மனைத்துமம்மா"

கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.

என்று எம்பெருமான் கொண்ட சந்தோஷம் காரணமாக சராசரங்கள் குதூகலித்தன என்று கூறுகிருர் பாரீர்.

பிராட்டி களங்காண் படலத்தில் யுத்த களத்தில் மூர்ச்சித்துக்கிடந்த ஸ்ரீராமபிரானைப் பார்த்து, பிராட்டி பிரலாபம் செய்ய ஆரம்பித்ததைக் கூறுமிடத்து,

"மங்கையழலும் வானுட்டு மயில்க ளழுதார் மழவிடையோன்
பங்கினுறையும் குயிலழுதாள் பதும மலர்மேன் மாதழுதாள்
கங்கை யழுதாள் நாமடந்தையழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கையழுதாள் இரங்காத வரக்கி மாருந் தளர்ந்த ழுதார்"
பொன்ருழ் குழையா டனையீன்ற பூமாமடந்தை புரிந் தழுதாள்
குன்ருமறையும் தருமமுமெய் குழைந்து குழைந்து விழுந்தழுத
பின்ருதடற்றும் பெரும்பாவ மழுத மற்றென் பிறர்செய்கை
நின்ருர் நின்றபடி யழுதார்"

என்றும் கூறி ஈசுவரனது சர்வ வியாபகத்துவத்தை நிரூபிக்கிருர் நம்புலவர் பெருமான்.

இவ்விதமே பிராட்டி அக்னிப் பிரவேசம் செய்யும் சமயம்,

தீயிடை யருகிற் சென்று தேவர்க்கும்
தாய்தனி குறுகலுந் தரிக்கிலாமையால்
வாய்திறந் தரற்றின மறைக ளுன்கொடும்
ஓய்வினல் லறமுமற் றுயிர்கள் யாவையும்

என்றும்,

வலம் வருமளவையின் மறுகிவான் முதல்
உலகமு முயிர்களு மோல மிட்டன"

என்றும்,

இந்திரன் றேவியர் முதல வேழையர்
அந்தர வானினின் றரற்றுகின்றனர்
செந்தளிர்க் கைகளாற் சேயரிப் பெருஞ்
சுந்தரக் கண்களை யெற்றித் துள்ளினர்'

என்றும்,

சராசரங்கள் வருத்த முற்றன என்பதைக் கூறுவதையும் உற்று நோக்குவீர்.

இவ்விதம் ஸ்ரீராகவன்பாலும் ஸ்ரீ ஜானகிபாலும் மிகுந்த பக்திபண்ணி எழுதப்புகுந்த கம்பநாடர் ஸ்ரீராகவனது "எல்லையில் பெருங் குணங்களில் எதை முக்கியமாய்ப் பாராட்டுகின்றனர்? எக்காரணம் பற்றி அவ்விதம் பாராட்டுகின்றனர்? அதை அவர் கற்பனு சக்திகளுடன் பெருமை பாராட்டும் அருமை எவ்விதம்? என்று சில கேள்விகள் கேட்டுக் கொண்டு அவைகளுக்கு விடை ஒருவாறு சிற்றறிவிற் கெட்டினமட்டும் பகர்வான் துணிந்தாம்.

வட மொழியில் ராமாயணம் எழுதியருளிய வால்மீகநாதனும் ஸ்ரீராமபிரானை "ராமோ விக்ரஹவாந்தர்ம:" என்பர். அக்கருத்தையே உட்கொண்டவராய்க் கம்பரும் அப்பாம புருஷனது உத்தமோத்தம குணங்களை வருணிக்கு மிடத்து அவனது "தரும" சவரூபத்தையே முன்னிலைப்படுத்திக் கூறுகிருர். சில உதாரணங்கள் வருமாறு.

வசிஷ்டர் கூற்ருக,

'புறத்து காமினி யொரு பொருள் புகல்கின்ற தேவனே
அறத்தின் மூர்த்திவந் தவதரித்தா னென்பதல்லால்'

எனவும்

"வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் யாஞ்செய்த நல்லறப் பயனென விருப்பார்"

எனவும்

சூர்ப்பனகையின் கூற்ருக,

"இருவர்மானிடர் தாபதரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மத மேனியர்
தருமநீரர் தயாதன்காதலர்
செருவினேரு நிருதரைத் தேடுவார்

என்றும்,

ஆஞ்சநேயர் கூற்ருக

'போயின திசைசடோறுமரனேடு புல்லுமெல்லாம்
சாய்வுறுந் தொழுவபோலி வ்விவர்களோதருமமாவார்

எனவும்

சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ்சுறுவடிவர் மறலியஞ் சுறுவிதலர்

எனவும்

'நீதியார் கருணையின் னெறியினர் செறிவயித்
'பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையர்.

எனவும்

செங்கண்விற் கரத்திராமனத் திருநெடுமாலே
இங்குதித்தன னீண்டற நிறுத்துதற் கின்னும்.

எனவும்

வேதமுமறனும் சொல்லுமெய்யற மூர்த்திவில்லோன்'

எனவும்

வாலியின் கூற்றாக

"தருமமே தவிர்க்குமோ தன்னைத்தானரோ"

எனவும்

மறைகளுமுனிவர்யாரு மலர் மிசையோனும் மற்றைத்
துறைகளின் முடிவுஞ் சொல்லும் துணிபொருடணி விற்றூக்கி
அறைகழலிராமனாகி யறநெறி நிறுத்தவந்த
இறையொருசங்கையின்றி எண்ணு தியெண்ண மிக்கோய்

எனவும்

கும்பகர்ணன் கூற்றாக

'அறப்பெருந்துணைவர் தம்மையபய மென்றடைந்தவுன்னை

என்றும் மறித்தும் மறித்தும் கூறி ஸ்ரீராமபிரான் " தர்மவிக்ரஹம் " என்று முதனூலிலெழுதிய வால்மீக நாதன் கருத்தை வலியுறுத்துகிறார்.

பரித்ராணய சாதூனும் விநாசாயச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே."

என்று பகவத் கீதையில் கூறியபடி துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்ய அவதரித்த பிரபு தர்மமே உருவெடுத்தது என்னும்படி நடந்து கொண்டதும் ஏனைய அவதாரங்களிலும் ஸ்ரீராமாவதாரம் ஏற்றம் பெற்றதென்றும் இக்காரணம்பற்றி ஆன்றோர் கூறுவர். இவ்விதம் தர்மத்தைப் பரிபாலனம் செய்வதிலும் "தருமமே ஜயம்" என்று கடைப்பிடித்து ஒழுகுவதிலும் ஓரே புத்தியாய் தர்மத்தை முன்னிட்டு நடப்பதிலும் சுகமேற்படுமேயன்றி சங்கடங்கள் நேரிடா என்றும் அக்காரணம்பற்றி தருமம் கைக்கொள்வதில் ஒரு புருஷனுக்கு சிரமம் ஏற்படுவதில்லை யென்றும் பலர் எண்ணியிருத்தல் கூடும். இது முற்றிலும் தவறு. தர்ம பரிபாலனம் செய்வதில் நேரிடும் சங்கடங்கள் பல. அக்காரணம் பற்றியே "தர்மசங்கடம்" என்றும் வழக்கு ஏற்பட்டது போலும். இவ்விதம் "தர்ம பரிபாலனம்" செய்வதில் ஏற்படக்கூடிய சங்கடங்கள் நேர்ந்தும் தர்மத்தைக் கைவிடுவதும் அநுகூலங்கள் நேர்ந்துழி கைப்பிடித்தலும் முறையாகாது. ஸ்ரீராகவனைப் பிரிவதில் துயரமுற்று அவன் காட்டுக்குச் செல்வதை ஆற்றகிலாது அவனைப் பின் தொடரும் சுமந்திரரைப் பார்த்து சக்ரவர்த்தி திருமகன் கூற்றாக இக்கருத்தை கம்பநாடர் அருளிச் செய்கிறார்.

"முன்பு நின்றிசை நிறீஇ முடிவுமுற்றியே
பின்பு நின்றுறுதியைப் பயக்கும் பேரறம்
இன்பம் வந்துறு மெனினி னியதாயிடைத்
துன்பம் வந்துறு மெனினிற்றுறக்கலாகுமோ."

இவ்விதமே ஸ்ரீராமபிரானுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்து முன்னோர் வழி பின்பற்றி தான் வானப்பிரஸ்தம் செய்வதாய் உத்தேசித்திருந்த கருத்தை வெளியிட்டு மந்திரிகளது அபிப்பிராயம் தசரத சக்ரவர்த்தி கேட்கவும் சுமந்தரர் கூற்றாக கம்பர் அடியிற் கண்டபடி வரைந்துள்ளார்.

உறத்தகும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயென்னுஞ் சொற்சுடு முன்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலா வறத்தையும் மறப்பது வழக்கன்று
அறத்தி னூங்கினிக் கொடியதெனலாவதியாதோ"

என்று "அறத்தின் கொடுமை"யை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். சிற்றன்னை ஆணையால் நாடு துறந்து காடேகின பிரபு தன்னைக் கண்ணினுமினிய ஆசாரியன், சகோதரர்கள், அன்னைமார், மந்திரிகள் எவ்வளவோ நயந்து திரும்பி ராஜ்யத்துக்கு வரும்படி கேட்கவும் செவிகொடாது "மிகவும் கொடியவன்" என்று சொல்லும்படி தர்மத்தை கடைப்பிடித்துச் சென்ற உத்தமமான மர்மம் இந்த ராமாயணத்தில் நிதர்சனமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அறுபதினாயிரம் வருஷம் அரசாண்ட சக்ரவர்த்தி மகப்பேறின்றி ரிசிய சிருங்கர் அநுக்கிரகத்தால் புத்ர காமேஷ்டி செய்து அரிதிற் பெற்ற தன்னை இழந்தால் பிராண வியோகம் செய்தல் நிச்சயம் என்று தெரிந்தும் அதை எதிர்பாராது தர்மத்தைக் காப்பாற்றின அருமையை என்னவென்று சொல்வோம். இவ்விதம் சக்ரவர்த்தித் திருமகன் நிஷ்கண்டகமாய் தன் தாயரை எதிர்பாராது காட்டிற்குச் செல்லும் விபரத்தைச் சொல்லுமிடத்து தசரத மகாராஜனும்.

"நெகுதற் கொத்த நெஞ்சு நேயத்தாலேயாவி
உகுதற்கொத்த உடலு முடையேன் உன்போலல்லேன்

என்று எம்பெருமானது தர்ம பரிபாலனம் செய்வதிலுள்ள ஆதுரத்தைக் குறித்துச்

கலக்கம்பு தின்றும் காடை காட்டிலே.

சொல்லித் தன்னால் இத்தனை இடைஞ்சலுடன் தர்ம பரிபாலனம் செய்தல் அசாத்தியம் என்று காட்டுகிறார்.

இதே விஷயத்தைப் பிராட்டியும்

"முடியா முடிமன்னன் முடிந்திடவும்
படியேழு கெடுந் துயர் பாவிடவும்
மடியா நெறிவந்து வனம்புகுதும்
கோடியான் வருமென்று குலாவுவதோ"

என்று மிகுந்த பச்சாத்தாபத்துடன் கூறி ஸ்ரீராகவனது "தர்ம பரிபாலனத்தின்" ஏற்றம் காட்டுகிறாள்.

தான் காட்டிற்கேகில் அக்காரணத்தை முன்னிட்டு சக்ரவர்த்தி மிகுந்த துயரமுற்று பிராணனை விடுதல் கூடுமென்றும அவரை ஆற்றித் தேற்றல் உன் கடமை என்றும் கூறி தன்னுடன் புத்திர வாத்ஸலயத்தால் காடேறுதல் தருமமன்று என்று கௌசலாதேவிக்கு தர்மத்தின் சூக்ஷ்மத்தை பெருமாள் தெரிவிக்கிறார்.

என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத்தாதுடன்
துன்னுகானந் தொடரத் துணிவதே
அன்னையே யறம் பார்க்கிலையா மன்றே.

வசிஷ்டரிடமும் இவ்விதமே கூறுகிறார் பிரபு.

"அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுதல்
என்னது கடன் அவனிடரை நீக்குதல்
நின்னது கடன் இது நெறியு மென்றனன்
பன்னகப்பாயலுட் பள்ளி நீங்கினான்"

என்று தருமத்தின் லக்ஷணத்தை அதிகாரத்தோடு எடுத்துக்காட்டுகிறார்.

"தோன்றிய நல்லறநிறுத்தத்" தோன்றினானதலின் இதே கருத்தை, தன்னைத் திரும்பவும் நாடுவந்து பட்டாபிஷேகம் பெற்று ராஜியபரிபாலனம் செய்யவேண்டிய பரதனது வேண்டுகோளுக்கு உத்தரமாக வெளியிடுகிறார் ஸ்ரீராமபிரான். (இன்னும் வரும்).

தேடாத செல்வம்

ஆண், பெண் இரு பாலாரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. உலக நடையைப் பெரும்பாலும் தழுவி, எல்லா வகுப்பினருக்கும் அறிவூட்டக்கூடியது. பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உபயோகமுள்ளது. சோம்பலின் தீமையும், சூதாட்டத்தின் முடிவும், லாட்டரி சீட்டின் சூதுகளும், பொறுமையின் பெருமையும் கதைப்போக்கிலேயே ஹாஸ்யமான பாஷையில் வர்ணிக்கப்பட்டுள்ளன. அணா 3.

தமிழ் நூல் வரலாறு

HISTORY OF TAMIL LITERATURE

[ஸ்ரீமான் எஸ். அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள், எம். ஏ., எல்.டி.]

தமிழ் நூல் வரலாறு என்று பெயரிட்டு எழுதப்படும் இச் சிற்றுரை தமிழ் நூல்களின் வரலாற்றைப்பற்றி ஒன்றும் உரைப்பதன்று, அத்தகைய வரலாறு இன்னும் அமைந்திலதென்பதையே தெளிவாகக் காட்ட எழுந்ததாகும். நேற்றுத் தோன்றிய மொழிகட்கெல்லாம் நூல் வரலாறுகள் அளவில ஏற்பட்டிருப்பவும், பல்லாயிர ஆண்டுகளாக நிலவிவரும் தமிழ்மொழிக்கு நூல் வரலாறு ஒன்றும் இன்னும் அமையாதிருத்தல் ஆச்சரியத்திற்கிடமாயிருக்கின்றது. தக்க நூல்களில்லாத மொழிகட்கு நூல் வரலாறு அமையாதிருத்தல் இயல்பு: உலகமெங்கும் புகழப்படும் உயர்ந்த நூல்களையுடைய தமிழ் மொழிக்கு நூல் வரலாறு அமையாதிருத்தல் ஆச்சரியத்தினை விளைக்காதென் செய்யும்!

ஆயின் தமிழ்க்கு நூல் வரலாறு இல்லையோ எனின், அங்ஙனம் அறுத்துச் சொல்லுதற்கு மில்லை. ஸ்ரீமான் பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் எழுதிய (A Primer of Tamil Literature, 1904) தமிழ் நூல் வரலாறு முதற்புத்தகமொன்று உளது. இது தோன்று முன்னரே கால்ட்வெல் ஆசிரியர் தாம் எழுதிய (A Comparative Grammar of the Dravidian Languages, second edition, 1875) திராவிட பாஷை ஒப்புநோக்கிலக்கணத்திற்கு முன்னுரையில் தமிழ் நூல் வரலாற்றைப்பற்றிச் சுருக்கமாகக் கூறினார். காசிச் செட்டி யென்பவர் எழுதிய (The Tamil Plutarch) ஒரு வரலாறும உண்டு. இவையெல்லாம் அங்கில மொழியில் எழுதியவை.

தமிழில் எழுதப்பட்டனவும் சில உள. காசிச் செட்டி எழுதியதை விஸ்தரித்து அ. சதாசிவம் பிள்ளை எழுதிய பாவலர் சரித்திர தீபகம் (1886) ஒன்று. இது அகாராதியாகப் புலவர் பெயரையும் அவர் செய்த நூல்களின் பெயரையும் அவரைப்பற்றித் தெரிந்த சில விவரங்களையும் தருவது. சபாபதி நாவலர் எழுதிய திராவிடப் பிரகாசிகை (1899) தமிழ் மொழியி

லுள்ள நூல்களுள் சிறந்தவற்றைப்பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் நவீன முறையிற் கூறும் அருமையான நூல். யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமார சுவாமிப் புலவரவர்கள் இயற்றிய **தமிழ்ப்புலவர் சரித்திரம்** (1917) முன்னே கூறிய அ. சதாசிவம் பிள்ளை வரலாறு திருத்திப் புதுக்கி விளக்கியது போன்றுளது. இதில் தவறுகள் இல்லையென்றே சொல்லலாம். ஆயினும் புலவர் பெயர்களை அகராதி முறையில் எடுத்து வரலாறுரைத்தல் முறையாகாது.

இவையன்றி, சி. வை. தாமோதரம் பிள்ளை **வீரசோழியத்திற்குத்** தாம் எழுதிய பதிப்புரை (1882)யில் தமிழ் நூல் வரலாற்றை ஒருவாறு காலப்பிரிவுகளாக வகுத்துக்கூறினர். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தம் **தமிழ் மொழி வரலாற்றில்** (1903) தமிழ் நூற் பரப்பைப்பற்றி ஓர் 'உபந்நியாசம்' எழுதினர். இவர்க்கு முன்பே ஸ்ரீமான் திருமலைக்கொழுந்துப் பிள்ளையவர்கள் தமிழ் நூல் வரலாறு எழுதுவான்றொடங்கிச் சிறிது பாகம் **சித்தாந்த தீபிகை** யென்னும் அங்கில மாசப் பத்திரிகையில் வெளியிட்டார். அது முடிவு பெறுதொழிந்தது. மற்று, அச் **சித்தாந்த தீபிகை**யிலும், கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிகை யென்னும் அங்கிலப் பத்திரிகையிலும், (The Indian Antiquary) இந்திய புராதன கலைஞன் என்னும் அங்கிலப் பத்திரிகையிலும், (The Tamilian Antiquary) தமிழ்ப் புராதன கலைஞன் என்னும் அங்கில திராவிடப் பத்திரிகையிலும், **செந்தமிழ்** என்னும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பத்திரிகையிலும், இவ்வுரை தோன்று **விவேக போதினி** என்னும் இப்பத்திரிகையிலும், **விவேக சிந்தாமணி** யென்னும் மாசப் பத்திரிகையிலும் தமிழ் நூல் வரலாறு சம்பந்தமாக எழுதியோர் பலர். அவரெல்லாம் ஒவ்வொரு காலத்தைப்பற்றியாதல் ஒவ்வொரு புலவரைப் பற்றியாதல் தத்தம் ஆராய்ச்சியிற் புலப்பட்டனவற்றை எழுதிவைத்தனர். இன்னும், **விநோதரஸ மஞ்சரி** ஒருவாறு புலவர் வரலாறு கூற எழுந்த நூலேயாகும். ஆயினும் அதனையெழுதியவீராசாமிச்செட்டியார்உண்மையைக் கவனியாது விநோத ரசத்தையே விசேஷமாகப் பாராட்டினர். **பன்னிரு புலவர் சரித்திரம்** சிறந்த பன்னிரண்டு புலவர்களைப் பற்றிச் சொல்லும் நூல். அதுவும் ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டதன்று. முருகதாச சுவாமிகள் இயற்றிய **புலவர் புராணமும்**, அதன் பெயர் குறிப்பதுபோலவே புராணமாய் ஆக்கியோர் பல்லிடத்தும் கேட்ட கதைகளையெல்லாம் செய்யுள் நடையில் தொகுத்துரைத்த நூலாகும். **தமிழ் நாவலர் சரிதை** புலவர் அவ்வக்காலத்துப் பாடிய பாடல்களைச் சந்தர்ப்ப பூர்வமாகத் தரும் ஒரு நூல். அதில் அந்தக கவி வீரராகவ முதலியார்க்குப் பின் தோன்றிய கவிகளின் பாடல்கள் காணப்படவில்லை யாதலால், அது சுமார் மூந்நூறு வருடங்களுக்கு முற்பட்டது என்னலாம். இந் நூலின் முறையையே பற்றியதாய்ப் பிற்காலத்து அறுபது வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட **தனிப்பாடற்றிரட்டு** அவ்வளவு சிறந்ததாகாது. **தமிழ் நாவலர் சரிதை**யிற் பொய்புரட்டுகள் சிறு பான்மையே காணப்படும். இதில் அவை மிகுதியாக உண்டு. இதனை அதிகமாக விரித்துத் **தனிச் செய்யுட் சிந்தாமணி** யென்றொருநூலைச் சில ஆண்டுகளின் முன்னர் ஒருவர் வெளியிட்டனர். மற்றுப் புலவர் பலருடைய சரித்திரங்கள் தனித்தனியாய்ப் புத்தகமாக வெளிவந்துள்ளன. அவ்வாறு வந்தவைகளுள் சில, திருவள்ளுவர், அவ்வையார், இடைக்காடர், பொய்யாமொழிப் புலவர், ஒட்டக்கூத்தர், கம்பர், அருணகிரி நாதர், வில்லிபுத்தூரர், நக்கீரர் என்றிவர் சரித்திரங்கள். ஆழ்வார்கள் சரித்திரம், சந்தான குரவர் சரித்திரம் முதலியவற்றைத் தொகுத்துரைக்கும் நூல்களும் உண்டு. இவையேயன்றித் துரைத்தனத்துக் கையெழுத்துப் பிரதிப் புஸ்தகாலயத்தி லிருந்து அவ்வப்போழ்து வெளிவரும் நூல் விவரணங்களில் தமிழ் நூல் வரலாற்றைப்பற்றிச் சில அரிய விஷயங்கள் பொதிந்திருப்பது முண்டு.

தமிழ் நூல்களைப்பற்றி இத்தனை நூல்களிருப்பவும், தமிழ் நூல் வரலாறொன்றும் இன்னும் அமைந்திலதென்று முன் உரைத்தது பொருந்துமோ எனின், பொருந்தும். தமிழ் நூல் வரலாறென்று சொல்லத்தக்கது அங்கில முதலிய மொழிகளுக்கு அமைந்த வரலாறு போன்ற வரலாறே யாகும். மற்று, இம் மேற் குறித்த நூல்க ளனைத்தும் போலி

கலப்பணத்தைப் பார்க்கிலும் ஒரு கிழப் பிணம் நல்லது.

களே. இதனால் அவை பயனற்றன வென்று சொல்லியவா றன்று. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைக் கருதி எழுதியதே. அவையனைத்தையும் நோக்கியும்நன்மாணாக்கனுக்குத் திருப்தி பிறத்தலில்லையாகலின், தமிழ் நூல் வரலாறொன்று வேண்டப்படுவது ஒருதலை.

இம் மேற் குறித்த நூல்களில் குற்றங் குறைகளுண்டு. ஆசிரியர் பெயர்கள் நூற்பெயர்கள் தடுமாற்ற முற்றிருக்கும். ஆசிரியர் பெயர்களை மாற்றி யெழுதுவதைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்லலாகாது. உதாரணமாக, யாப்பருங்கலக் காரிகை யாசிரியர் அமிர்தசாகரரென்றே இதுவரை வழங்கிவந் திருக்கின்றனர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவராதி உரையாசிரியர் பதிப்பாசிரியர் அனைவரும் அமிர்த சாகர ரென்றே எழுதி வைத்தனர். யாப்பருங்கலப் பாயிரத்து,

அளப்பருங் கடற்பெய ரருதவத் தோனே

என்று குறிக்கப்பட்டவர் அமித சாகரர். 'அளப்பரும்' என்பது 'அமித' என்பதன் நேர் மொழிபெயர்ப்பாகும். ஆதலின் அவர் பெயரை அமுதசாகரரென்றாதல் அமிர்தசாகரரென்றாதல் எழுதுவது தவறேயன்றோ. இவ்வகைப் பிழைகள் ஏகதேசமா யிருக்கும். அவை திருத்தமுறுதலும் ஒரு நாளி லாவதன்று. மற்று, ஓராசிரியர் செய்த நூலை வேறோராசிரியரதாகக் கூறுதல் உடனே நீக்கவேண்டிய பிழை. நூல்களைநேரிற் பார்த்தபின் அவற்றின் வரலாற்றை எழுதப் புகுவராயின் இப் பிழை தானே நீங்கும்.

நூல் வரலா றெழுதுபவர் பக்ஷபாதமின்றி எல்லாப் புலவரைப் பற்றியும் அவர் நூலைப் பற்றியும் எழுதவேண்டும். ஒரு புலவரிடத்துத் தமக்கு அருவருப் பிருப்பின், அவரைப்பற்றி யெழுதித் தம் அருவருப்பிற்குக் காரணத்தை விளங்க உரைக்கலாம். தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் அருட்பா இராமலிங்கம் பிள்ளையைப் பற்றி ஒன்றுங்காணப்படாமை அந்நூற்குக் குறையே. அவர் சரித்திரம் கூறப்படாமல் தமிழ்நூல் வரலாறு எப்படி நிறைவு பெறும்!

இன்னும் நூல்வரலா றெல்லாம் காலக் கிரமத்தையே கிரமமாகக்கொண்டு எழுதப்படல் வேண்டும். தமிழ்ப்புலவர் சரித்திரம் போல் அகராதி யொழுங்கை அநுசரித்திருப்பின் அவைபெரும்பயன்செய்யா. ஸ்ரீமான் பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் தமிழ் நூல் வரலாறு காலக்கிரமத்தை யநுசரித்து எழுதப்பட்டதே. அது மிகச் சுருங்கி யிருப்பது அதன் முக்கியகுறை.

தமிழ்நூல் வரலாறு எழுதப்புகுவோர் ஒருவராயினும் பலராயினும் அவரிடத்து மேற்குறித்த நூல்களனைத்தும் இருத்தல் வேண்டும். அன்றியும், தமிழில் அச்சிட்டு வழங்கும் நூல்களனைத்தும் கையெழுத்துப் பிரதிகளாயுள்ளவை யனைத்தும் அவர்க்குப் பார்வைக்கெட்டுவனவாயிருத்தல் வேண்டும். அன்றியும் தமிழரசர் சம்பந்தமாகச் சிலா சாஸனங்களாற் றெரிவனவும் தாமிர சாஸனம் நாணகமென்றிவற்றாற் றெரிவனவும் கிரேக்க பாஷை முதலிய பாஷைகளில் எழுதப்பட்டனவும் இன்னவென்று அவர் அறிந்து கொள்ளவேண்டும். அன்றியும், அங்கிலம் பிரெஞ்சு முதலிய நாகரிகஞ் சிறந்த பாஷைகளில் நூல் வரலாறு எழுது முறைகளை நன்கு படித்தறிதல் அவர்க்கு அத்தியாவசியகமாகும். இவை யெல்லாம் தமிழ்நாட்டில் ஒருவர்க்கே அமைதல் அருமை, இவை எளிதிலமையப்பெறும் அயல் நாட்டார் பிறமொழியாளராகலின் தமிழ் நூல் வரலாறு எழுதுதற்குத் தகுதி பெறார். இவை தமிழ் நாட்டில் ஒருவர்க் கமையாதாயின், பலர் கூடியாயினும் எழுதுதல்தான் நெறி.

கற்பூரத் தைலம் :—கற்பூரத் தைலமென்பதொருவகை எண்ணெய். அது வர்ணங்களுக்கும் மெருகுகளுக்கும் உபயோகமாகின்றது. நெடுநாளாக அது அமெரிக்காவிலிருந்து நமக்கு வந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவில் தேவதாரு மரத்துக் குங்கிலியத்தைப் பட்டியிற் காய்ச்சிப் புகைநீராக வடித்துக் கற்பூரத்தைலமும் குங்கிலியமும் இந்தியாவில் ஏற்கெனவே செய்துகொண்டிருக்கிறார்கள்; வியாபாரத்திற்குப் போதுமான அளவும் செய்கின்றார்கள். இப்பொழுது இந்தியச் சாம்பிராணியிலிருந்து மேற்சொல்லிய கற்பூரத் தைலமிறக்க வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வாறு கிடைக்கும் எண்ணெய் கொஞ்சமானாலும், இந்தியர்களுக்கு மிகப் பயன்படும். ''பாஸ்வெல்லி யாஸெர் ஆடா'' என்னும் மரம் மத்திய இந்தியக் காடுகளில் வரட்சி மிகுந்த பிரதேசத்தில் விஸ்தாரமாக இருக்கின்றது. இந்த மரத்தைக் கொத்திவைத்து, அதினின்று வரும் பாலைத் திரட்டி யெடுப்பதே மேற்சொல்லிய சாம்பிராணி யென்னும் நறும் பிசினாகும். கொத்தின இடங்களினின்று கசியும் பிசினில் ஒருவிதமான கற்பூரத் தைலமும், குங்கிலியமும், பிசினும் சேர்ந்திருக்கின்றன.

கலம் குத்தினாலும் பதர் அரிசி ஆகாது.

டாக்டர் ரவீந்த்ரநாத் டாகூர்

Dr. RABINDRANATH TAGORE

[ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியரவர்கள், பி. ஏ., பி. எல்.]

கிரீஸ் தேசத்தின் நாகரிகம் மிகவும் உயர்ந்ததென்றும் அதன் சாராம்சங்களைப் பற்றியிருப்பதால்தான் இப்பொழுது கோலாஹலமாக விளங்கும் மேனாடுகள் நாகரிக பரிஷ்காரத்தை அடைந்திருக்கின்றன என்பது சரித்திர ஆராய்ச்சி செய்தவர்கள் ஒத்துக்கொண்ட விஷயம். அந்த நாகரிகத்தின் உயர்ந்த அம்சங்களை எல்லாம் விவரிப்பது அஸாத்யமானாலும் முக்யாம்சங்களை எடுத்துரைக்கிறேன். கிரீஸ் தேச மனிதர்கள் இந்திரிய கோசரமான இயற்கைஅழகுகளின் உணர்ச்சி, பூர்ணமாய்ப் பொருந்தினவர்களென்றும், அவ்வழகுகளை நன்றாக வெளியிடுவதில் சக்தி பொருந்தினவர்களென்றும் அவர்கள் தேசசரித்திர மூலமாகவும் அவர்கள் நாட்டிற்கு அலங்காரமாகவிளங்கின மகா கவிகளின் வாக்கியங்களாலும் தெரிகின்றன. அவர்கள் கொண்டாடின தேவதைகளும் மனித ரூபமாகவும் அதிகஅழகுடனே ஜ்வலிப்பதாகவும் இருப்பதாக அவர்கள் கொள்கை என்று அவர்கள் தேசத்திலிருந்த காவ்யங்களாலும் சில்ப சித்ரவிமர்சைகளாலும் தெரியவருகிறது. உலகத்தில் இயற்கை அழகுடைய வஸ்துக்கள் என்னமாதிரியாக இருக்கின்றனவோ, அந்த மாதிரியாகவே வர்ணிப்பதும் சித்திரங்களில் எழுதுவதும் சில்பங்களால்வெளிப்படுத்துவதும் வழக்கமாக அந்தநாகரிகத்தில்இருந்திருக்கிறது. நம்முடைய நாகரிக முறைகளை நாம் கவனித்துப் பார்த்தோமேயானால் நம்முடைய நோக்கங்கள் வேறு மாதிரியாகவே இருந்து வந்திருக்கின்றன. இந்த விசாலமான தேசத்தில் ஆகாயத்தை யளவிய மலைகளும், பொங்கி வரும் கடல்போல விரிந்தஆறுகளும், உயர்ந்து வளர்ந்த மரங்களும் மனிதனுடைய நோக்கங்களை மிகவும் விசாலப்படுத்தி அந்தர்முகமான ப்ரவிருத்திகளும் அனுபவங்களும் அதிகமாகும்படியான மனோபலத்தைக் கொடுத்தன. ஆகையால்தான் நம்முடைய தேசத்தில் யோகிகளும் ஞானிகளும் பக்தர்களும் கவிகளும் வித்வான்களும் ஈச்வர ஸ்வரூபத்தையே நாடி அனாத்யநந்த திவ்ய மங்கள ஸ்வரூப வைபவங்களை யோகஜ ப்ரத்யக்ஷத்தால் உணர்ந்து அதையே வாக்கியங்களாலும் கீதங்களாலும் சில்பசித்ரங்களாலும்வெளியிட்டிருக்கிறார்கள். இயற்கை யழகுகளை உணர்ந்து வெளியிடுவதுடன் நின்றுவிடாமல், அந்த அழகுகள் எந்த பூர்ண ஸௌந்தர ஜ்யோதிஸௌடைய அம்சங்களாக இருக்கின்றனவோ அதை ஒவ்வொரு இயற்தை யழகிலும் கண்டுகளித்து வெளியிட்டிருக்கிறார்கள். "சாந்தம், சிவம், சுந்தரம்" என்று ஈச்வர ஸ்வரூபத்தை அறிந்து வர்ணித்து மகிழ்ந்த மகான்களைப்பற்றி எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. யோக சமாதியால் அறிந்து ஈச்வர ஸ்வரூபத்தை வெளியிட்டபடியால்தான் நம்முடைய தேவவிக்ரகங்கள் கிரீஸ் தேசத்தில்போல மனித உருவமாகவே எப்பொழுதும் இல்லாமல் விசித்திர வைபவங்கள் பொருந்தி இருக்கின்றன. பகவத்கீதையில் கிருஷ்ண பகவான் காண்பித்த விச்வரூபத்தின் மஹிமை நம்முடையதேசம் நம்முடைய நாகரிகம் தவிர வேறு எவ்விடத்திலும் இவ்வுலகில் காணமுடியாது. அதேமாதிரியாக நம்முடைய காவ்யங்களிலும் இயற்கை யழகுகளை மட்டும் வர்ணிக்காமல் மனதில் விளங்கும் ரஸானுபவங்களையும் லோகாந்தர ஸுகங்களையும்

(இதன் தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்க.)

கலியாணச் சந்தடியில், தாலி கட்ட மறந்தானும்.

குருட்டுச் சிறுவன்

(Based on "The Blind Boy" by Colley Cibber.)

[ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம் பிள்ளை
அவர்கள் பி. ஏ.]

ஒளி யென்பதிது வென்றே
    உரையீரே பெருமானே,
ஒளியின் றன்மையை ஐய!
    ஒருகாலும் அறியேனே!
ஒளியின் றன்மையை ஐய!
    ஒருகாலும் அறியேற்கு
ஒளியினால் வருநன்மை
    உணர்த்தீரே பெருமானே.

கண்ணினிற் காண்பன
    கணக்கில மொழிகுவீர்!
மண்ணினின் ஞாயிற்றின்
    மணிக்கதிர் புகழுவீர்!
மண்ணினின் ஞாயிற்றின்
    மணிக்கதிர் வெயிலன்றி
எண்ணிடிற் பகலிரா
    வியற்றுமா றெங்ஙனே?

உறங்கேனேற் பகலாகும்
    உறங்கினா லிரவாகும்
கறங்கு நீர் சூழ் ஞாலம்
    கண்ணிலேற் கெம்மானே.
கறங்கு நீர் சூழ் ஞாலம்
    கண்ணிலேன் ஒருகாலும்
உறங்கேனேல் ஓவாத
    பகலாகும் உடையானே.

கட்டழ கறியாத
    கண்ணிலேற் காகநீர்
நெட்டுயிர்ப் புற்றுளம்
    நெகிழுவ தென்கொலோ!
நெட்டுயிர்ப் புற்றுளம்
    நெகிழற்க அம்மானே;
கட்டிழ வெனக்கில்லை
    காணாத பொருளினால்.

ஆதலிற் கிட்டாத
    அரும்பொருள் வருத்தற்க.
பூதவத் தேகாட்சிப்
    புலனிலாச் சிறுவனே.
பூதலத்தே காட்சிப்
    புலனிலே னாயினும்
மாதவத் தரசென
    மனம்மிக மகிழ்வனே.

THE BLIND BOY

O say what is that thing called light,
  Which I must ne'er enjoy;
What are the blessings of the sight,
  O tell a poor blind boy !

You talk of wondrous things you see,
  You say the sun shines bright;
I feel him warm, but how can he
  Or* make it day or night ?

My day or night myself I make
  Whene'er I sleep or play;
And could I ever keep awake,
  With me 'twere always day.

With many sighs I often hear
  You mourn my hapless woe ;
But sure with patience I can bear
  A loss I ne'er can know.

Then let not what I cannot have
  My cheer of mind destroy ;
While thus I sing, I am a king,
  Although a poor blind boy.

* *Or*, in prose, *either*. ‡ *Ever* here means *always*.

சக்திதத்வ போதினி

PHYSICS

[ஸ்ரீமான் ஆ. ஸி. கஸ்தூரிரங்க ஐயரவர்கள், பி. ஏ., எல். டி]

காந்தசக்தி (1) அதன் தன்மை

மருந்துச் சரக்குகள் விற்கும் கடையில் காந்தக்கல் என்று கேட்டால் ஓடுபோல் மங்கல் சிவப்பாகவுள்ள ஒரு துண்டை எடுத்துக் கொடுப்பான். இது சில மருந்துகளுக்கு உதவும். இந்தக் கல்லை எடுத்து இருப்புப் பொடிகளில் தோய்த்தால், அவைகளில் பல இதில் ஒட்டிக்கொள்ளும். இக்கல்லில் உள்ள, இரும்பை ஒட்டிக்கொள்ளச் செய்யும் ஆற்றலுக்குக் **காந்த சக்தி** என்று பெயர். இக்கல்லுக்கே இதற்காகத்தான் காந்தக்கல் என்று பெயர் வந்தது. இம்மாதிரி கற்களை பூமியிலிருந்து வெட்டி எடுக்கலாம். சில ஊர்களில் சிற்சில வேளைகளில் இரவில் காணப்படும் எறி நக்ஷத்திரங்களில் மிகுந்து விழும் இரும்புபோன்ற வஸ்துக்களும் காந்தக் கற்களாக விருக்கும். இக்கல்லை ரஸாயன சாஸ்திரப்படி பரிசோதித்து நோக்கில் இதில் ஸாதாரண இரும்பும், பிராண வாயுவும் ஒருமாதிரியான அளவில் சேர்ந்து ரஸாயனக் கலப்பாகவுள்ளது என்பது வெளிப்படும்.



காந்தக்கல்லை இருப்புப் பொடியில் தோய்த்து எடுத்து நோக்கில், பொடிகள் அதன் இரண்டு எதிர் முனைகளில் அடர்த்தியாகப் பிடித்து நிற்கவும், இடைப் பாகங்களில் அவை யில்லாமலும் காணப்படும். ஆகவே, காந்த சக்தி அந்த முனைகளில் பலமாக உள்ளது, இடையில் இல்லை என்றே கூறவேண்டும். இப்படிப் பொடி பிடித்திருக்கும் காந்தத்தை, தாங்கக்கூடிய இலேசான பட்டுக் கயிற்றில் மட்டமாகத் தாங்கி நிற்கும்படி ஊஞ்சல்போ லமைத்துத் தொங்கவிட்டால் அதன் ஒரு முனை வடக்கு நோக்கியும் எதிர்முனை தெற்கு நோக்கியும் அமைந்த பின்னரே அது அசைவற்று நிற்கும். வேறு எப்படி நிற்கும்படியாக அதை அமைத்துப் பார்த்தாலும், அது ஆடி ஆடிச் சுழன்று தெற்குவடக்காக அமைந்தே முடிவில் அசைவற்று நிற்கும். மேலும், வடக்கு நோக்கி நிற்கும் முனையை சீமைச் சுண்ணும்பால் குறியிட்டு, அதைத் தெற்கு நோக்கும்படி வைத்தாலும், அந்தக் காந்தக்கல் சுழன்று குறியிட்ட முனையை வடக்கே அமைத்துக்கொண்ட பின்னர்தான் அசைவற்றிருக்கும். ஆதலால் இந்தக் கல்லுக்கு வடக்கு நோக்கிக் கல்லென்றும், திசை காட்டும் கல் என்றும் பெயர். இதன் தன்மை நம்முன்னோர்களுக்கும் சீன தேசத்தவர்களுக்கும் வெகுகாலம் முன்னரே நன்றாகத் தெரியும். இதில் உள்ள முனைகளுக்கு முறையே வடக்கு நோக்கும் முனை என்றும் தெற்கு நோக்கும் முனை என்றும் பெயர்.

இதுவரையிலும் கூறிவந்த காந்தக்கல் என்ற இயற்கைக் காந்தத்தில், காந்த சக்தி குறைவாகவேதான் காணப்படும். இதே கல், பட்டணம் காட்சிச்சாலையில் வைத்திருக்கும் எறிநட்சத்திரக் கல்லைப்போல மிகப்பெரிதாக இருந்தால், ஒருவேளை மிகுந்த காந்த சக்தியுடையதாக இருக்கலாம். இவைகளின் அருகாமையில் கைகடியாரம் முதலிய நுட்ப இரும்புக் கருவிகளாலாகிய வஸ்துக்களைக் கொண்டுபோகவே கூடாது: போனுல், அவைகள் உள்ளே இருக்கும் இருப்புப் பாகங்கள் நிலைகுலைந்து காந்த சக்தியால் சிதறிப்போய் விடும். ஆனல் சிறு துண்டுக் கற்களில் காந்த சக்தி குறைவு. காந்தசக்தி விஷய நுட்பங்களை நன்கு உணர, இவை அதிகமாக உதவி புரிய மாட்டா. ஆதலால் செயற்கைக் காந்தங்கள், ஊசி, கம்பி, குதிரை லாடம் ஆகிய இவைகள் உருவமாக்கி, பலமான காந்தசக்திகள் உடையனவாகச் செய்யப்படும். இவைகளைச் செய்யும் வழிகளைப்பற்றி ஆராய்வோம்.

செயற்கைக் காந்தம் உண்டாவதற்கு இரண்டு முக்கிய வழிகள் உண்டு. முதலாவது தேய்க்கும் வழி, இரண்டாவது மின்சார வழி.

(1) தேய்க்கும் வழி : ஸாதாரண ஊசி ஒன்றை மேஜைமேல் வைத்து அதன் காதை இடது கையால்அழுத்தி பிடித்துக்கொள்ளவேண்டும். பின்னர், வலது கையில் காந்தக்கல்லை எடுத்து அதன் வடக்கு நோக்கும் முனையை, ஊசியின் காது முதல் நுனிவரையில் இழுத்துவிட

வேண்டும். இப்படியே பலதரம் செய்தபின்பு ஊசியை இருப்புப்பொடிகளில் தோய்த்துப் பார்த்தால் அதற்குக் காந்தசக்தி வந்துவிட்டதாக அதன் நுனிகளிற் ஒட்டிக்கொண்டிருக்கும் பொடிகளால் நன்கு வெளியாகும். மேலும் இந்த ஊசியை, தடையின்றி மட்டமாகச் சுழலும்படி வெகு லேசான பட்டுக் கயிற்றால் தொங்கவிட்டுப்பார்த்தால், அது தன் நுனியை தெற்கிலும், காதை வடக்கிலும் வைத்துக் கொண்டே எப்பொழுதும் அசைவற்ற நிலைக்கு வரும். முன் தேய்த்ததில் காந்தக் கல்லின் தெற்கு நோக்கும் நுனியாலாவது, அல்லது ஊசியின் நுனியை அழுத்திக்கொண்டாவது, அல்லது வெளிநுனியிலிருந்து கையை நோக்கியாவது தேய்த்தால், ஊசி, தன் நுனியை வடக்கு நோக்கும் முனையாகவும், காதைத் தெற்கு நோக்கும் முனையாகவும் கொண்ட காந்தமாகும், அதிகச் சூடு பிறக்காமல் அநேக தரம் தேய்த்தால் ஊசி பலமான சக்தி யுடையதாகும். (2) இரண்டாவதான மின்சாரவழி மின்சாரத்தைப் பற்றி விவரிக்குங்கால் விளக்கப்படும். இந்த வழியால் தான் மிகுந்த வலிவுடைய பல உருவச் செயற்கைக் காந்தங்கள் செய்யலாம். இந்தக் காந்த சக்தி ஏற்கும் தன்மையில் கொடுக்கப்படும் காந்தத்தின் மிகுதியான சக்தியை ஸாதாரண இரும்பு மிகுதியாக ஏற்கும், எஃகு குறைவாகத்தான் ஏற்கும்; ஆனால் எஃகில் காந்த சக்தி தங்கி இருப்பதுபோல, நீடித்துக் காந்த சக்தி இரும்பில் இராது. ஓரணாக்காசு செய்துள்ள நிக்கல் என்ற உலோகமும், கோபால்ட் என்பதும் அதிகக் காந்தசக்தி ஏற்காவிடினும் காந்தத்தால் இழுபட்டு ஒட்டிக்கொள்ளக் கூடியவைகள்தாம்.

பலமான மின்சார காந்தத்திலிருந்து மற்றைய எஃகுத் துண்டுகளுக்கு காந்தசக்தி ஏற்றுவதற்கு ஓர் எல்லையுண்டு: அதற்குமேல் முதல் காந்தம் எவ்வளவு பலமுடையதாகவிருந்தாலும் எஃகுக்கு காந்தசக்தியே ஏறாது. இப்படி இருந்தும், ஒரு எஃகுக்கம்பி எவ்வளவு பருமனுள்ளதோ அவ்வளவே பருமன் உடையதாக இருக்கும் பல எஃகுத் தகடுகளை எடுத்துத் தனித்தனி அவைகளின் எல்லைவரை காந்த சக்தி ஏற்றி அவைகளை நுனிகளில் இரும்புத்துண்டுகளால் சேர்த்தால் அது பருமனை எஃகுத்துண்டைவிட பலமான காந்தமாகும். இந்தத் தகடு காந்தத்திற்குச் சேர்க்கைக்காந்தம் என்று பெயர். இதில் இடைத் தகடுகள் ஓரத் தகடுகளைவிட நீளமாக இருந்தால் சேர்க்கைக் காந்தம் வெகு பலமாகவிருக்கும்.





இப்படி ஏற்றப்படும் காந்தசக்தி சிதறிப் போவது இப்படி என்பதையும், அதை இவ்வாறு போகவொட்டாது காக்கும்விதம் எப்படி என்பதைப்பற்றியும் ஆராய்வோம். எவ்வளவு பலமான காந்தமாயினும் அதை நன்றாகக்காய்ச்சினாலும், குலுக்கிப் பலதரம் கீழே போட்டாலும், அதன் சக்தி குன்றிப்போய்விடும்: ஒருவேளை முழுசக்தியும் போய்விட்டாலும் விடலாம்: இதே மாதிரிதான் அவைகளைத் துருப்பிடிக்க விட்டாலும், துருவெடுக்கத் சூடுபிறக்கும்படி தேய்த்தாலும். இதுவுமன்றி அவைகளின் ஒரு முனையில் எதிர்முனைக் காந்தசக்தி ஏற்படும்படி வேறுகாந்தம் கொண்டு தேய்த்து ஏற்றினாலும், முன்னுள்ள காந்த சக்தி போய்விடும். இப்படி எல்லாம் இருப்பதால் செயற்கையில் பலமாகச் செய்யப்படும் காந்தங்கள் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்படவேண்டும். பொதுவாக அவைகளை உஷ்ணமான இடங்களில் வைக்காமல், மரப்பெட்டிகளுள் வைத்து மூடிவைக்கவேண்டும். எடுத்துப் பழகுங்கால் அவைகளை மிகுதியாகக் குலுக்காமலும், கீழே தவறிப் போடாமலும் இருக்கவேண்டும். மேலும் ஊசிகளாக இருந்தால், இரண்டிரண்டாக முனை மாறாகப் போட்டு வைக்கவேண்டும். கம்பிக் காந்தங்களாயின், இரண்டிரண்டாக முனை மாற்றிப்போட்டு இடையில் அதே நீள மரத்துண்டையிட்டு

கல்லடிச்சித்தன் போகிற வழி, காடு மேடு எல்லாம் தவிடு பொடி.

முனைகளையும் ஒவ்வொரு இரும்புத் துண்டைக்கொண்டு ஒட்டிச் சேர்த்து வைக்க வேண்டும். குதிரைலாடக் காந்தத்தில் முனை இரண்டும் நெருங்கியே இருப்பதால் காந்த சக்தி சிதறியே போகாது. ஆகையால்தான் இவ்வுருவம் காந்தத்திற்கு மிகத் தகுந்தது என்பர் பிரகிருதி சாஸ்திரிகள். இதிலும் ஜாக்கிரதையாகவிருக்க ஒரு இரும்புத்துண்டு இரண்டு முனைகளில் ஒட்டி விட்டிருக்கும். இவை காந்த சக்தி சிதறிப்போகவிடாது காப்பதால் இப்படி இருக்கும் இருப்புத் துண்டுகளுக்கு காவற்றுண்டுகள் என்று பெயர்.





காந்த சக்தியைப்பற்றியுள்ள பொது விஷயங்களை முடிக்குமுன் எல்லோரும் எளிதில் செய்து வேடிக்கை பார்க்கக்கூடிய காந்தக் காற்றுடியைப்பற்றிக் கூறி நிறுத்துவோம். சுவற்றில் ஆணி ஒன்று அறைந்து அதில் குதிரைலாடக் காந்தம் ஒன்றை மாட்டுவோம். அதற்கு நேர் கீழாகச் சுவற்றில் கொஞ்சதூரத்தில் வேறு ஒரு ஆணி அடித்து அதில் கொஞ்சம் நீளமான நூலில் ஒரு நுனியைக் கட்டிவைப்போம். ஸாதாரணச் சிறு ஊசி ஒன்றை எடுத்து அதை வளைத்துச் சிறு நூலை இருநுனியிலும் கட்டி மாலைபோலத் தொங்கவிடுவோம். இந்நூலின் மத்திய பாகத்தில் ஆணிநூலின் மறுநுனியைக் கட்டி அதை ஆணியைச் சுற்றிச்சுற்றி, வளைந்த ஊசியை காந்தத்தின் அடியில் கொஞ்சதூரத்தில் அடிநூல் நேராகக்கொண்டு நிற்கச்செய்வோம். தகுந்த தூரத்தில் வளைந்த ஊசி காந்தத்தில் படாமலும் கீழ்நூலைத் தளரச் செய்யாமலும் அந்தரத்தில் நிற்கும். இதற்கே காந்தக் காற்றுடி என்று பெயர். காந்தம் ஊசியை மேலே இழுக்க, (அதன் கனம் கீழே இழுப்பினும்) ஆணிநூல் அதை மேலேபோய் காந்தத்தில் ஒட்டிக்கொள்ளாமலும் கீழ்நூலையும் தளரவிடாமலும் தடுக்க, ஊசி அந்தரத்தில் நின்றுவிடுகிறது.

இப்படி இருக்கும் காந்தக் காற்றுடியிலிருந்து காந்தசக்தி விஷயம் ஒன்று புதிதாகத் தெரிந்துகொள்ளலாம். காற்றுடி ஊசிக்கும் காந்தத்திற்கும் இடையில் இரண்டிலும் படாமல் காகிதத் துண்டையாவது கண்ணாடித் துண்டையாவது கொண்டுவருவோம். காற்றுடியில் ஒருமாறுபாடும் இராது. ஆனால் இடையில் லேசான இரும்புத்தகட்டை அப்படியே கொண்டுவருவோம். உடனே காற்றுடி கீழே விழுந்துவிடும். இதனால் காகிதம், கண்ணாடி முதலிய காந்தசக்திக்கு ஈடுபடாத பொருள்கள் வழி காந்தசக்தி ஊடுருவிப் பாயும் திறனுடையது: அதற்கு ஈடுபடக்கூடிய இரும்பினால் அது தடைப்பட்டு நின்றுவிடும் என்பது வெளியாகும். இதுபற்றியே காந்தசக்தியைக் காப்பாற்ற காவல் துண்டுகள் இரும்பாலேயே அமைக்கப்பட்டுள்ளன. கண்ணாடிப் பாத்திரத்துள் இருப்புப்பொடிகள் இட்டு வெளியில் காந்தத்தை இழுத்தாலும், காகிதத்தின்மேல் அவைகளைக் கொட்டி அடியில் காந்தத்தை இழுத்தாலும், காந்த சக்திக் கீடுபட்டிருப்பதைக் காட்டி, அவை குதித்தாடிக் கூடிப் பிரியும். சில உஷ்ணம் காட்டும் கருவிகளில் உள்ளிருக்கும் இரும்புக் குறிகளை இடம் மாற்ற காந்தங்களை உபயோகப்படுத்த வேண்டி வரும்.

இனிக் காந்தசக்தியின் நுட்பங்களை மேல் எடுத்து விவரிப்போம்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி.)

கூட வர்ணித்திருக்கிறார்கள். இதே காரணத்தால்தான் நம்முடைய சாஸ்திரங்களிலும் நம்முடைய நடவடிக்கைகளிலும் இந்த ஒரு பிறவிதான் உண்டென்று நாம் நினைக்காமல் விசால நோக்கத்துடன் ஜன்மாந்தரங்கள் சத்தியமென்று நாம் உணர்ந்தும் உணர்ச்சி இருக்கிறதென்று காட்டியும் வருகிறோம். ஆகையால் உலக நாகரீகங்களுள் உயர்ந்த கிரீஸ் நாகரீகமும் நம்முடைய நாகரீகமும் எத்தன்மையானவைகள் என்று நாம் உணர வேண்டியது மிகவும் அவசியமான விஷயம்.

பள்ளிச் சிறுவர்களின் சுகாதாரம்
HEALTH OF SCHOOL CHILDREN

[ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி ஐய்ரவர்கள், பி. ஏ., எல். டி.]

நம்நாட்டில் பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கல்வி பயின்றுவரும் சிறுவர்களின் தொகை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகின்றது. நாட்டிலுள்ளோர் அனைவருக்கும் கல்வி பரவவேண்டியது மிகவும் இன்றியமையாததால், மேற்குறித்த விஷயத்தைப்பற்றி நாமனை வரும் மகிழ வேண்டியதே. பள்ளிக்கூடத்தில் சிறு வயது முதல் படிப்பது அவசியமானால், அப்படிச் சிறு வயது முதல் பள்ளிக்கூடத்தில் படிப்பதால் அவர்களுக்கு ஆரோக்கியம் குறையாம லிருக்கும்படியான வழிகளை நாம் தேட வேண்டும். சிறுவர்கள் பள்ளிக்கூடத்தில் போய் வாசிப்பதால் என்ன கெடுதி உண்டாகுமென்று சிலர் கேட்பர். அதற்குப் பதில் கூறுவது முதலில் அரிதாகத் தோன்றினாலும், ஆராயும்போது, பல விஷயங்கள் வெளிப்படுகின்றன.

சாதாரணமாக, 5-வயதுமுதல், 18 அல்லது 20-வயது வரையிலுமுள்ள சிறுவர் சிறுமிகளையே பல நோய்கள் வருத்துகின்றன. பள்ளிக்கூடத்தில் பல சிறுவர்கள் ஒன்று கூடியிருப்பதனால், ஒரு சிறுவனுக்கு நோய் உண்டாகுமானால், அது மற்றவர்களுக்கும் பரவுவது மிகவும் சுலபம். இரண்டாவது, சிறுவர்கள் ஒரே இடத்தில் வெகு நேரம் இருக்க நேரிடுவதினால், அசுத்தமான காற்றை உட்கொள்ளும்படி யாகிறது. மூன்றுவது, பள்ளிக்கூடங்களில், சுகவழிக்கு விரோதமான மேஜைகள் அல்லது விசுப்பலகைகள் முதலியவைகளின்மீது எழுதியும், உட்கார்ந்தும் வருவதால், கூன்முதுகு முதலிய விகார ரூபங்கள் ஏற்பட இடமுண்டாகின்றது. நான்காவது, சிறுவர்கள் இளமையிலிருந்தே சிறு எழுத்துக்களைப் படிக்கவேண்டி யிருப்பதனல் அவர்களுடைய பார்வை சக்தி மிகவும் குறைகின்றது. இவைகளைப்போன்ற பல குறைகள் பள்ளிக்கூடங்களில் இருக்கின்றன. இவைகளில் எல்லாவற்றையுமாவது, அல்லது கூடிய மட்டில் முக்கியமானவைகளையாவது நீக்கினல் மாத்திரமே, பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு படிப்பதின் முக்கிய பயன்கள் உண்டாகும்.

இவைக ளெல்லாவற்றையும் கவனித்த துரைத்தனத்தார், தற்காலம் புதிதாக ஓர் ஏற்பாடு செய்திருக்கின்றனர். அவ்வேற்பாடு பள்ளிச் சிறுவர்களின் தேகாரோக்கியத்தைக் கவனிக்க ஏற்பட்டது. அதன்படி கல்விலாகாவின்கீழிருக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், அப்பள்ளிக்கூடத்துச் சிறுவர்களின் தேக சௌக்கியத்தைக் கவனிப்பதற்காக ஓர் வைத்தியர் நியமிக்கப்படவேண்டும். அவர் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களின் தேக சௌக்கியத்தைக் கவனித்து வரவேண்டும். சாதாரணமான நோய்களால் கஷ்டப்படும் சிறுவர்களுக்குத் தகுந்த மருந்து பள்ளிக்கூடத்திலேயே கொடுபடவேண்டும். வைத்தியர் எடுத்துக் கொள்ளும் சிரமத்திற்காக, குறிப்பிட்ட ஓர் தொகை, அவருக்குப் பள்ளிக்கூடத்து அதிகாரிகளால் கொடுக்கப்படும். இத் தொகையில் ஓர் பாகம் துரைத்தனத்தாராலும், மற்றொரு பாகம் பள்ளிக்கூடத்தாராலும் கொடுக்கப்படும்.

பள்ளிக்கூடத்தில் சிறுவர்களின் தேக சௌக்கியத்தை வைத்தியர்கள் விசாரிக்கும்போது, அவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களை மூன்றுகப் பிரிக்கலாம்:—(1) சிறுவர்களுக்கு சாதாரணமாய்க் காணும் வியாதிகளுக்கு மருந்து கொடுத்தல் அல்லது சிகிச்சை செய்தல். (2) வியாதிகள் வராதிருக்க ஏற்பாடுகள் செய்தல். (3) சுகாதார விஷயங்களைப்பற்றிச் சிறுவர்களுக்குப் போதிப்பதும், அவ்விஷயங்களில் அவர்கள் ஆவல்கொள்ளும் படிச் செய்வதுமாம்.

அம்மை, சுரம், இருமல், சிரங்கு முதலியவைகள் சாதாரணமாகப் பிள்ளைகளைத் துன்புறுத்துகின்றன. இவற்றில் ஒன்று ஒரு சிறுவனிடம் காணப்படுமாயின், உடனே அவனைப் பள்ளிக்கூடம் போகாமலும், மற்றச் சிறுவர்களுடன் எவ்விதத்திலும் சேராமலு மிருக்கும்படியான வழிகளைத் தேடவேண்டும். சில பெற்றோர்கள் இதற்கு முதலில் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். பையன் பள்ளிக்கூடம் போகாமலிருந்தால், கட்டின சம்பளம் வீணுகப் போகிறதென்றும், நோயுள்ள பையன் பள்ளிக்கூடம் போனல், மற்றவர்களுக்கு ஒன்றும்

வராதென்றும் கூறுவார்கள். இதற்குத் தகுந்த சமாதானங்களைக் கூறி, சிறுவனை (பள்ளிக்கூடத்து வைத்தியரிடம் போகாவிட்டால்) அருகேயுள்ள ஆஸ்பத்திரிக்கு, அல்லது வைத்தியரிடம் போய் சரியான சிகித்ஸை பெறும்படிச் சொல்லவேண்டும். பெற்றோர்கள் மேற்கூறியபடி செய்யாவிட்டால், நோயுள்ள பையனை பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு அனுப்புவதைவிட வேறு வழியில்லை. உதாரணமாக, ஒருவனுக்கு அம்மை காணுமாயின், அவன் எக்காரணத்தைக்கொண்டும் பள்ளிக்கூடம் வரக்கூடாது. பள்ளிக்கூடத்து வைத்தியராவது, அல்லது தகுந்த வேறொரு வைத்தியராவது, அம்மை முற்றிலும் சிறுவனுக்கு இல்லை என்று உறுதிமொழிச் சீட்டுக்கொடுக்கும் வரையிலும், வகுப்பில் சேர்த்துக்கொள்வது பிசகு. இப்படிச் செய்யாவிட்டால், பையன் பள்ளிக்கூடம் போகவில்லையே என்று வருத்தப்படும் பெற்றோர்கள், அம்மை கொஞ்சம் குறைந்ததும் அம்மைக் கொப்புளங்கள் நீர்வற்றி உலர்ந்து விழுவதற்கு முன்னமே, பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடுவதுவழக்கம். இந்தக் கெட்டவழக்கத்தினால், அம்மை மற்றையச் சிறுவர்களுக்கும் பரவ வழியுண்டாகின்றது. சிறு வயதில் அம்மை குத்திக்கொண்டவர்களும், பெரியவர்களான பிறகு மறுபடியும் குத்திக் கொள்வதனால் நல்லதேயொழிய கெடுதியொன்றுமில்லை.

சிரங்கு, பள்ளிக்கூடத்துக்குச் சிறுவர்களிடம் மிகவும் சாதாரணமாய்க் காணப்படுகின்றது. இது அழுக்கடைந்த உடைகளைத் தரிப்பதனாலும், அசுசியாயிருப்பதாலும், சிரங்குற்றவர்களோடு பழகுவதனாலும் தகுந்த உணவில்லாததினாலும் உண்டாகின்றது. இதைப்பற்றிப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். பிள்ளைகள் தினந்தோறும் ஸ்நாநம் செய்கிறார்களா வென்றும், தலையில் பேன் முதலியவை இராமலிருக்கின்றனவா வென்றும் கவனிக்கவேண்டும். எவையாவது இருப்பதாகத் தெரிந்தால், சவர்க்காரம் கொண்டு அலம்பியாவது, தலைமயிரைக் கத்தரித்தாவது, பூச்சிகளைப் போக்கடிக்க முயலவேண்டும்.

மேற்கூறிய விஷயங்களைக் கவனிப்பதற்கு வைத்தியர், உபாத்தியாயர் ஆகிய இருவர்களுடைய முயற்சி மாத்திரம் போதாது. பிள்ளைகளின் பெற்றோர்களுடைய கூட்டுறவும் வேண்டும். பெற்றோர்களுக்கு, நோயின் குணத்தைப் பற்றியும், சிகித்ஸை முறையைப்பற்றியும் தெரிவிக்கவேண்டும். இவ்விஷயத்தில் மேனாடுகளில் கீழுள்ளதுபோன்ற ஓர் கடிதம் பள்ளிக்கூடத்திலிருந்து அனுப்பப்படுகிறது :—

..............................பள்ளிக்கூடம்

தேதி.........19 .

....அவர்களுக்கு,

ஐயா / அம்மணி,

மேற்படி, பள்ளிக்கூடத்தில்......வது வகுப்பில் வாசித்துவரும் தங்கள் மகன் / மகள் .... என்பவருக்கு...............கண்டிருக்கிறபடியாலும், அம்மாதிரி ....இருப்பது பள்ளிக்கூடத்தின் ஆரோக்கியத்திற்குக் குறைவு உண்டாக்குமாதலாலும் ஷை சிறுவனை / சிறுமியை நீங்கள் கவனிக்காவிட்டால்........ ....முதல் பள்ளிக்கூடத்தில் நாங்கள் சேர்க்கமாட்டோம்.

ஷை நோய்க்குத் தகுதியான மருந்து............ .... ஆஸ்பத்திரியில் / பள்ளிக்கூடத்தில் கிடைக்கும்.

(மருந்து உபயோகிக்கும் முறை நேரில் சொல்லப்படும்.)

தலைமை உபாத்தியாயர், / வைத்தியர்.

மேற்கூறிய நமூனாவைப் பெற்றும் மாணவர்களின் பெற்றோர் கவனியாதிருப்பின், பையனைப்பற்றி மேலே கூறிய நமூனாவில் "சிறுவனுக்கு / சிறுமிக்கு உடம்பு முற்றிலும் குணமாயிற்று என்று வைத்தியர் கூறும் வரையில் பள்ளிக்கூடம் வரக்கூடாது" என்பதைச் சேர்த்து எழுதி அனுப்பி விடுகிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் வியாதிகள் பரவாமலிருக்கும்படியும் அப்படி எவருக்காவது நோயுண்டான போதும் அதைத் தடுக்கத் தகுந்த சிகித்ஸையும் செய்வதோடுங்கூட, பிள்ளைகளின் சுகாதாரத்தைக் குறித்து வேறு விஷயங்களையும் கவனிப்பது வைத்தியர் கடமையாகிறது. (தொடரும்.)

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல், நெல்லுடன் பிறந்த பதராகும்மே.

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஜி.ஏ.சுந்தரமய்யரவர்கள்,பி.ஏ.,பி.எல்.]

ஆபீஸ் இரகசியம்

THE OFFICE SECRET

சக்கரவர்த்தி ஐயங்காருக்கு மதுரை தாசில் உத்தியோகம் ஆனபோது வயது ஐம்பத்து மூன்று. அவர் மனைவி பத்மாசனி அவருக்கு மூன்றாவது இளையாள். அவளுக்கு வயது இருபது. ஐயங்காருக்கு தனது பத்தினியின்பேரில் மிகுந்த அன்பு. பத்மாசனிக்கும் அவள் புருஷனிடம் அதிகப் பிரியம்தான். ஐயங்கார் தகுந்த உத்தியோகத்திலிருப்பதையே முக்கியமாக உத்தேசித்து பத்மாசனியின் பெற்றோர்கள் அவருக்குப் பெண்ணைக் கொடுத்தார்கள். பத்மாசனி தன் நாதனுடைய பதவியினால் தனக்கு ஏற்பட்ட மேன்மையை வெகு கௌரவமாய் வகித்துவந்தாள். ஒரு ஏழை வீட்டுப் பெண்ணாயிருந்தும், சிறு வயதிலேயே பெரிய பதவிபெற்று சேவகர்களை அதிகாரம் செய்வதும், குமாஸ்தாக்கள் அவள் வார்த்தைக்குக் காத்துக்கொண்டிருப்பதும் யாருக்குத்தான் உன்னத ஸ்திதியாகத் தோன்றாது? அதிகாரத்திலும் பதவியிலும் மனதைச் செலுத்தினாலும், அவ்வளவுக்கும் காரணமான தன் நாதனையும் மறக்காமல் அவரிடம் பத்மாசனி வெகு பிரியம் பாராட்டி வந்தாள். தாலூகா ஆபீஸ் வருமானவரி குமாஸ்தா துரைசாமி ஐயர் தாசில்தார் வீட்டுக்கு அடுத்த ஒரு சிறு வீட்டில் குடியிருந்தார். ஆகவே அவர் அடிக்கடி தாசில்தார் வீட்டுக்குப் போகவும், அவர் வீட்டுக் காரியங்களை கவனிக்கவும் நேர்ந்தது. பத்மாசனிக்கு ஆகவேண்டிய வீட்டுக்காரியங்களையெல்லாம் துரைசாமி ஐயரிடம் சொல்லி அவரைக்கொண்டு முடித்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. துரைசாமி ஐயர் மனதில் கள்ளம் கபடு ஒன்றும் நினையாதவர். வயது இருபத்தேழுதான், சம்பளம் சுவல்பமாயிருந்தாலும், நல்ல உடுப்புக்களில் அவருக்கு அதிகப் பிரியமானதினால் செலவைக் கவனியாமலே அவர் எப்போதும் நல்ல உடை அணிவார். சங்கீதத்தில் கொஞ்சம் கிறுக்கு. தானகவும் பாடுவார். அவரிடம் ஒரு குற்றமும் இல்லாதிருந்தும் அவர் அடிக்கடி தன் வீட்டிற்கு வருவதும் பத்மாசனியுடன் பேசுவதும் சக்கரவர்த்தி ஐயங்காருக்குப் பிடிக்கவில்லை. ஐயர் அடிக்கடி தன் வீட்டிற்கு வருவது தமக்கு பிரியமில்லை என்பதை வெளியிட்டுச் சொல்லி அவரை வராமல் நிறுத்திவிடலாம் என்று யோசித்தார். ஆனால் எப்படிச் சொல்லுகிறதென்று தெரியவில்லை. பத்மாசனியிடம் சொல்வதானால் கூச்சமாயிருந்தது. துரைசாமி ஐயரிடம் இதைப்பற்றி ஏதாவது சொன்னால், தான் சொல்லிய சங்கதி வெளியில் பரவி தன்னைப்பற்றி அபவாதம் உண்டாகும் என்றும் பயந்தார்.

நாளடைவில் சக்கரவர்த்தி ஐயங்காருக்கு துரைசாமி ஐயரைத் தன் வீட்டிற்கு வராமல் தடுப்பதற்கு வழிதேடுவதே பெரிய கவலையாகி விட்டது. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதுபோல துரைசாமி ஐயருடைய ஒவ்வொரு செயலும் விகல்பமாகத் தோன்றியது. துரைசாமி ஐயரை வேறு ஊருக்கு மாற்றிவிடலாம் என்று யோசித்தார்; முடியவில்லை. பத்மாசனியும் துரைசாமி ஐயரும் நாளாக நாளாக அதிகமாய் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்கள் மனதில் மட்டும் பிசகான எண்ணம் ஒன்றுமில்லை. இவர்கள் மனதின் உண்மையை அறியாத சக்கரவர்த்தி ஐயங்கார் மனதில் பித்து ஏறிப்போய் இவர்கள் நெருங்காமல் இருக்க எந்தக் காரியமும் செய்யத் துணிந்து விட்டார். யோசித்து யோசித்து கடைசியாய் ஒரு சூழ்ச்சி செய்து, துரைசாமி ஐயர்பேரில் ஒரு பெரிய குற்றத்தைச் சாட்டி அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுவதாய்த் தீர்மானித்தார்.

மதுரை, தாலூகா கச்சேரியில் துரைசாமி ஐயருக்கு அடுத்து உட்கார்ந்திருக்கும் குமாஸ்தா கேசவராவ் வேலையில் மிகவும் கவனமுள்ளவர் என்று பேர்பெற்றவர். ஆனாலும் மேல் உத்தியோகஸ்தர்களை அடிக்கடி பார்த்து திருப்திசெய்யும் வழக்கம் அவரிடம் இல்லாததால், எவ்வளவுதான் அவர் வேலையை ஒழுங்காய்ப் பார்த்தாலும் அவருக்குச் சம்பளம் மட்டும் உயரவில்லை. வயது முப்பத்தாறாகியும், சர்க்கார் வேலையிலமர்ந்து பதினைந்து வருஷங்களாகியும், அவருக்கு சம்பளம் ரூபாய் 25-க்கு மேல் காயமாகவில்லை. மற்ற குமாஸ்தாக்களைப் போல மேல்வரும்படி சம்பாதிக்கும்

வழிகளும் தெரியாது. சம்பளம் உயராவிட்டாலும், ராயரிடம் சந்தானலக்ஷ்மியின் பரிபூர்ண கடாக்ஷம் ஏற்பட்டு அவருக்கு பிள்ளைகள் நாலும், பெண்கள் மூன்றும் பிறந்தன. அவர் வீடு குசேல ஸ்வாமியின் திருமாளிகை போலவே விளங்கிற்று. சக்கரவர்த்தி ஐயங்கார் மதுரை தாசிலாக வந்தது முதல், ராயரிடம் விசேஷ அபிமானம் காட்ட ஆரம்பித்தார். வந்து ஆறுமாதம் ஆனதும், முன் இருந்ததைக்காட்டிலும் அதிகமாய் ராயரிடம் பிரியம் காட்டினர். ராயருக்கும் நல்ல காலம் பிறந்ததுபோலக் காணப்பட்டது.

ஒரு நாள் சாயங்காலம் சக்கரவர்த்தி ஐயங்கார் சச்சேரியிலிருந்து வந்தவுடன் கேசவ ராயரை வீட்டிற்கு வரும்படி ஆள் விட்டார். ராயர் வந்து சேர்ந்ததும், தாசில்தார் அவரைத் தன் வீட்டிற்குள் தான் ஆபீஸ் செய்யும் அறைக்கு அழைத்துப்போனர். சேவகன் ஒருவனைக் கூப்பிட்டு "அம்மா எங்கே" என்று கேட்டதற்கு அவன் "டிப்டி கலெக்டர் எஜமான் வீட்டில் குழந்தைக்கு ஆண்டு நிறைவு கல்யாணத்திற்குப் போயிருக்கிறார்கள்" என்றான். தாசில்தார் "சரி. யார் வந்தாலும் இப்போது பார்க்கமுடியாது என்று சொல்லிவிடு" என்று சேவகனுக்கு உத்தரவுகொடுத்துவிட்டுக் கதவை மூடிக்கொண்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கேசவ ராயரைப் பார்த்து,

"உம்மிடம் அந்தரங்கமான சில விஷயங்கள் பேசவேண்டும். உட்காரும்" என்று மற்றொரு நாற்காலியைக் காட்டினர்.

கேசவ ராவ் "பாதகமில்லை, நான் நின்றுகொண்டே இருக்கிறேன்" என்றார்.

"நீர் இவ்வளவு வருஷ சர்வீஸ்காரராக இருந்தும் உமக்கு வேலை உயராமல் இருப்பது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அடுத்த வாரத்தில் நமது ஆபீஸில் வேலை காலியாகிறதில் உம்மை ரூ. 35-க்கு உயர்த்தும்படி நான் பலமாய் எழுத உத்தேசிக்கிறேன்."

"தாங்கள் என்மேல் பக்ஷம் வைத்து எனக்காகச் சிரமப்படுவதை நான் எப்போதும் மறக்கமாட்டேன். எந்த வேலையில் என்னைப் போட்டாலும் மேலதிகாரிகளுக்கு திருப்திகரமாய் வேலையை ஒழுங்காய்ப் பார்க்கிறேன்" என்றார் ராயர். "அதிருக்கட்டும், உம்பேரில் கோர்ட்டில் யாரோ பிராது போட்டதாய்க் கேள்விப்பட்டேனே என்ன அது?" என்று கேட்டுக்கொண்டே சக்கரவர்த்தி ஐயங்கார் தனக்குச் சமீபத்தில் இருந்த தன் கைப்பெட்டியைத் திறந்தார்.

"ஒன்றுமில்லை. சுவல்ப சம்பளமானதால் குடும்ப யோகக்ஷேமத்திற்குப் போதாமல் ரூ. 10 கடன் வாங்கும்படி நேரிட்டது. வேறு வழியில்லாமல் வட்டிக்கடை சடையன்செட்டியாரிடம் ஒருபாண்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கினேன். அந்த பாண்டுக்கு வட்டிப் பணம் கூடுமானவரை அடிக்கடி கொடுத்துக் கொண்டே வந்தும், சில அசந்தர்ப்பங்களால் நடுவில் கொஞ்சகாலம் வட்டி கொடுக்க முடியாமல் வட்டியும் அசலுமாக ரூபா. 200 வரை ஏறிவிட்டது. செட்டி பிராது செய்துவிட்டான். நான் வாயிதாவன்று கோர்ட்டுக்குப் போய் ரூ. 100 செலுத்திவிட்டு பாக்கித்தொகைக்கு மாத வாயிதா கேட்டு, கோர்ட்டார் தயவால் அப்படியே வாயிதா பெற்றுக் கொண்டேன்" என்றார் ராயர்.

"உமக்கு ஒருமாத வாயிதா தீர இன்னும் எவ்வளவு நாள் இருக்கின்றது?"

"இன்னும் ஒருவாரம் தான் இருக்கிறது."

"பணத்துக்கு என்னவழி செய்திருக்கிறீர்?"

"என் சிநேகிதர்களிடம் கேட்டுப்பார்த்தேன். ஒருவரிடமும் இல்லை. சுவாமிதான் வழிகாட்ட வேண்டும்" என்று கேசவராவ் பதில் சொல்லி முடிப்பதற்குமுன், சக்கிரவர்த்தி ஐயங்கார் கைப்பெட்டியிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து "இந்தாரும்; இந்த ரூபாயை எடுத்துக்கொள்ளும். நாளையே கோர்ட்டில் செலுத்தி உமது டிக்கிரியை தீர்த்துக்கொள்ளும். இதை எனக்கு திருப்பிக்கொடுப்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவேண்டாம். உமது சௌகர்யம்போல் சாவகாசமாய் நாலோ அஞ்சோ கையில் அகப்பட்டதைக்கொடுத்துத் தீர்க்கலாம். வட்டி ஒன்றுமே வேண்டாம்" என்று சொல்லி கேசவராவ் கையில் நோட்டைக் கொடுத்தார், கேசவராவ் அதிக ஆச்சரியமடைந்து "எஜமான் என் குடும்பத்தை ரக்ஷித்தீர்கள். நானும் என் குழந்தைகளும் உங்கள் பேரைச்சொல்லிக்கொண்டுதான் சாப்பிடவேண்டும்" என்று சொல்லி பக்கத்தில்

இருந்த மேஜையின்பேரில் நோட்டை வைத்தார்.

சக்கிரவர்த்தி ஐயங்கார் "ஒன்றும் சொல்ல வேண்டாம். அந்த விஷயம் இருக்கட்டும். நீர் செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதில் நான் சொல்லுகிறபடி செய்வீரா" என்றார். கேசவராவ் "என்னைக் காப்பாற்றிய என் குல தெய்வம் தாங்கள். என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்" என்றார்.

சக்கிரவர்த்தி ஐயங்கார் தன் கைப்பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து கேசவராவிடம் கொடுத்து "இந்த மனுவைப் படித்துப் பாரும்" என்றார். கேசவராவ் அதைப் பிரித்துப்பார்த்தார். அதில் அடியில் கண்டபடி எழுதியிருந்தது.

"மகாகனம்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ மதுரை தாலூகா தாசீல்தாரவர்கள் திவ்விய சமுகத்திற்கு மதுரை கிழக்குஉத்தர வீதியிலிருக்கும் குழந்தையன் செட்டி மிகவும் வணக்கமாய் எழுதிக்கொண்ட மனு.

என்னுடைய வருமான வரி விஷயமாய் சமுகம் ஆபீஸில் தாக்கல் செய்திருந்த என் தஸ்தாவேஜுகளை நான் வாப்ஸ் வாங்கிக் கொண்டதில் அவைகள் சரியாக இருக்கும் என்று எண்ணி ஆபீஸில் கையெழுத்து செய்து தஸ்தாவேஜுகளை மொத்தமாய் ஆபீஸிலிருந்து வாங்கிவந்துவிட்டேன். பிற்பாடு அவைகளை பார்க்கும்போது நத்தர்சா ராவுத்தரிடம் நான் வாங்கிய ரூ. 1000 பத்திரம் காணவில்லை. இது சந்தேகத்திற்கு இடம் தருகிறது. நத்தர்சா ராவுத்தர் அவ்வளவு ஒழுங்கான மனுஷியனல்ல. அவர், ஆபீஸ் குமாஸ்தா யாருக்கோ பணம் கொடுத்து கைவசப்படுத்தி மோசடியாய் தஸ்தாவேஜை வாங்கிவிட்டதாக பிரஸ்தாபம் ஆகிறது. தஸ்தாவேஜை தன் கைவசப் படுத்திக்கொண்டு என் பணத்தை மோசம் செய்வதற்காக இப்படிச் செய்திருக்கிறார். ராவுத்தர் ரூ. 100-வரை செலவுசெய்து ஆபீஸிலிருந்து திருட்டுத்தனமாய் தஸ்தாவேஜை வாங்கிப்போய்விட்டதாக பராபரியாய்க் கேள்வி.

இந்த விஷயத்தைத் திரவிசாரித்து தஸ்தாவேஜைக்கண்டுபிடித்து அதைமறைத்தவர்களை தண்டனைக்குக்கொண்டுவந்து நீதி செலுத்தும்படி மிகவும் தாழ்மையாய் கேட்டுக்கொள்றேன். இப்படிக்கு, தங்கள் ஊழியன்

குழந்தையன் செட்டி,

இதை ராயர் படித்து முடிந்ததும் சக்கிரவர்த்தி ஐயங்கார் அவரைப் பார்த்து "இந்த விஷயத்தைப்பற்றி நான் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்திருக்கிறேன். உம்மிடம் சில கேள்விகள் கேட்கவேண்டியிருக்கிறது. வருமானவரி குமாஸ்தா உமக்கு அடுத்து உட்காருகிறாரா?" என்றார்.

"ஆம். ஆனால் துரைசாமி ஐயர் இந்த மாதிரி பிசகான காரியம் ஒன்றும் செய்யக்கூடியவரல்லவே." "உம்முடைய அபிப்பிராயத்தை நான் கேட்கவில்லை. துரைசாமி ஐயர் ஆபீஸில் என்ன காரியம் செய்தாலும் உமக்குத் தெரியுமல்லவா?"

"ஆம். அவர் எனக்கு அடுத்து உட்கார்ந்திருப்பவரானதால் அவர் செய்கிறதெல்லாம் எனக்குத் தெரியும்"

"அவர் பெட்டியில் உள்ள தஸ்தாவேஜுகள் உம்முடைய பெட்டிக்கு வருவதுண்டா?"

"அபூர்வமாய்எப்போதாவது அவர்வேலையும் நான் பார்க்கநேரிட்டால் அவர் பெட்டியில் இருக்கும் தஸ்தாவேஜுகள் என் பெட்டிக்கு வரக்கூடும்" "இந்த மனுவில் கண்ட தஸ்தாவேஜை நீர்பார்த்ததுண்டோ? நீரும் துரைசாமி ஐயரும் சேர்ந்து குழந்தையன் செட்டி வருமானவரிசம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பார்த்ததாக ஹெட் குமாஸ்தா வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்."

"ஆமாம். நானும் துரைசாமிஐயரும்சேர்ந்து தான் குழந்தையன்செட்டி தஸ்தாவேஜுகளைப் பார்த்தோம்."

"அப்படியா? ஆனால் நீரோ அல்லது துரைசாமிஐயரோதான் இந்த மனுவில்கண்ட தஸ்தாவேஜை எடுத்துக்கொடுத்துவிட்டதாய் ஏற்படுகிறது. என்ன சொல்கிறீர்?" என்றார் தாசில்தார். கேசவராவ் "ஐயா, நான் பார்த்த தஸ்தாவேஜுகளையெல்லாம் துரைசாமி ஐயரிடம் கொடுத்துவிட்டேன். அவர் பணத்திற்கு ஆசைப்பட்டு கெட்டகாரியம் ஒன்றும்செய்யக்கூடியவரில்லை" என்றார்.

"முன்னேயே சொன்னேனே உமது அபிப்பிராயம் ஒன்றும் வேண்டாம். நமது கச்சேரி

யில் எல்லாம் ஊழலாக இருக்கிறது. இதைக் கண்டுபிடித்து இதில் சம்பந்தப்பட்டவரை சரியானபடி சிக்ஷை செய்யாவிட்டால் ஆபீஸில் ஒருவருக்குமே பயமில்லாமல் போய்விடும். துரைசாமி ஐயர் வேலை மிகவும் அவகேடாக இருக்கிறது. அவர்தான் இப்படிச் செய்திருப்பார்."

"தீர விசாரித்தபின் குற்றம் யார்பேரில் ருசுவாகிறதோ அவரைத் தண்டிக்கவேண்டியது அவசியம்தான். விசாரிப்பதற்கு நான் என்னால் கூடிய உதவி செய்ய எப்பொழுதும் காத்துக்கொண்டே யிருக்கிறேன்" என்றார் கேசவராவ்.

சக்கரவர்த்தி ஐயங்கார் சற்று நிதானித்து "கேசவராவ், நான் முதலில் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். இந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து உமது சட்டைப்பையில் வைத்துக்கொள்ளும்" என்று சொல்லி மேஜையில் இருந்த நோட்டை ராயரிடம் கொடுத்தார். கேசவராவ் அதை வாங்கித் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டதும் ஐயங்கார் அவரைப் பார்த்து "ராவ்ஜி. நீர் நம் ஆபீஸுக்குள் நல்ல உழைபாளி; உமக்குப் சம்பளம் உயர்த்துவதற்கு எழுதுவதாகத் தீர்மானித்துவிட்டேன். இப்போது நீர் வாங்கிக் கொண்ட ரூபாயையும் நீர் இனமாக வைத்துக்கொள்ளும். ஆபீஸ் காரியங்களை சீர்திருத்த நீர் எனக்கு உதவி செய்யவேண்டியிருக்கிறது" என்றார்.

கேசவராவ "என் குடும்பத்திற்கு சமயத்தில் கைகொடுத்திருக்கிறீர்கள். ஆபீஸ் காரியமானாலும் சரி, தங்களுடைய மற்ற எந்தக் காரியமானாலும் சரி, என்னாலானதைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என்றார்.

சக்கிரவர்த்தி ஐயங்கார் "நம்முடைய ஆபீஸ் ஊழலுக்கெல்லாம் காரணம் துரைசாமி ஐயர்தான். அவர் எப்போது பார்த்தாலும் வம்புபேசுவதும் பாட்டுப்பாடுவதும் தன்னை அலங்காரம் செய்து கொள்ளுகிறதுமாகவே இருக்கிறார். மற்றவர்களும் அவரைப் பார்த்து கெட்டுப்போகிறார்கள்" என்றார். "அவர் பால்யமானதால் சிறிது குஷாலாக இருந்தாலும் உண்மையில் யோக்கியர். நான் அவரிடம் தனித்துப்பேசி கவனமாய் வேலைபார்க்கச் சொல்கிறேன்."

"வேலை இனி கவனமாய் பார்ப்பது இருக்கட்டும். இந்த மனுவில் கண்ட தஸ்தாவேஜை அவர்தான் எடுத்துக் கொடுத்திருக்கிறார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இப்படியெல்லாம்செய்து காசுபறிக்காவிட்டால் அவருக்கு ரூ. 25 சம்பளத்தில் உயர்ந்த உடுப்புகள் வாங்குவதற்குப் பணம் எப்படி கிடைக்கும்?

"ஐயா அப்படி சொல்லக்கூடாது. அவர் கெட்ட காரியம் செய்து ஒருக்காலும் பணம் வாங்கமாட்டார்".

"அதை நான் உம்மைக் கேட்கவில்லை. அவர்தான் தஸ்தாவேஜை எடுத்துக் கொடுத்திருக்கிறார். அதை ரூபிக்கவேண்டிய மற்ற எல்லா அம்சங்களும் தயாராகிவிட்டது. நீரும் சரியாய் வாக்குமூலம் கொடுக்கவேண்டும்".

"எனக்கு இதில் ஒன்றும் தெரியாதே!" என்றார் கேசவராவ்.

தாசில்தார் "ஓய்! உமக்கு புத்தி என்பது சிறிதும் இல்லை. உமமைப்போன்ற முழுமடையர்களுக்குத் திறந்து சொன்னாலொழிய பிரயோஜனமில்லை. கேளும். துரைசாமி ஐயரை எவ்விதத்திலும் தண்டனைக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறேன். இந்த மனுவில் கண்ட தஸ்தாவேஜை அவர் எடுத்துக் கொடுத்துவிட்டதாக ரூபித்து அவரை போலீசார்வசம் ஒப்பிவிக்கவேண்டும். மற்ற சாக்ஷிகள் நான் சொன்னபடி வாக்குமூலம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். நீர் அவருக்கு அடுத்து உட்கார்ந்து வேலை பார்ப்பவராதலால் உமது வாக்குமூலம் அவசியமாயிருக்கிறது. ராவுத்தரிடம், துரைசாமி ஐயர் தஸ்தவேஜை எடுத்துக்கொடுத்ததைப் பார்த்ததாக நீர் சொல்லவேண்டும். தெரிந்ததா? இந்த ஒருவார்த்தைமட்டும் சொல்லிவிட்டால் உமக்கு சம்பளம் உயர வழி செய்கிறேன். உமது கடன்களும் ஒழிந்து போகும். நான் கேட்டபடி செய்வதாய் சற்று முன்னால் உறுதிமொழியும் கொடுத்திருக்கிறீர். யோசித்துச் சொல்லும்" என்றார். (தொடரும்.)

* *T. S. Subramania Ayyar Esq., M. A., L. T. Professor of History The Presidency College* * "Your Journal is now the cheapest, the best and the most ably conducted journal in our midst.

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE

[ஸ்ரீமான் ஏ. வரதாசாரியாரவர்கள்,
பி. ஏ., எல். டி.]

முன்னொரு சஞ்சிகையில் தாவர ஜங்கம நூலின் முக்கிய உட்பிரிவுகளும், அவற்றுள் ஜடபதார்த்தத்தின் மூலதத்துவத்தை விவரிக்கும் **ரஸவாத** சாஸ்திரத்தின் முக்கிய கொள்கைகளும் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன. இனி, உலகத்திலுள்ள ஜட பதார்த்தங்களின் தோற்றம், இயற்கை, விசேஷ குணங்கள் முதலியவற்றைக் குறித்து உரைக்கும் பிரகிருதி சாஸ்திர (Physics) சம்பந்தமான விஷயங்கள் எடுத்துச் சொல்லப்படும்.

நம்மைச் சுற்றிலுமுள்ள ஜடப்பொருள்களின் இருப்பை நமது ஐம்புலன்களுள் ஒன்று அல்லது அதிகமான இந்திரியங்களாலறிகிறோம். இவ்விதமுணரப்படும் வஸ்து சமூகத்துக்குப் பொதுவாய் பிரகிருதி (Matter) என்று பெயர். பிரகிருதியின் மிதமான அம்சமானது **பொருள், பதார்த்தம்** அல்லது **வஸ்து** வென்று சொல்லப்படுகிறது. உலகத்திலுள்ள பொருள்கள் (Bodies) பல விதமான **சாமக்கிரியை**களால் (Substances or Materials) உண்டாவதாலும், அவைகளின் உருவம், நிறம், விஸ்தாரம் முதலிய வெளித்தோற்றங்களில் வித்தியாசமடைவதாலும், வஸ்துக்களை வெவ்வேறான பெயரால் பேதப்படுத்தி விவகரித்து வருகிறோம். பலகை, சீமைச்சுண்ணாம்பு, செங்கல், வஸ்திரம் இவைபோன்ற **பதுவகை** வஸ்துக்களின் சாதனப் பொருள்கள் (சாமக்கிரியை) வேறுபட்டுள்ளன. இவைகளின் நிலைமைகளிலும் பேதமுண்டு. மரம் என்னும் ஒரேவித சாமக்கிரியையாலுண்டாயுள்ள நாற்காலி, பெஞ்சி, கதவு ஆசனப்பலகை இவைபோன்ற பதார்த்தங்களின் **வடிவம், பருமன்** முதலான குணங்கள் வேறுபடுவதினாலேயே இவைகளைத் தனித்தனி வஸ்துக்களாகப் பேசுகிறோம்.

நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்களை நமது புலன்களால் அநேக விதமாய் உணர்கிறோம் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது. சில வஸ்துக்களின் நிறம், வடிவம் முதலானதை கண்ணால் பார்த்து அறிகிறோம். வேறு வஸ்துக்களை அவைகளின் சப்தத்தினாலோ, வாசனையினாலோ தெரிந்துகொள்ளுகிறோம். மற்றும் சில பொருள்களை உருசியினாலோ ஸ்பர்சத்தாலோ உணர்கிறோம். இவ்விதம் நாம் வஸ்துக்களின் பேதாபேதத்தைத் தெரிந்துகொள்ளும் பிரகாரங்களுக்கு, வஸ்துக்களின் **ஸ்வதர்மங்கள்** அல்லது **குணங்கள்** (Properties) என்று பெயர். சில லக்ஷணங்கள் சில வஸ்துக்களிடத்தில் காணப்படலாம். மற்றவைகளில் அவை தோன்றாமலிருக்கலாம். பொருளில் ஒரு சமயம் தோன்றும் தன்மை, மற்ற சந்தர்ப்பங்களில் மறைந்தும் மாறியும் இருக்கலாம். இவ்விதம் பதார்த்தங்களின் குணங்கள் வித்தியாசமுள்ளவைகளாயிருப்பினும், ஜடப்பொருள்களுக்கெல்லாம் பொதுவாய் சில இயற்கையான தர்மங்களுண்டு. சக்தி விசேஷங்களால் வஸ்துக்களின் நிலைமை முதலியன வேறுபட்டாலும், வஸ்து ஸ்வரூபமே மாறி வேறுவிதமாய் பரிணமித்தாலும், இவ்வியல்பு குணங்கள் அவைகளிலும் காணப்படும்.

ஜடப்பொருளின் ஸாமான்ய தர்மங்கள்

General Properties of Matter

I. எந்த வஸ்துவும் ஏதாவது ஸ்தலத்தை வியாபித்து நிற்கும் தன்மையுள்ளது. இவ்விதம் ஒவ்வொரு பொருளும் நிரம்பி இருக்கும் விஸ்தாரத்துக்கு அதன் **பருமம்** அல்லது **காத்திரம்** (Bulk or Volume) என்று பெயர். நம்மைச் சுற்றிலுமுள்ள காற்றைப்போல் (air) நமது கண்ணுக்குப் புலப்படாத வஸ்துவும், ஓர் ஸ்தலத்தை ஆக்கிரமிக்கும் இயல்புள்ளது. பொருளின் பருமத்தின் அளவு, அதன் நீளம், அகலம், உயரம் இவைகளின் அளவைச் சார்ந்திருக்கும். ஒவ்வொரு பொருளும் அதற்குரிய பிரதேசத்தை வியாபித்து நிற்கும் என்பதை சுலபமான **பரீக்ஷணத்தினால்** (Experiment) தெரிந்துகொள்ளலாம்.

ஓர் பெரிய கண்ணாடிப் பாத்திரத்தில் ஜலத்தை ஊற்றி, அந்த ஜலத்தின் மேற்புறத்தில் ஒரு பளிங்குக் கிண்ணத்தை (Glass tumbler) தலைகீழாய் **சமமாய்** வைத்து நீருக்குள் அமுக்கினால், கிண்ணத்தின் உட்புறத்தில் ஜலம் மேலே எழும்புவது துர்லபம். அப்படி எழும்பினாலும், மிகவும் சுவல்ப பாகந்தான் ஏறும். இதன் காரணமென்ன? கிண்ணத்தி

கல்லைக் குத்துவானேன், கை நோகிறது என்று அழுவானேன்?

னுள்ளிருக்கும் வாயுவானது (air) வெளியில் போய் வியாபிக்க வழியில்லாமல், தன் ஸ்தானத்திலேயே இருந்துகொண்டு, மற்றொரு வஸ்துவாகிய ஜலமானது அவ்விடத்தை ஆக்கிரமிக்க இடங்கொடாது.

மேற்சொன்ன கிண்ணத்தை ஒரு பக்கம் சாய்த்து (inclined) நீரில் அமிழ்த்தினால், காற்றானது குமிழி ரூபமாய் வெளிக்கிளம்புவதையும், ஜலம் கிண்ணத்தினுள் உயர எழும்புவதையும் காணலாம்.

II. ஒவ்வொரு பதார்த்தமும், அதற்குரிய மூலப்பொருளின் இராசி அல்லது பிண்டத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வித இராசியை கனபரிமாணம் (Mass) என்று சொல்லலாம். பலவித வஸ்துக்கள், ஒரே காத்திரமுள்ளதாயினும், அவைகளின் நிறை வேறுபடுவது தெரிந்த விஷயமே. ஒரே பருமமுள்ள இரும்புக் கட்டியையும், நெட்டித் துண்டையும் (piece of cork) கையிலெடுத்துப் பார்த்தால், இரும்புக்கட்டி மிகவும் பளுவென்றும், நெட்டித் துண்டு அதிக இலேசானதென்றும் உணர்ச்சி ஏற்படுகிறது. இவ்விதம் வஸ்துக்களின் நிறை வேறு படுவதற்கு மேற்சொன்ன கன பரிமாணந்தான் முக்கிய காரணம். சாதாரணமாய் ஒரு பொருளைப்பற்றி 'அது எவ்வளவு இருக்கிறது' என்றும் கேள்வி அதிலுள்ள வஸ்து இராசி அல்லதுகனபரிமாணத்தைக் குறித்ததாயிருக்கும். வஸ்துவின் கனபரிமாணம் எப்படி ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிந்துகொள்ளல் அவசியம். ஒரு காகிதத்தை சிறு துண்டங்களாக நாம் கையால் கிழிக்கக்கூடும். இவ்விதம் ஏற்படும் ஓர் சிறு கண்டத்தை யந்திர விசேஷங்களால் அணுக்களாகச் சேதிக்கக் கூடும். இவ்விதம் பகுத்ததைப் பிரித்துக் கொண்டுபோனால் இனி துணிக்க முடியாதென்று சொல்லக்கூடிய சூக்ஷ்மமான பரமாணுக்கள் (atom; molecule) ஏற்படும். ஒவ்வொரு பொருளுக்குரிய பரமாணுக்கள் ஒன்றோடொன்று இசைந்து ஸ்தூலரூபம் உண்டாகிறது. பரமாணுக்கள் இவ்விதம் அடர்ந்து இசையும்படி செய்யக்கூடிய ஓர் விசித்திர சக்தியை சம்யோக சக்தி அல்லது பிண்டீகர சக்தி (Cohesion) என உரைக்கலாம். அணுக்கள் ஒன்றுகூடிக் கலக்கும்போது அவைகளுக்கு இடையில் ஏற்றக் குறைச்சலான அந்தரம் அல்லது மத்தி ஸ்தலம் (Inter-space) ஏற்படலாம். சாதாரணமாய் அணுக்கள் அதிக இடை வெளி கொடாமல், நெருங்கி ஒன்று சேர்ந்துள்ள வஸ்துக்கள் கனமாயும், கொஞ்சம் தளர்ச்சியாய் இசைந்துள்ள பொருள்கள் பளுவற்றதாயும் தோன்றும்.

III. ஒவ்வொரு வஸ்துவின் பருமத்துக்குத் தகுந்தபடி அணுக்களின் சமூக அளவு ஏற்படுமென்று மேலே சொல்லப்பட்டதால் தெரியும். ஆகையால் ஒரு வஸ்துக்குள் மற்றொரு வஸ்து உட்சேல்லக்கூடாத தன்மை இயல்பாயுள்ளது. பொருளின் இக்குணத்தை அபேத்யத்துவம் (Impenetrability) எனச் சுருக்கமாய்ச் சொல்லலாம். இதற்கு சாமான்யமான உதாரணங்களை நாடோறும் பார்க்கலாம். சுவற்றுக்குள் ஆணி அடிக்கும்போது, கல், மண் அல்லது சுண்ணாம்பின் துணிக்கைகள் வெளிவருவதைக் காண்கிறோம். வாய் அகலமில்லாத ஓர் மைக்கூடை நேர்முகமாய் வைத்து அதற்குள் மையை ஊற்றினால், உள்ளே தாராளமாய் இறங்காமலிருப்பது அனுபவசித்தமே. ஓர் துடைப்பக்குச்சித்துண்டால் அதன் முகத்திலிருக்கும் மசியைக் கிளறினால், காற்றுக் குமிழிகள் கிளம்பி, மசி உள்ளிறங்குவதையும் காணலாம். இம்மாதிரியே, புனல் (Funnel) என்னும் குழலை எண்ணெய்ப் புட்டியின் முகத்தில் காற்றுப் புகாதபடி இறுக்கமாய் வைத்து எண்ணெயை ஊற்றினால், எண்ணெய் கீழ் இறங்குவது கஷ்டம். அதிகமாய் ஊற்றினால், வெளியில் கீழே வழியும். புனல் இறுக்கமாய் இல்லாவிட்டால், எண்ணெய் புட்டிக்குள் சுலபமாய் விழும், உள்ளிருக்கும் காற்றின் காரியமே இதற்கெல்லாம் காரணம்.

இயற்கை அற்புதங்கள்

(புதிய பதிப்பு)

இதில் மழைக்கால்கள், எரிமலைகள், பூகம்பம், வென்னீர் ஊற்றுகள், வால் நக்ஷத்திரங்கள், வானவில், எரி நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப்பற்றிய விவரங்கள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. காலஞ்சென்ற ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எல், வி. வில்லியம்ஸ் பிள்ளை அவர்களின் சிறந்த முகவுரையுடன் கூடியது. அநேகம் சித்திரப்படங்களும் கொண்டது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. விலை அணா 8

கல்லைக் கிள்ளிக் கை இழந்தது போலாம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் ஜி. ரத்தினம்பிள்ளை அவர்கள்,
பி. ஏ., எல். டி.



அன்புள்ள ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி

நமது அரசர் ஐந்தாம் ஜார்ஜ். அவர் இங்கிலண்டு தேசத்திலிருக்கிறார். அவருக்குப் பதிலாக நமது தேசத்தை ஆள்பவருக்கு ராஜப்பிரதிநிதி என்று பெயர்.

நமது அரசருக்கு முன், இங்கிலண்டில் "ஜார்ஜ்" என்று பெயருள்ள நான்கு ராஜாக்கள் அரசாட்சி செய்தபடியால் நமது ராஜாவுக்கு "ஐந்தாம் ஜார்ஜ்" என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர், முன் அரசுபுரிந்த ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தியின் இரண்டாவது பிள்ளை. மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியாரின் பேரன். ஜார்ஜ் மன்னருக்கு தமையன் ஒருவர் இருந்தார். அவர் பெயர் எட்வர்ட். இவர்களிடத்தில் விக்டோரியா மகாராணியாருக்குப் பிரியம் அதிகம்.

இவர்கள் சிறுபிள்ளைகளாக விருக்கும்போது, எட்வர்ட், தோட்டத்தில் பூஞ்செடிகளைப் பயிரிட்டு விக்டோரியா மகாராணியாருக்கு புஷ்பங்களைக் கொண்டுபோவது வழக்கம். ஆனால் நமது அரசரோ கீரை, காய், கிழங்குகளைப் பயிரிட்டு, அவைகளை விக்டோரியா மகாராணியாருக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதுண்டு. "நீ ஏன் புஷ்பங்களை கொண்டுவரவில்லை" என்று பாட்டியார் கேட்டதற்கு, "பாட்டி! புஷ்பங்கள் பார்ப்பதற்கு வெகு அழகாக விருக்கும், ஆனால் பசித்தால் அவைகளைச் சாப்பிட முடியா"தென்று சொன்னார். இதைக் கேட்ட ராணியார் மகிழ்ந்தார்.

நமது ராஜாவுக்கு மற்றொரு பாட்டியுண்டு. அப்பாட்டியார் டென்மார்க் தேசத்து ஆயிராணி. இப்பாட்டியாரிடத்திலும் ஜார்ஜ் அதிக அன்பாயிருந்தார்; அவளைப் பார்க்க அவர் அடிக்கடி டென்மார்க்குக்குப் போவதுண்டு. டென்மார்க்கு, சமுத்திரஞ் சூழ்ந்த தேசம். அத்தேசத்து ஜனங்களுக்கு சமுத்திரத்தின்மேல் பிரியம் அதிகம். அவ்விடத்தில்தான் ஜார்ஜுக்கும் சமுத்திரத்தின்மீது பிரியம் உண்டாயிற்று. அது முதற்கொண்டு, தான் மாலுமியாக இருக்க வேண்டுமென்ற ஆசை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வந்தது.

பன்னிரண்டு வயதானதும், இவரும் இவர் சகோதரரும் மாலுமி வேலையை கற்றுக்கொள்வதற்கு பிரிட்டானியா என்னும்சண்டைக் கப்பலில் மாணாக்கர்களாகச் சேர்ந்தார்கள். இவர்களை மற்ற மாணாக்கர்களைப்போலவே கப்பல் அதிகாரி நடத்தி வந்தார். ஜார்ஜ் கொஞ்ச காலத்திற்குள் மாலுமி வேலையை நன்றாய்க் கற்றுக் கொண்டு பேர்போன மாலுமியானார். இதனால்தான் இவருக்கு "மாலுமி ராஜா" என்ற மற்றொரு பெயருமுண்டு. மாலுமிக்கு வேண்டிய குணங்களெல்லாம் இவரிடத்தில் நன்கு பொருந்தி யிருக்கின்றன.

தமையனான எட்வர்ட் திடீரென்று நோய் கண்டு இறந்துபோக ஜார்ஜ் அரசவாழ்க்கைக்கு வேண்டியவைகளைப் பயிற்சி செய்வது அவசியமாயிற்று.

கொஞ்சகாலத்திற்குப் பிறகு இவருக்கு இங்கிலண்ட் அரசனுடைய மூத்த குமாரனுக்குரிய ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் என்கிற பட்டம் கிடைத்தது. முப்பதாவது வயதில் டியூக் ஆப் கென்ட் பிரபுவின் புத்திரியான நமது மகாராணி மேரியைக் மணஞ் செய்துகொண்டார்.

கலியாணமானதும் ஜார்ஜும் அவர் மனைவியும் இங்கிலீஷ் ராஜ்ய முழுமையும் பிரயா

மாகிய பெல்ஜியத்தின்மீது படையெடுத்தார்கள். அத்தேசத்தைக் காப்பாற்றும் பொருட்டும், துஷ்டர்களாகிய ஜெர்மானியர்களை நிக்ரத்து சிஷ்டபரிபாலனஞ் செய்யும்பொருட்கிணஞ்செய்து இந்தியாவுக்கும் வந்தார்கள். சென்ற இடங்களிலெல்லாம் இவர்களுக்கு ஜனங்கள் சிறப்புடன் நல்வரவளித்தார்கள்.

1910-ம் ௵ மேமாதத்தில் எட்வர்ட்சக்கரவர்த்தி இறந்துபோனார். ஜார்ஜ் இளவரசர் இங்கிலந்துக்கு ராஜனும், மேரி ராஜகுமாரி, ராணியுமானார்கள். இவர்களுடைய மகுடாபிஷேகம் இங்கிலந்திற்கு பிரதான பட்டணமாகிய லண்டன் மாநகரிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் ஆபி என்ற பெரிய மாதா கோவிலில் வெகு விமரிசையாக நடந்தேறியது. இக்காட்சியைக் காண அநேக தேசத்து ராஜாக்களும் பிரபுக்களும் போயிருந்தனர்.

ஜார்ஜ் மன்னருக்கு இந்திய குடிகளிடத்தில் அன்பு அதிகம். ஆகையால்தான் இதுவரையிலுள்ள வழக்கத்தை விட்டு, முடிசூட்டிக்கொள்ள இந்தியாவிற்கு மகாராணியுடன் விஜயஞ்செய்தார். 1911 ௵ டிசம்பர் ௴ 12 ௳ டில்லி மாநகரில் இந்திய சக்கரவர்த்தி என்று முடி சூட்டப்பட்டார். அந்த தினம் நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய நாள். தேசமெங்கும் ஒரே குதூகலமாக விருந்தது. அந்த தினத்தில் பட்டிக்காடுமுதல், பெரிய பட்டணம் வரையிலுள்ள எல்லா ஊர்களிலும் ஜனங்கள் கூடி ஒரு பெரிய திருநாள்போல் கொண்டாடினார்கள். அந்த தினத்தில்தான், பஞ்சபாண்டவர்கள் காலந்தொடங்கி, இந்தியாவிற்குத் தலைநகராக இருந்த டில்லி மறுபடியும் இந்தியாவிற்கு தலைநகரமாயிற்று. பிரிக்கப்பட்ட வங்காளம் மறுபடியும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டது. இந்தியர் ஆதாரப் படிப்பிற்காக 75 லட்சம் ரூபாய் சக்ரவர்த்தியவர்களால் கொடுக்கப்பட்டது. இந்தியாவில் இந்த தினத்தை கொண்டாடாதவர்களில்லை. சக்ரவர்த்தி சென்றவிடங்களிலல்லாம் சிறப்புடன் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பரிசு அளித்தனர்.

1914 ௵ ஆகஸ்டு ௴ 4 ௳ வெகு காலமாக சண்டைக்குத் தயார் செய்துகொண்டிருந்த துராசை பிடித்தஜெர்மானியர் தங்கள் வாக்குத் தவறி, ஐரோப்பாவிலுள்ள சிறுதேசமாகிய … டும் நமது சக்கரவர்த்தி, அவர்களோடு கடும் போர் புரிய தலைப்பட்டார். பிரான்சு, ருஷியா, இடாலி தேசத்து அதிபதிகளும், இன்னும் ஐரோப்பாவிலுள்ள அநேக சிற்றரசர்களும் நமது அரசரோடு சேர்ந்துகொண்டார்கள். ஐந்து வருஷம் ஐரோப்பாவில் நாம் இதுவரையில் கேட்டிராத மகாயுத்தம் நடந்தது ஜெர்மானியர் அநேக சூட்சிகள் செய்து ருஷியாவைக் கலைத்து அதோடு தனி சமாதானஞ் செய்துகொண்டார்கள். ஆகாய விமானங்களிற் பறந்து சென்று, இங்கிலாந்திலும் அதன் கூட்டாளி தேசங்களிலும் வெடிக்குண்டுகளை எறிந்து, அநேக அழகான கட்டிடங்களை இடித்தார்கள். சென்னப்பட்டணத்தையும் 1914 ௵ செப்டம்பர் மாதம் 23 ௳ இரவில் தாக்கினார்கள். தாங்கள் பிடித்த இடங்களில் ஜெர்மானியர் செய்த அக்கிரமங்கள் அநேகம். கோவில்களையும் பொருள் காட்சிசாலைகளையும் மற்றும் அழகான கட்டிடங்களையும் இடித்துப் பாழாக்கி, ஸ்திரீகளை மானபங்கப்படுத்தி, குழந்தைகளையும் இம்சை செய்தார்கள். அநேக பட்டணங்களை கொளுத்தினார்கள். ஜெர்மானியர் என்ன செய்தும் இங்கிலீஷ்காரர்களையும் அவர்கள் கூட்டாளிகளையும் ஜயிக்க முடியவில்லை. நாளுக்குநாள் தோல்வியுற்ற ஜெர்மானியர் சமாதானஞ் செய்துகொள்ள மன்றாடினார்கள். காருண்யமுள்ள நமது அரசரும்அவர் சிநேகிதர்களான கூட்டாளிதேசத்து அதிபதிகளும் பாம்பிற்குப் பல்லைப் பிடுங்குவதுபோல் ஜெர்மானியர் பலத்தை மிகக் குறைத்து அவர்கள் இனிமேல் சண்டை தொடுக்காவண்ணம் சமாதானம் செய்துக்கொண்டார்கள். இந்த மகாயுத்தம் நடக்கும் காலத்தில் தாய் தேசமாகிய இங்கிலாந்திற்கு இந்தியா, ஆஸ்டிரேலியா, நியூஜீலண்டு, கேப் காலனி, கனடா முதலிய தேசங்கள் சற்றும் பின்வாங்காமல் தங்களாலியன்ற வரையில் வேண்டிய ஒத்தாசை செய்து தாய் தேசத்தோடு கஷ்டப்பட்டன. இப்போது சமாதானம் ஆய்விட்டது. தாய் தேசத்தோடு சந்தோஷப்படுகின்றன. சமாதானக் கொண்டாட்டம் 1919 ௵ ஜூலை ௴ 19 ௳ யன்று எங்கும்விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னையில் அன்றைய தினம் நமது சக்கரவர்த்தியின் திருஉருவச்சிலை திறக்கப்பட்டது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள், பி ஏ.]

1. அருந்ததி

ஸ்வாயம்புவ மனுவிற்கும், சதரூபை யென்பவளுக்கும் புத்திரியான தேவஹூதியைக் கர்த்தம ப்ரஜாபதி விவாஹஞ்செய்தார். அவருக்கு மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமான கபில மஹர்ஷியும் கலை ச்ரத்தை ஹவிர்புக் கதா க்ரியை க்யாதி சாந்தி அனஸூயை அருந்ததீ முதலிய பெண்களும் பிறந்தார்கள். இவர்கள் முறையே, மரீசி அங்கிரஸ் புலஸ்த்யர் புலஹர் க்ரது பிருகு அதர்வ அத்ரி வஸிஷ்டரென்றவர்களுக்குப் பார்யைகளானார்கள்.

அருந்ததிக்கு ஊர்ஜையென்றும் அக்ஷமாலையென்றும்பெயர்களுண்டு. அவளுடையபுத்ரன் சக்தியென்ற மஹர்ஷி. ஒரு ஸமயத்தில் ஸப்தரிஷிகளையும் அருந்ததியையும் கொல்ல வந்த ஓர் துர்த்தேவதையிடத்தில் அவர்கள் தங்களுடைய பெயர்களுக்கு அர்த்தத்தைச சொல்லிக்கொண்டு வந்தபொழுது, அருந்ததி, "நான் என் பர்த்தாவின் மனஸை அனுஸரித்தவளாய், எல்லாவற்றையும் தாங்கிப் போஷிக்கும் பூமியில் அவரை அடுத்திருக்கிறேன். ஆகையால் எனக்கு அருந்ததி, அதாவது, பர்த்தாவின் இஷ்டத்தைத் தடுக்காதவளென்று பெயர் வந்தது. முதலில் அருந்தந்தீ யென்றிருந்து அதில் நகரங்கெட்டு அருந்ததீ யென்றாயிற்றெ"ன்று சொல்லியிருக்கிறாள்.

ஒரு காலத்தில் மஹாதேவன் பாலனைப் போல் வேஷமெடுத்து, ஆடையின்றித் திகம்பரராய், மஹர்ஷிகள் வஸிக்கும் ஆச்ரமங்களில் பிக்ஷையெடுத்தபொழுது, ரிஷிபத்னிகள் அவருடைய அழகைக் கண்டு மோஹித்து மனங்கலங்கிக் கற்பழிந்து நின்றார்கள். ஆனால் அருந்ததி ஒருத்தியே சிவபிரானால் மனோவிகாரங்கொள்ளாமல், தன் பதிவ்ரதா மஹிமையால் நிர்மலமான சித்தத்தையும் கலங்காத புத்தியையு முடையவளாய் விளங்கினாள்.

வேறொரு சமயத்தில் இந்திரன், அக்கினி ஸூர்யன் இம்மூவரும் அவளுடைய கற்பினைச் சோதிக்க நினைத்து அவளுடைய ஆச்ரமத்திற்கு வந்தார்கள். அப்பொழுது தண்ணீர் கொண்டுவருவதற்குக் குடம் எடுத்துச் சென்றுகொண்டிருக்கும் அருந்ததியைக் கண்டு, அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மஹிமையால் அக்குடத்தைக் காற்காற்பங்கு நீருள்ளதாகச் செய்ய, முக்காற்குடம் நீரால் நிறைந்ததைக் கண்டு, அவள் தன் கற்பினால் மற்றைக் காற்பங்கு நீரையும் நிரப்பிப் பூர்ணகுடமாக்கினாள்.

அக்கினிதேவன் ஸப்தரிஷிகளின் பார்யைகளிடத்தில் ஆசைகொண்டு வருந்துவதையறிந்த ஸ்வாஹாவென்ற அவனுடைய பத்னி "என் பர்த்தா என்னிடத்தில் கொஞ்சமேனும் பிரியம் வைப்பதில்லை. எனக்கோ அவரிடத்திலுள்ள ஆசைக்களவில்லை. ஆகையால் அவர் இப்பொழுது ஸப்தரிஷி பார்யைகளிடத்தில் கொண்டிருக்கும் ஆசையைக் காரணமாய் வைத்துக்கொண்டு என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வேனெ"ன்று நினைத்து, அங்கிரஸ் மஹரிஷியின் பார்யையான சிவாவென்பவளின் ரூபத்தை எடுத்துக்கொண்டு அக்கினியிடத்திற்குச் சென்று, "ஸ்வாமி! நீர் எங்களிடத்தில் வைத்திருக்கும் பிரியத்தை நாங்கள் உமது நடத்தையாலும் இன்னும் பல அடையாளங்களாலும் கண்டுகொண்டோம். எங்களுக்கும் உம்மிடத்தில் எல்லையற்ற பிரியமுண்டு. ஸ்திரீகளானதால் முதலில் அதை வெளியிட வெட்கப்பட்டுக்கொண்டிருந்தோம். உமது மனோபாவம் வெளிப்பட்டபடியால் நாங்களும் எங்களுடைய எண்ணத்தைத தெரிவிக்கத் துணிந்தோம். நான் முதலில் உம்மிடத்தில் அனுப்பப்பட்டிருக்கிறே"னென்றாள். இப்படியே ஆறு தடவைகளில் ஆறு ரிஷிபத்தினிகளின் ரூபத்தையெடுத்து அக்கினியிடத்தில் வந்தாள். ஆனால், அருந்ததியின் ரூபத்தை எடுக்க நினைத்தபொழுது அவளால் முடியவில்லை. வஸிஷ்ட பத்தினியின் பதிவ்ரதா மஹிமையென்ற நெருப்பினிடத்தில் ஸ்வாஹாதேவியின் கல்மஷமடைந்த மனஸ் நெருங்கமுடியவில்லை.

இப்பொழுதும், விவாஹ காலத்தில் பர்த்தா பார்யைக்கு த்ருவநக்ஷத்ரத்தைக் காட்டி, அதைப் பார்த்து, "நீ த்ருவமாய் ஸ்திரமாயிருக்கிறாய்; த்ருவமான ஸ்தானத்தை யுடைத்தாயிருக்கிறாய்; த்ருவமான உத்பத்தி ஸ்தா

கவி கொண்டார்க்குக் கீர்த்தி, அதைச் செவி கொள்ளார்க்கு அவகீர்த்தி.

னத்தை யுடைத்தாயிருக்கிறாய்; த்ருவமான ஸ்திதியிலேயே வேரூன்றியிருக்கிறாய். காளை மாடுகள் செக்கினுடைய நடுமரத்தைச் சுற்றி ஓடுவதுபோல், நக்ஷத்திரங்கள் உன்னைச் சுற்றி ஓடுகின்றன. என்னுடன் சண்டைசெய்யும் புருஷனிடத்திலிருந்து என்னை ரக்ஷிக்கக் கடவா"யென்ற மந்திரத்தைச்சொல்லுகிறான். பிறகு தன் பார்யைக்கு அருந்ததி நக்ஷத்திரத்தைக் காட்டி, "கிருத்திகைகளில் முதலான அருந்ததியை ஸப்தரிஷிகள் ஸ்திரமான தன்மையை அடையும்பொருட்டு நடத்திக்கொண்டுபோனதால், மற்ற ஆறு கிருத்திகைகளும் அவளுடன் பிரியமாய்ச் சேர்ந்து, அவளை ஆலிங்கனஞ் செய்துகொண் டிருக்கிறார்கள். இப்பொழுது என்னால் விவாஹஞ்செய்யப்பட்டிருக்கும் இந்த ஸ்த்ரீயும் ஸப்தரிஷிகளின் பார்யைகளான ஏழு பதிவ்ரதைகளுடன் எட்டாவதாய் விளங்கட்டு"மென்ற மந்திரத்தைச் சொல்லுகிறான். இதனால் பர்த்தா த்ருவனைப்போல் ஸ்திரமான மனஸையும் பிரியத்தையுமுடையவனா யிருக்கவேண்டுமென்றும், பார்யை அருந்ததியைப்போல் கற்பில் சிறந்தவளாயும் மஹாபதிவ்ரதையாயுமிருக்க வேண்டுமென்றும் பிரார்த்திப்பது வழக்கமென்று தெரிகிறது.

மேற்கண்டபடி ஸ்வாஹாதேவி தான் அருந்ததியின் ரூபத்தை எடுக்கமுடியாமற் போனபொழுது, "நீயே கற்புக்கரசி, உன்னையே பெண்கள் ஸ்துதித்து எல்லையற்ற கற்பையடையக்கடவ" ரென்று வரங்கொடுத்தாள். ஸ்ரீராமசந்திரனுடைய பார்யையை ராவணன் அபஹரித்து லங்கையில் அசோகவனத்தில் வைத்து, தன்னால் கூடியவரையில் அவள் தன்னிடத்தில் ஆசைகொள்ளவேண்டுமென்று மஹாப்பிரயத்தினங்களைச் செய்தும் பலிக்காமல் போனதைக் கண்டு வருந்தினான். அப்பொழுது அவனுடைய மந்திரியான மஹோதரன் "ஸ்வாமி! ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும்? ராமனுடைய ரூபத்தையெடுத்து ஸீதையை ஏமாற்றி வசப்படுத்தலாமே" யென்றான். அதற்கு ராவணன், "ஐயோ! அந்த விந்தையை என்ன சொல்வேன்! ராமனுடைய ரூபத்தை எடுக்கவேண்டுமென்று நினைத்தவுடனே, என் மனதில் ஓர்விதமான தெளிவும் தூய்மையும் சாந்தியும் உண்டாகின்றன. அப்பொழுது லோகத்திலுள்ள ஸ்த்ரீகள் யாவரும் என் ஸஹோதரிகளென்றும் ஸீதை லோகமாதாவென்றும் எனக்கு எண்ணமுண்டாகிற" தென்றான். ஏகபத்னீ வ்ரதனான ராமமூர்த்தியின் களங்கமற்ற அந்தக்கரணத்தின் மஹிமையாலும் நிகரற்ற கற்பாலும், அவரை எவ்விதமாயாவது ஸ்மரிப்பவர்களுக்கும் மனஸ் நிர்மலமாய் விஷய ஆசை ஒழிந்து சாந்தியும் சுத்தியும் உண்டாகின்றனவென்பது இதனால் விளங்குகிறது.

ஒரு சமயத்தில் ஸப்தரிஷிகளும் அருந்ததியும் வனத்தின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் பசிமேலிட்டு, ஓர் அழகிய தாமரைக் குளத்தைக் கண்டனர். அது நெருங்கின மரங்களால் மறைக்கப்பட்டு, நிரம்பித் தெளிந்திருக்கும் பரிசுத்தமான ஜலமுள்ளதாய், உதயகாலத்து ஸூர்யமண்டலத்தைப்போல் பிரகாசிக்கும் தாமரைமலர்களால் விளங்கி, வைடூர்யத்தைப்போன்ற தாமரை இலைகளால் மூடப்பட்டு, பலவகைப் பறவைகளால் எப்பொழுதும் நிறைந்து, மணல் பாய்ந்த சிறு துறைகளுடன் சேறில்லாமல், அதுவரையில் ஒருவராலும் உபயோகிக்கப் படாமலிருந்தது. அதைக் காத்துக்கொண்டிருந்த துர்தேவதைக்குத் தங்களுடைய பெயர்களின் தாத்பர்யத்தைச் சொல்லி, அவள் அதைத் தெரிந்துகொள்ளமுடியாமல் போனதால் அவளைச் சாம்பலாக்கி, அக்குளத்திலிறங்கி, வேண்டியவரையில் தாமரை மலர்களையும் தாமரைக் கிழங்குகளையும் பறித்துக் கரையில் வைத்துவிட்டு ஸ்நானம் ஸந்தியாவந்தனம் தர்ப்பணம் ஜபம் முதலிய நித்யகர்மங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். பிறகு கரையில் வந்து பார்க்கையில் அக்கிழங்குகளையும் மலர்களையும் காணவில்லை. அப்பொழுது ஒருவரிடத்தி லொருவர் ஸந்தேஹப்பட்டுக் கோரமான சபதஞ்செய்துகொண்டார்கள். அப்பொழுது அருந்ததி "தன் மாமியாரை எக்காலத்திலும் அவமதிப்பவளும் பர்த்தாவை வெறுப்பவளும் மதுரமான பதார்த்தங்களைப் பிறர்க்குக் கொடுக்காமல் தானே புஜிப்பவளும் பந்துக்களால் அழைக்கக்கூடாத ஸ்திதியிலிருப்பவளும் பொழுதுபோன பிறகு மாவைக் கரைத்து குடிக்கும்படி ஒருவருடைய ஆதரவுமில்லாமல் உணவுக்குக் கஷ்டப்படுகிறவளும்,

புருஷனை அனுபவிக்கத் தகாதவளும் சக்தியற்ற பிள்ளைகளைப் பெற்றவளும் செய்த மஹா பாபத்திற்கு இந்த தாமரைக் கிழங்குகளைத் திருடினவர் ஆளாகட்டு” மென்றான்.

வேறொரு சமயத்தில் ப்ரபாஸ தீர்த்தத்தில் ரிஷிகளெல்லோரும் சேர்ந்து புண்யதீர்த்த யாத்ரைசெய்ய நிச்சயித்தார்கள். அவர்களுடன் சிபி, திலீபன், நஹுஷன் முதலிய அரசர்களும் இந்திரனும் சென்றனர். ப்ரஹ்ம ஸரஸென்ற தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து தாமரை மலர்களையும் கிழங்குகளையும் எடுத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது அகஸ்தியருடைய கிழங்குகளும் மலர்களும் காணாமல்போனதைப் பார்த்து, அவர் “நான் உங்களிடத்தில் ஸந்தேஹிக்கிறே” னென்றார். அப்பொழுது அவர்கள் கொடிய சபதங்களைச் செய்தார்கள். அவர்களுக்குள் அருந்ததி மேற்கண்ட கதையில் சொன்னபடியே சபதஞ்செய்தாள்.

ஸப்தரிஷிகளுடன் ஸமமாய் எப்பொழுதும் ஸஞ்சரிக்கத்தகுந்த யோக்கியதையுள்ளவள், அவர்களுடைய பார்யைகளுக்குள் அருந்ததி ஒருத்தியேயென்று பல இதிஹாஸங்களால் விளங்குகிறது.

பவபூதி யென்ற மஹாகவியால் செய்யப்பட்ட உத்தரராமசரித மென்ற நாடகத்தில் ஸீதை அருந்ததியை நமஸ்கரித்து “ஸகல லோகங்களிலும் பரிசுத்தமான பதார்த்தங்களுக்கு நிதியைப்போன்றவர் வஸிஷ்ட மஹரிஷி ஒருவரே; லோகத்தில் குருக்களென்று விளங்குகிறவர்களுக்குள் வெகு புராதனமான குருக்களுக்கும் குருவாய் ஸர்வ ச்ரேஷ்டமாய் விளங்குகிறவர்; அப்படிப்பட்டவரும் தங்களாலேயே பரிசுத்தமானவராய் எண்ணிக்கொள்ளுகிறார். மூன்று லோகங்களுக்கும் பரமமங்களத்தைக்கொடுக்கக்கூடியவர்கள் தாங்களே. ஸகல லோகங்களாலும் வந்தனஞ் செய்யப்படத் தகுந்தவர்கள் தாங்களே. விடியற்காலையில் ஸூர்யபகவான் உதிப்பதற்குமுன் விளங்கும் உஷஸென்ற தேவியை நமஸ்கரிப்பதுபோல், தாங்களை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கிறேனெ”ன்று சொல்லுகிறாள். இப்படிச் சொல்லும் ஸீதையின் மஹிமை எப்படிப்பட்டதென்றால், அந்த அருந்ததியே “நீ வயஸில் சிறியவளானாலும் எனக்குச் சிஷ்யையானாலும் பாதகமில்லை; அதிருக்கட்டும். உன்னுடைய அந்தக்கரண சுத்தியும் கற்பும் எல்லையற்றது. எனக்கு உன்னிடத்தில் அளவற்ற பக்தி யுண்டாயிருப்பதற்கு அதே காரணம். ஸகல லோகங்களாலும் நீ பூஜிக்கப்படத் தகுந்தவளன்றோ? லோகத்தில் பூஜிப்பதற்குத் தகுந்த காரணம் உத்தம குணங்களைத் தவிர வேறுண்டோ? கேவலம் வயஸாலும் ஆண் பெண்ணென்ற பேதத்தாலும் என்ன ப்ரயோஜனமெ”ன்றிருக்கிறாள்.

ஒரு காலத்தில் ரிஷிகள் தேவர்கள் பிதருக்கள் அனைவரும் சேர்ந்து மனஸை அடக்கி, மஹாத்மாவான வஸிஷ்டருக்கு ஸமமான மஹிமையுள்ளவளும் ஒப்பற்ற தபஸைச் செய்தவளுமான அருந்ததியைப் பார்த்து “அம்மா! நாங்கள் தர்ம ஸூக்ஷ்மங்களை உன்னிடத்தில் கேட்க விரும்புகிறோம். உனக்கு எது வெகு ஸூக்ஷ்மமாகத் தோன்றுகிறதோ, அதைச் சொல்லவேண்டு” மென்று கேட்டார்கள். அருந்ததி “எனக்கு மேன்மையான தபஸ் கிடைத்திருப்பது உங்களை ஸ்மரிப்பதாலேயே. உங்கள் அனுக்கிரஹத்தால் அழியாத தர்மங்களை ஸூக்ஷ்மமான பாகங்களோடும் முக்யமான அம்சங்களோடும் சொல்வேன். ச்ரத்தையும் பரிசுத்தமான மனஸுமுள்ளவனுக்குத் தர்மரஹஸ்யங்களை உபதேசிக்கலாம். ச்ரத்தையில்லாதவனோடும் அஹங்காரமுள்ளவனோடும் ப்ரஹ்மஹத்யா செய்தவனோடும் ஆசார்யபத்னியிடம் கெட்ட சித்தத்துடனிருப்பவனோடும்பேசுவதால் மஹாபாபம் நேரும். இவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுதும் தர்மத்தைப்பற்றிப் பேசலாகாது. நாளுக்கொரு பசுவாகப் பன்னிரண்டு வருஷங்களாய்க் கபிலைப் பசுக்களைத் தானஞ் செய்கிறவனும் மாதந்தோறும் ஸத்ரயாகம் விடாமல் செய்பவனும் ஆனிமாதத்தில்புஷ்கரக்ஷேத்ரத்தில் லக்ஷம் கோதானம் செய்பவனும் அடையும் புண்யம் ஒரு அதிதியைத்திருப்திசெய்பவனுடைய புண்யத்திற்கு ஒப்பாகாதவை. இன்னுமொரு தர்மஸூக்ஷ்மத்தைச்சொல்லுகிறேன்; அது மனுஷ்யர்களுக்கு சுகத்தையும் அளவற்ற புண்யத்தையும் கொடுக்கும்; ச்ரத்தையுடன் செய்யத்தகுந்தது. காலையில் எழுந்து ஆஹாரம் செய்வதற்கு முன், தர்ப்பங்களையும் ஜலத்தையும் எடுத்துக்

கலவையைப்பற்றிக் கழுதையின் காலைப்பிடி.

கொண்டு, பசுக்களின் நடுவில் போய், ஜலத்தைத் தர்ப்பங்களால் அவற்றின் கொம்புகளில் தெளித்து, அந்தப் புண்யதீர்த்தத்தைத் தலையில் தரிக்கவேண்டும். மூன்று லோகங்களிலும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் மஹரிஷிகளாலும் அடையப்பட்ட புண்ய தீர்த்தங்களென்று பெயர்பெற்ற எல்லாவற்றிலும் ஸ்நாநம் செய்வதும், பசுக்களின் கொம்பிலிருந்து பெருகும் ஜலத்தின் ஒருதுளி தலையில் படுவதும் ஒரே பலத்தைக் கொடுக்குமென்''றாள். எல்லோரும் அதை ''நல்லது நல்ல'' தென்று கொண்டாடினார்கள். ஸகலப் பிராணிகளும் வெகு ஸந்தோஷத்துடன் அவளைப் பூஜித்தன. ப்ரஹ்மதேவர் ''மஹாநுபாவையே! என்ன ஆச்சர்யம்! உன்னால் சொல்லப்பட்ட தர்மம் வெகு ஸூக்ஷ்மமானது. பாக்யசாலியே! உன் தபஸ் எப்பொழுதும் வளரக்கடவ''தென்று வரங்கொடுத்தார்.

ஸீதை லங்கையில் அசோகவனத்தில் கோரமான ராக்ஷஸிகளின் நடுவில் அகப்பட்டுக்கொண்டு, அவர்களுடைய போதனைக்குட்படாமல், கண்ணீர் சொரிய, ''நீங்களெல்லோரும் சேர்ந்து சொல்லும் வார்த்தைகள் எனக்குக் கோரமாய்த் தோன்றுகின்றன. அது மஹாபாபமென்றும் ஸகல ஜந்துக்களும் நிந்திக்கத் தகுந்ததென்றும் உங்களுக்கு ஏன் தெரியவில்லை? மநுஷ்யஸ்த்ரீ ராக்ஷஸனுக்குப் பார்யையாவது யுக்தமா? உங்களுடைய இஷ்டப்படி என்னைத் தின்றுவிடுங்கள்; நீங்கள் சொன்னபடி செய்யமாட்டேன். ராமன் தரித்திரனாயிருந்தாலும், ராஜ்யமற்றவனாயிருந்தாலும் என் பர்த்தா; ஆகையால் என்னால் பூஜிக்கத் தகுந்தவர்; ச்ரேஷ்டர். ஸுவர்ச்சலாதேவி ஸூர்யனைப் பின்தொடர்வதுபோல் நானும் அவரிடத்தில் பிரீதியுற்று அவரைப் பின் தொடர்வேன். மஹாபாக்கியசாலியான சசீதேவி இந்திரனையும், அருந்ததீ வஸிஷ்டரையும், ரோஹிணீ சந்திரனையும், லோபாமுத்ரை அகஸ்திரையும், ஸுகன்யை ச்யவனரையும், ஸாவித்ரீ ஸத்யவானையும், மதயந்தீ ஸௌதாஸனையும், ஸ்ரீமதி கபிலரையும், கேசினீ ஸகரனையும், தமயந்தி நளனையும், இந்துமதீ அஜனையும், மஹாப்பிரேமையுடன் சேர்ந்திருப்பதுபோல், நானும் ரகுகுல ச்ரேஷ்டரான ராமனைப் பதியாயடைந்து ஸந்தோஷிக்கிறேனெ''ன்று சொல்லி, மஹா பதிவ்ரதைகளின் கோஷ்டியில் அருந்ததியைச் சேர்த்திருக்கிறாள்.

ஆதிகாலத்தில் கிருத்திகைகளென்று ஏழு நக்ஷத்திரங்கள் சேர்ந்த ஓர் வகுப்புண்டு. தைத்திரீய ப்ராஹ்மணத்தில் அவைகளுக்கு முறையே அம்பை, துலை, நிதத்னீ, அப்ரயந்தீ, மேகயந்தீ, வர்ஷயந்தீ, சுபுணிகாவென்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏகாக்னிகாண்டத்திலிருந்து முன்பு சொன்ன மந்திரத்தில் இவைகளில் ஒன்றிற்கு அருந்ததீயென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ப்ராஹ்மணம் முந்தினதா! அல்லது மந்திரத்தில் காணப்படும் பெயர் முந்தினதாவென்று நிச்சயிப்பது கஷ்டம். இந்த விஷயமாய் க்ரீஸ் தேசத்து மத கிரந்தங்களில் இதே கிருத்திகைகளைப்பற்றி அடியில் கண்ட கதை காணப்படுகிறது. அட்லாஸ் என்ற பர்வதராஜனுக்கும் ப்லியோனென்ற அப்ஸரஸிற்கும் ஏழு பெண்கள் பிறந்தார்கள். அவர்களைப் பகவான் ஆகாசத்தில் நக்ஷத்ர கணமாகச் செய்தார். மூன்றாவது வகுப்பு நக்ஷத்ரங்களில் ஒன்றான ஆல்கியோனென்றது இவைகளில் மிகுந்த தேஜஸுள்ளது. தூரதிருஷ்டிக் கண்ணாடியாலன்றி வெறும் கண்ணால் பார்க்கும் பொழுது ஆறு நக்ஷத்ரங்களே தெரியும். ஏழாவது நக்ஷத்ரதேவதையான பெண், மனுஷ்ய லோகத்திலுள்ள ஒருவனிடத்தில் ஆசைவைத்ததால் வெட்கமடைந்து தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறாளெ''ன்று புராதனகதை. இந்த நக்ஷத்ரத்தையே ஆர்யர்களும் அருந்ததீ யென்கிறார்கள். மஹாபதிவ்ரதையென்றும் மற்றவர்களுடைய கண்ணில் படுவதில்லையென்றும் சொல்வது பொருந்தியிருக்கிறது. ஆனால் தற்காலத்தில் இந்த நக்ஷத்ரம் ஸப்தரிஷி மண்டலத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மண்டலத்தின் வாலிலுள்ள நக்ஷத்ரங்களில் நடுவிலிருப்பது வஸிஷ்டரென்றும், அதற்குப் பக்கத்தில் ஸ்வல்ப ப்ரகாசத்துடன் விளங்குவது அருந்ததீயென்றும் எண்ணப்படுகிறது. வராஹமிஹிரரென்ற ஜ்யோதிஸ்தந்திர நிபுணர் பிருஹத்ஸம்ஹிதையில் இப்படிச் சொல்லியிருக்கிறாரென்று வாசஸ்பத்ய நிகண்டுவில் காணப்படுகிறது.

அருந்ததி தன் பர்த்தாவைக் குறித்து தபஸ்

செய்தபொழுது, நியமம் தவறிச் செய்ததால் அவளுக்கு ஸூக்ஷ்மமான ரூபம் கிடைத்ததென்று சொல்லுகிறார்கள் அந்த நக்ஷத்ரம் வஸிஷ்ட நக்ஷத்ரத்திற்கு முந்தின பாகத்தில் காணப்பட்டால் லோகத்திற்கு வெகு கஷ்டத்தையுண்டுபண்ணக்கூடிய சகுனங்கள் நேரும். அந்த நக்ஷத்ரம் எப்பொழுது ஒருவனுக்கு முற்றிலும் காணப்படாமலிருக்குமோ அப்பொழுது அவனுக்குச் சீக்கிரத்தில் மரணம் நேருமென்றறியலாம்

ஒரு சமயத்தில் ஸப்தரிஷிகள் ஆஹாரம் தேடுவதற்காக ஹிமாலயமலைக்குச் சென்றார்கள். அப்பொழுது அருந்ததியைத் தங்களுடைய ஆச்ரமத்தில் வைத்துவிட்டுப் போனார்கள். அவர்கள் அங்கே ஓர் பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு வேர்களையும் கிழங்குகளையும் சேகரித்துக்கொண்டிருக்கையில் பன்னிரண்டு வருஷப் பஞ்சமுண்டாயிற்று. அருந்ததி கடினமான தபஸை அனுஷ்டித்துக்கொண்டு காலத்தைக் கழித்தாள். ஒருநாள் பரம மங்களத்தைக் கொடுப்பவரும் ஸூர்ய சந்திர அக்னிகளை நேத்ரங்களாயுடையவருமான மஹாதேவன் அவளுடைய தபஸால் ஸந்தோஷமடைந்து, ப்ராஹ்மண வடிவம் கொண்டு அங்கே வந்து, "பவதி! பிக்ஷாம் தேஹி" யென்றார். அவள் ஸ்வாமி! இங்கிருந்த ஆஹார பதார்த்தங்கள் சிலவாயின. இந்த இலந்தைப்பழங்களைப் புஜிக்கலா"மென்றாள். மஹாதேவன் "அப்படியானால் அதைப் பக்குவம் செய்துகொடு" வென்றார். அப்பொழுது அருந்ததி அவைகளை ஓர் பாத்திரத்தில் வைத்துச் சமைத்துக்கொண்டிருக்கும்பொழுது மஹாதேவன் தர்மத்தையும் ஞானத்தையும் பக்தியையும் யோகத்தையும் உபதேசிக்கும் பல புண்ய கதைகளைச் சொல்லிக்கொண்டேயிருந்தார். இப்படி ஆஹாரமின்றி நித்திரையின்றி அதிதிக்காக இலந்தைப்பழங்களைச் சமைத்துக்கொண்டு புண்யகதைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அருந்ததிக்கு அந்தப் பன்னிரண்டு வருஷங்களும் ஓர் பகலைப்போல் கழிந்தன. பிறகு ஸப்தரிஷிகள் ஹிமாலயத்திலிருந்து ஆஹார பதார்த்தங்களுடன் திரும்பிவந்தார்கள். மஹாதேவன் "புண்யவதியே! முன்போல் இந்த ரிஷிகளை உபசரிக்கக் கடவாய். உன் தபஸாலும் நியமத்தாலும் உறுதியாலும் பக்தியாலும் மிகுந்த சந்தோஷத்தை யடைந்தே"னென்று தன் நிஜரூபத்தை எடுத்து, ரிஷிகளைப் பார்த்து "நீங்கள் ஹிமாலயத்தில் இந்தப் பன்னிரண்டு வருஷங்களாய்ச்செய்துவந்த தபஸின் மஹிமை, இந்த மஹாபதிவ்ரதை கடுமையான நியமங்களுடன் புண்ய கதைகளைக் கேட்டுக்கொண்டிருந்ததால் ஸம்பாதித்த மஹிமைக்கு ஈடாகாது. உத்தமியே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேளெ"ன்றார். அப்பொழுது அருந்ததி ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துத் தலைமேல் கைகூப்பி, "மஹாதேவ! தங்களுடைய அனுக்ரஹம் என்னிடத்திலிருந்தால் இந்த ஸ்தலம் பதரசனமென்ற புண்யதீர்த்தமாகக்கடவது (இலந்தைப்பழங்கள் சமையல் பண்ணப்பட்ட விடமென்று கருத்து). ஸித்தர்களும் தேவரிஷிகளும் இவ்விடத்தில் பிரியமாய் வஸிக்கட்டும். தேவதேவோத்தமா! இங்கே உபவாஸமிருந்து மூன்று ராத்ரிகள்வரையில் தபஸ் செய்கிறவனுக்குப் பன்னிரண்டு வருஷ உபவாஸத்தின் புண்யம் கிடைக்கட்டு"மென்று பிரார்த்தித்தாள். உடனே ஆகாசத்திலிருந்து தேவர்கள் "அப்படியே ஆகக்கடவ"தென்றார்கள். சப்தரிஷிகளால் கொண்டாடப்பட்டு மஹாதேவன் தன்னுலகம் சென்றார்.

மகாபுண்யஞ் செய்தவர்களின் ஆத்மாக்கள் காலமுள்ளவரையில் நக்ஷத்ரரூபிகளாய் ஆகாசத்தில் விளங்குகின்றனவென்று ஓர் கொள்கை நமது ஜனங்களுக்குள் வழங்குகிறது. அப்படியே கற்பாலும் ஆசாரத்தாலும் கடுந்தபஸாலும் ஸகல ஸ்த்ரீகளுக்கும் நாயகமாய், மஹா மஹிமையுள்ள ஸப்தர்ஷிகளாலும் கொண்டாடப்பட்டவளாய் விளங்கும் அருந்ததீதேவி, ஸப்தர்ஷிமண்டலத்தில் ஓர் நக்ஷத்ர தேவதையாய் எப்பொழுதும் ப்ரகாசித்துக்கொண்டு, கிருஹஸ்தாச்ரமத்தை அடையப்போகும் ஸ்த்ரீகளுக்கு வழிகாட்டியாயும் உவமைப்பொருளாயும் விளங்குகிறாள். நமது ஆர்யாவர்த்தப் பெண்மணிகள் யாவரும் அவளைப்போல் ஆகக்கடவார்கள்.

யுந்தச் சேலவு.—ஸமீபத்தில் முடிவடைந்த மகாயுத்த விஷயமாய் கிரேட் பிரிடனுக்கு நேர்ந்த செலவு எழுபது ஆயிர லட்சம் பவுன் என்று தெரிய வருகிறது.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

கல்விக்காக ஓர் கொடை

உகாண்டாவில் 15-வருஷகாலம் ஸப் அவிஸ்டெண்டு ஸர்ஜனாக இருந்த நாகபுர வாசியான ஸ்ரீமான் லாண்டே என்பவர்சிலநாள்களுக்குமுன் இறந்து போனார். இவர் இறப்பதற்கு 5-நாள்களுக்குமுன், இத்தேசத்திலும் ஆப்பிரிக்காவிலும் இருந்த ஸுமார் 55,000 ரூ மதிப்புள்ள தமது ஆஸ்தியில் பெரும்பாகத்தை கல்விக்காகவும் தருமத்திற்காகவும் செலவிடும்படி உயில் எழுதிவைத்துப்போனார். உகாண்டா நாட்டு சட்டப்படி, இறப்பதற்கு ஒருவருஷம் முன்னர் எழுதப்பட்டு, தகுந்த ஆள்களிடம் வைக்கப்படாத உயில் செல்லாது. ஸ்ரீமான் லாண்டே அவர்களுக்கு மனைவியரிருவரும், தாயாரும் இருக்கிறார்கள். இவர்கள் இந்த உயிலைப்பற்றி வழக்கிடின் அது செல்லாமற் போகும். ஆனால் இவர்கள், உயிலில் கண்ட கொடைகளைப் பற்றி ஒருவழக்கும் தொடராதிருப்பதாக விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இந்து மாதர் யூனிவர்ஸிடி பொறுப்பாளிகளே இந்த உயிலின் காரியகர்த்தர்களும். ஆகவே அவர்கள் கூடிய சீக்கிரத்தில் 15,000 ரூபாயும், பின்பு மொத்த ரூபாயும் கல்வியின் அபிவிருத்திக்காகக் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறார்கள்.

* * *

கம்பியில்லாத் தந்தியால் டெலிபோன்

கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த மார்கொனி கம்பெனியார் ஐர்லந்திலிருந்து கானடாவிற்கு கம்பியில்லாமலே டெலிபோன் செய்தார்களாம். இன்னும் கொஞ்ச காலத்திற்குள் ஒருவர் தம் சிநேகிதர்களுடன் எவ்வளவு தூரமானாலும் பேசி தங்கள் கார்யத்தை முடித்துக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு இது மிகவும் பிரயோசனமாயிருக்கும் என்று கூறுவது மிகையாகாது.

* * *

குழந்தைகளின் தேகசௌக்கியம்

நம் தேசத்தில் பிரஸவ காலத்தில் ஸ்திரீகள் படும் கஷ்டத்தையும், சிறுவயதிலேயே குழந்தைகள் மாள்வதையும் உத்தேசித்து, சிறு குழந்தைகளை வளர்த்தல் முதலியவைகளை விவரித்துக் காட்டும் காட்சி ஒன்று 1920௵ பிப்ரவரி மீ", லேடி செம்ஸ்போர்டு அவர்களுடைய ஆதரணையின் கீழ் டில்லியில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

* * *

வருமான வரிக் குள்ளாகும் தொகையைக் குறைத்தல்

கலாசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுடைய பெற்றோர்கள் செலுத்தும் வருமான வரியை குறைக்கவேண்டுமென்று இங்கிலாந்தில் கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் வருமானவரியைப் பற்றி விசாரிக்கும் ராயல் கமிஷனுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். 21-25 வயதுக்குட்பட்ட குமாரனாவது, குமாரியாவது படித்தால் ஒவ்வொரு நபருக்கும் மொத்த வருமானத்தில் 225 பவுன் தள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

* * *

கனம் கான் பஹதூர் ஹபிபுல்லா ஸாஹிப் பஹதூர்

கனம். பி. ராஜகோபாலாசாரியாரவர்கள் ஒரு வருஷம் ரஜா எடுத்துக்கொள்ள, நிர்வாக சபையில் ஓர் இடம் காலியாயிற்று. அதைப் பூர்த்தி செய்ய கனம் மிஸ்டர் ஹபிபுல்லா ஸாஹெப் அவர்களை கவர்னர் அவர்கள் நியமித்திருப்பது யாவருக்கும் ஸந்தோஷத்தைத்தரும். சில வருஷங்களாகநமது நிர்வாகசபையில் ஓர் இந்தியராவது இருத்தல் அவசியமென்பதை அறிந்து, இந்தியர்களை நிர்வாகசபையின் அங்கத்தினராக துரைத்தனத்தார் நியமிப்பது பாராட்டத்தக்கது. ஸ்ரீமான் ஹபிபுல்லா அவர்கள் நிர்வாக முறையில் மிகவும் பயிற்சியுள்ளவர். வெகுகாலமாக அவர் வேலூர் முனிஸிபாலிடியின் தலைவராக அவ்வூராரால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். தாலூகா போர்டு பிரஸிடெண்டாகவும், டிஸ்ட்ரிக்ட் போர்டு வைஸ் பிரஸிடெண்டாகவும், பிரஸிடெண்டாகவும் நியமிக்கப்பட்டு மிகவும் சிறப்புடன் வேலை செய்திருக்கிறார். நிர்வாக சபையிலும் ஸாஹெப் அவர்கள் கீர்த்தி அடைவாரென்று நம்புகிறோம்.

கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் அபயக் குரல் அன்றி அங்கொன்றும் இல்லை.

ஸ்ரீ கிருஷ்ணன் வேணுகானம்.
SRI KRISHNA PLAYING ON FLUTE.